Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.
30°C 28°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 260 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆடி 28, செவ்வாய் 13.08.2013

# தமிழர்களை ஒருபோதும் எவரும் அடக்க முடியாது

## சிங்கப்பூர் முன்னாள் பிரதமர் லீ குவான் யூ

லொஸ்ஏஞ்சல்ஸ்,ஓக.13
சிங்களவர்களால், தமிழர்களை ஒரு போதும் அடக்க முடியாது. அவர்கள் அடங்கிப் போகவும் மாட்டார்கள். சிங்களவர்களுக்குப் பயந்து ஓடி விடவும் மாட்டார்கள். அதிலும் யாழ்ப்பாணத் தமிழர்களை வெல்லவே முடியாது. அதனால்தான் அவர்களை நசுக்கி ஒடுக்க முனைகின்றார்கள் எனக் குறிப்



பிட்டுள்ள சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் லீ குவான் யூ, தமிழர்களுக்குத் தனி நாடே தீர்வாகும் எனவும் தெரிவித்துள்ளார்.
அத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் அவர் கடுமையாக விமர்சித்துள்ளார்.
'லீ குவான் யூவுடனான உரையாடல்கள் '' என்ற தலைப்பில் லொஸ் ஏஞ்சல்ஸைச் சேர்ந்த பேராசிரியர் ரொம் பிளேட் நூல் ஒன்றை எழுதியுள்ளார்.
இந்த நூலிலேயே 'சிங்கப்பூரின் நவீன சிற்பி' என்று அழைக்கப்படும். சிங்கப்பூரின் முதல் பிரதமரும் தற்போதைய பிரதமரின் தந்தையுமான லீ குவான் யூ மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தொடர்ச்சி: பக்கம் 21

# அரோகரா கோஷம் முழங்க நல்லூர்க் கந்தனுக்கு கொடி



யாழ்ப்பாணம், ஓக. 13
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நேற்று திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு திரண்டிருந்த அடியார்களின் அரோக்ரா கோஷத்தின் மத்தியில் கொடியேற்றம் இடம்பெற்றது.
அதிகாலை முதலே அடியார்கள் பல்வேறு பகுதிக

தொடர்ச்சி: பக்கம் 21

தமிழகமே தாக்குதல் இலக்கு 06
ஈரான் – சிப்பாப்வே இரகசிய ஒப்பந்தம் 07
இயன்பெல் மீண்டும் சதம் சரிவிலிருந்து மீண்டது இங்கிலாந்து 23

# போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை தேவை

## இடித்துரைக்கிறார் சொல்ஹெய்ம்

ஒஸ்லோ, ஓக. 13
இலங்கையில் நடைபெற்ற இறுதிப்போரின் போது, பல்லாயிரக் கணக்கான மனிதர்கள் இறந்து போயினர். அந்த அவலம் குறித்து அனைத்துலக சமூகம் கண்களை மூடிக்கொண்டிருந்த காலம் நீண்டு போயிற்று. போர் குற்றங்கள் இடம்பெற்றதான விவகாரம் குறித்து தட்டிக் கழித்துவிட முடியாது.
போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பாக உள்நாட்டில் நம்பத்தகுந்த செயற்பாடுகள் இல்லையெனில், அனைத்துலக மட்டத்தில் சர்வதேச சமூகம் தனது விசாரணையைத் தொடங்க வேண்டும்.
இவ்வாறு தெரிவித்திருக்கிறார் முன்னாள் இலங்கைக்கான சமாதானத் தூதுவரும் முன்னாள் நோர்வே அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம்.
'' கொழும்பு கசற்' செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.
இலங்கையில் போர் முடிவுற்று நான்கு ஆண்டுகள் கழிந்த நிலையிலும், அந்த நாட்டில் ஜனநாயகத்தை மீண்டும் நிலைநிறுத்த முடியாதிருப்பதற்குக் காரண காரியங்களைக் கூறிக்கொண்



டிருக்க முடியாது. அதனை ஏற்றுக்கொள்ளவும் கூடாது.
இம்மாதம் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இது குறித்து அந்நாட்டின் அரசுக்குப் பலமான இறுக்கமான செய்தி ஒன்றைக் கூறவேண்டும் –என்றும் எரிக் சொல்ஹெய்ம் கூறியுள்ளார்.
இலங்கையில் இடம்பெறும் காணாமற்போவோர் குறித்த விடயத்துக்கும் அரசு முடிவு காண வேண்டும்.
தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைவர் குறித்தும் விசாரணை நடத்தப்பட வேண்டும் அல்லது அவர்கள் விடுவிக்கப்படவேண்டும்.
இலங்கையில் தலைவிரித்தாடும் மத மிதவாதம் நசுக்கப்பட வேண்டும். பூரணமான ஊடக சுதந்திரம் நிலைநாட்டப்பட வேண்டும். நீதித்துறை முற்று முழுதான சுதந்திரத்துடன் இயங்க வேண்டும் – என்றும் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.
(அ-5)

# வெலிவேரிய அசம்பாவிதம்; ஜனாதிபதி ஆராய்வு

கொழும்பு, ஓக. 13
வெலிவேரியவில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று திங்கட்கிழமை விசேட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.
வெலிவேரியவில் சுத்தமான குடிதண்ணீர் கேட்டு

தொடர்ச்சி: பக்கம் 21

# வேட்பாளருக்கு அ.அட்டைகள்

யாழ்ப்பாணம், ஓக. 13
வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அடையாள அட்டைகளை இந்த வார இறுதியில் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் தேர்தல்கள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலில் வடமாகாணத்தில் 14 அரசியல் கட்சிகள் 29 சுயேச்சைக் குழுக்கள் சார்பில் 890 வேட்பாளர்

தொடர்ச்சி: பக்கம் 21

# இலங்கையுடன் நட்புறவையே விரும்புகின்றது அமெரிக்கா

## அமெ. விமானப் படைத்தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.13
இலங்கையுடன் நட்புறவை மேம்படுத்தவே அமெரிக்கா விரும்புகின்றது. இதற்கான ஒரு சந்தர்ப்பமாகவே யாழ். மாவட்டத்தில் 'பசுபிக் ஏஞ்சல்' நிகழ்ச்சித் திட்டத்தை இலங்கை விமானப் படையுடன் இணைந்து அமெரிக்க விமானப்படை முன்னெடுத்துள்ளது.
இவ்வாறு 'பசுபிக் ஏஞ்சல்' மிஷன் கொமாண்டர் டக்ளஸ் ஹூ டார்ட் தெரிவித்தார்.
'பசுபிக் ஏஞ்சல் நிகழ்ச்சித் திட்டம் பொதுமக்களுக்கு உதவி செய்வதுமட்டுமன்றி இலங்கையுடன் நட்புறவையும், ஒற்றுமையையும் ஏற்படுத்துவதும் எமது நோக்கமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.
அமெரிக்க – இலங்கை விமானப் படைகளின் 'பசுபிக் ஏஞ்சல்' நிகழ்ச்சித் திட்டத்தின் இறுதி நாள் நிகழ்வு அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.
இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அமெரிக்க தளபதி மேலும் தெரிவித்ததாவது;
எமது 'பசுபிக்ஏஞ்சல்' வேலைத் திட்டம் வெற்றிகரமாக நிறைவு



பெற்றுள்ளது. எமக்கு இலங்கையில் மிகச் சிறந்த வரவேற்பு கிடைத்துள்ளது.
இலங்கை விமானப்படையின் ஒத்துழைப்பும் இங்குள்ளவர்களின் ஒத்துழைப்பின் மூலமாகவும் நாம் பல வேலைத் திட்டத்தைச் சிறப்பாக முன்னெடுத்து

தொடர்ச்சி: பக்கம் 21

# வீடு வீடாகப் பிரசாரம் வேட்பாளர்களுக்கு தடை

யாழ்ப்பாணம், ஓக. 13
நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலின் போது வேட்பாளர்களோ அல்லது அவர்களின் உறவினர்களோ வீடு வீடாகச் சென்று தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபடக் கூடாதெனத் தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி: பக்கம் 21

# பள்ளிவாசல் பதாகையை அகற்றுவதற்கு முயற்சி

## குருநாகலில் பொலிஸ் – பொதுமக்கள் முறுகல்

கொழும்பு,ஓக.13
கண்டி – குருநாகல் பிரதான வீதியின் மாவத்தகம பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள இரு பள்ளிவாசல்களுக்கு முன்னால் அமைதியாகச் செல்லவும்' என்று போடப்பட்டுள்ள பதாகையைப் பொலிஸார் நேற்று முற்பகல் அகற்ற முற்பட்டதை அடுத்து கிராமவாசிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையில் கடும் முறுகல் ஏற்பட்டுள்ளது. இதனால்

தொடர்ச்சி: பக்கம் 21

# இலங்கைக் கடல் எல்லைக்குள் மீன்பிடிக்க சீனாவுக்கு அனுமதி

## உடன்படிக்கை கைச்சாத்து

கொழும்பு, ஓக.13

இலங்கை கடல் எல்லைக்குள் வந்து ட்றோலர்கள், படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடிக்கும் உரிமையை சீனாவுக்கு வழங்கும் உடன்படிக்கை ஒன்றில் அமைச்சர் ஒருவர் கையெழுத்திட்டுள்ளார். அதன் அடிப்படையில் எதிர்காலத்தில் சீனாவுக்கு சொந்தமான 40 மீன்பிடி கப்பல்கள் இலங்கை தேசியக் கொடியுடன் இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடியை ஆரம்பிக்கும் என்று அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீன நிறுவனம் பிடிக்கும் மீன்களில் 30 வீதம் சீன நிறுவனத்துக்கும், 10 வீதம் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்துக்கும், எஞ்சிய 60 வீதம் கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் உள்ள நிறுவனத்துக்கும் வழங்கப்படும் என்று உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னரும் உடன்படிக்கை ஒன்று கையெழுத்திடப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் இரண்டு சீனக் கப்பல்கள் இலங்கை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த போது, அவற்றைக் கைப்பற்றிய இலங்கை கடற்படையினர் சீனாவுக்கு அவற்றைத் திருப்பி அனுப்பி வைத்தனர். இந்தநிலையில் அமைச்சர் ஒருவர் சீனாவுக்கு சென்று, சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் பேச்சு நடத்திய பின்னர், இலங்கைக் கொடியுடன் மீன்பிடிக்கும் வகையில் புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் சீனாவின் ட்றோலர்கள் இலங்கை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுவது இலங்கையின் மீன்பிடித் தொழிலை கடுமையாகப் பாதிக்கச் செய்யும். அதற்கு எதிராக போராட்டங்கள் நடத்தப்படும் என்று இலங்கை மீன்பிடி சங்கங்கள் தெரிவித்துள்ளன. (ச)

# 'ஏற இறங்காத' நிலையில் இரண்டாவது 'லிப்ட்'டும்

## யாழ். ஆஸ்பத்திரியில் நோயாளர் அவதி

யாழ்ப்பாணம், ஓக.13

யாழ். போதனா வைத்திய சாலையிலுள்ள ஐந்து மாடிக் கட்டடத் தொகுதியின் இரண்டாவது 'லிப்ட்'டும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை செயலிழந்தது.

முதலாவது 'லிப்ட்' இரண்டு மாதங்களுக்கு முன்னர் செயலிழந்துவிட்ட போதும் இதுவரை அது திருத்தப்படவில்லை. தற்போது இரண்டு 'லிப்ட்'களும் செயலிழந்துள்ளமையால் நோயாளர்கள் மாடிகளுக்குச் செல்ல முடியாமல் அவதிப்படுகின்றனர்.

'லிப்ட்'டுகள் செயலிழந்தமை தொடர்பில் கொழும்பு மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டு இரண்டு மாதங்களாகின்ற போதும் மின்சார சபை இதுவரை எந்தத் திருத்தப் பணிகளிலும் ஈடுபடவில்லை என்று யாழ்.போதனா வைத்திய சாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்தார்.

குறித்த ஐந்து மாடிக் கட்டடத் தொகுதியில் நீண்டகாலமாக 'லிப்ட்' இல்லை. கடந்த சில மாதங்களுக்கு முன்னரே 'லிப்ட்' பொருத்தப்பட்டு இயங்கத் தொடங்கியது. ஒன்றரை வருட இழுபறியின் பின்னரே மின் சார சபை அதனைப் பொருத்தியது. குறித்த கட்டடத் தொகுதியில் நான்கு மாடிகளிலும் தலா இரண்டு மருத்துவ விடுதிகள் வீதம் 16 மருத்துவ விடுதிகள் இயங்குகின்றன.

குழந்தைகள் மருத்துவ விடுதி, சத்திரசிகிச்சை செய்யப்பட்டவர்கள் உள்ள விடுதி, பெண் நோயியல் விடுதி, புற்று நோய் விடுதி எனப் பல விடுதிகள் அங்கு உள்ளன.

அந்த விடுதிகளுக்கு நோயாளர்கள் செல்வதில் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர். நோயாளர்கள் அதிகமானோர் 'லிப்ட்'டுகளிலேயே மாடிகளிலுள்ள விடுதிகளுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். 'லிப்ட்' இரண்டும் பழுதடைந்துள்ளமையால் நோயாளர்கள் மாடிப்படிகளில் ஏறிச் செல்வதில் சிரமப்படுகின்றனர். நோயாளர்களைப் பார்வையிடச் செல்வோரும் மாடிப்படிகளில் சென்று வருவதால் தற்போது நெருக்கடி நிலவுகிறது.

அதிதீவிர சத்திரசிகிச்சைக் கூடத்தில் வைத்து சத்திரசிகிச்சை செய்யப்பட்ட நோயாளிகளைக் குறித்த விடுதிகளுக்குக் கொண்டுசெல்லும் பணியை முன்னரைப் போன்று வைத்தியசாலை ஊழியர்கள், தொண்டர்கள் மேற்கொள்கின்றனர். முன்னரைப் போன்று மாதக் கணக்கில் இழுத்தடிப்புச் செய்யாமல் விரைவில் 'லிப்டு'களைத் திருத்திப் பயன்பாட்டுக்கு விட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-4)

# 'பசுபிக் ஏஞ்சல்' மூலம் 3,505 பேர் நன்மை

யாழ்ப்பாணம், ஓக.11

அமெரிக்க விமானப்படையும், இலங்கை விமானப் படையும் இணைந்து முன்னெடுத்த 'பசுபிக் ஏஞ்சல்' நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 3 ஆயிரத்து 505 பேர் பயனடைந்துள்ளதுடன் 3 பாடசாலைகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை விமானப்படையும், அமெரிக்க விமானப் படையும் இணைந்து யாழ். மாவட்டத்தில் கடந்த 5 ஆம் திகதி முதல் 'பசுபிக் ஏஞ்சல்' நிகழ்ச்சி திட்டத்தை முன்னெடுத்திருந்தன. இதன் இறுதி நாள் நிகழ்வு அச்செழு சைவப் பிரகாச வித்தியாசாலையில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.




இந்த நிகழ்வில் வட மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் இலங்கை விமான படையின் எயார் வைஸ் மார்சல் ஜி.பி புளத்சிங்கள, வட மாகாண கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் டி.எம்.எஸ். திஸாநாயக்க, பிரிகேடியர் எஸ். அத்தப்பத்து, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் மற்றும் அமெரிக்கப் பாதுகாப்பு இணைப்பதிகாரி லெப்டினன்ட் கேணல் பற்றிக் சக்லர், மிஷன் கொமாண்டர் லெப்டினன்ட் கேணல் டக்ளஸ் வூட்டாட், இலங்கை மிஷன் கொமாண்டர் குறாப்கட்டன அமரசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

'பசுபிக் ஏஞ்சல்' நிகழ்ச்சித் திட்டத்தினூடாக 3 ஆயிரத்து 505 பேர் பயனடைந்துள்ளதுடன் 3 பாடசாலைகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

மருத்துவ முகாம், சிவில் பொறியியல் வேலைகள் ஆகியவற்றை மேற்கொண்ட அமெரிக்க படையினரும் நேற்றைய நிகழ்வில் கலந்து கொண்டனர். (த-5)

## இந்திய சுதந்திர தினக் கொண்டாட்டம் யாழ்ப்பாணத்திலும்

யாழ்ப்பாணம், ஓக.13

இந்தியாவின் 67 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை கொண்டாடப்படவுள்ளதாக இந்திய துணைத் தூதரகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இல -14 மருதடி வீதியிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணி முதல் 10 மணி வரை சுதந்திர தின நிகழ்வுகள் கொண்டாடப்படவுள்ளன. காலை 9 மணிக்கு இந்திய தேசியக் கொடியேற்றத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

இந்தியப் பிரஜைகள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தி நிகழ்வில் கலந்துகொள்ள முடியும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

## வயோதிபர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஓக.13

வயல் பார்க்கச் சென்ற வயோதிபர் மயானக் கிணற்றிலிருந்து நேற்றுத் திங்கள்கிழமை சடலமாக மீட்கப்பட்டார். நுணாவில் காந்தாளம்பிட்டி மயானக் கிணற்றிலிருந்தே இவர் சடலமாக மீட்கப்பட்டார். நுணாவிலைச் சேர்ந்த வல்லிபுரம் சின்னத்துரை (வயது-85) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். சாவகச்சேரி பொலிஸாரால் சடலம் மீட்கப்பட்டது. சாவகச்சேரி பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளையின் உத்தரவுக்கமைய யாழ். போதனா வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டது. அது உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-4-9)

# வாகனப் பாதுகாப்புக் கட்டணங்கள் நல்லூரில் இரட்டிப்பாக உயர்வு

## மாநகர சபை மௌனம் ஏன்?

யாழ்ப்பாணம், ஓக.13

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சுற்றாடலில் அமைந்துள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் பாதுகாப்புக் கட்டணம் இரு மடங்காக அதிகரித்துள்ளது. மோட்டார் சைக்கிளுக்கு 20 ரூபாவும், சைக்கிளுக்கு 10 ரூபாவும் அறவிடப்படுகின்றது. இதுகுறித்து அதிருப்தி அடைந்துள்ள அடியார்கள் கட்டண அதிகரிப்பு குறித்து மாநகர சபை மௌனம் காப்பது ஏன் என்ற கேள்வியை எழுப்பியுள்ளார்கள்.


நல்லூர்க் கந்தனின் வருடாந்தப் பெருவிழா திங்கள்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறவுள்ளது. மேற்படி ஆலயத்துக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் மோட்டார் சைக்கிள்களிலும், சைக்கிள்களிலும் வருகிறார்கள்.

அடியார்களின் நலன்கருதி மாநகர சபையின் அனுமதியுடன் ஆலயச் சுற்றாடலில் பல சைக்கிள் பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த வருடம் பாதுகாப்புக் கட்டணமாக சைக்கிளுக்கு 5 ரூபாவும், மோட்டார் சைக்கிளுக்கு 10 ரூபாவுமாக அறவிடப்பட்டது. ஆனால் இந்த வருடம் இரு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. சைக்கிளுக்கு 10 ரூபாவும், மோட்டார் சைக்கிளுக்கு 20 ரூபாவும் அறவிடப்படுகின்றது. பாதுகாப்புக் கட்டண அதிகரிப்புக் குறித்து அதிருப்தியடைந்துள்ள அடியார்கள் இது சம்பந்தமாக மாநகர சபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரியுள்ளனர். (த-115)






## நல்லூர்க் கந்தனுக்கு அரோகரா, முருகப் பெருமானுக்கு அரோகரா.....!



நல்லூர்க் கந்தனின் கொடியேற்றத்தைக் காண்பதற்காக முண்டியடிக்கும் அடியார் கூட்டமும் அங்கப்பிரதட்சணத்தில் ஈடுபட்டுள்ள அடியார்களும். (ஒ-7-20-21-86)



நல்லூரில் நேற்று மாலைப் பொழுதில் சுவாமி வீதியுலா.... (ஒ-7)

## வடக்கின் வசந்தம் வீசியதில் மின்னொளி பெற்ற 6 கிராமங்கள்

யாழ்ப்பாணம், ஓக.13

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 7 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் 6 கிராமங்களுக்கு கடந்த வாரம் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதால் 1,500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைந்துள்ளனர்.

குடாநாட்டில் மீளக்குடியமர்வு செய்யப்பட்ட கிராமங்களுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் கடந்த வாரம் 6 கிராமங்களுக்கு மின்சாரம் விநியோகிக்கப்பட்டுள்ளது. மீளக்குடியமர்வின் பின்னர் வீதித் திருத்தப் பணிகள் மற்றும் வீட்டுத் திருத்தப் பணிகள் காரணமாக மின்சாரம் கிடைக்கப்பெறாத 6 கிராமங்களுக்கு மின் ஒளி கிடைக்கப் பெற்றுள்ளது.

வடக்கின் வசந்தம் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 7 கோடி ரூபா நிதியில் மின் இணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பூம்புகார், செல்வநகர், ஊரி, சூரியாவத்தை, நெடுங்குளம், செட்டிப்புலம் ஆகிய 6 கிராமங்களைச் சேர்ந்த 1500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நன்மையடையக் கூடியதாக மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது. (வ-14)

## தென்மராட்சியில் டெங்கு காய்ச்சல் கண்காணிப்பு நடவடிக்கை தீவிரம்

தென்மராட்சி, ஓக. 13



தென்மராட்சிப் பிரதேசத்தில் வெளிநாடுகளிலிருந்து வருகை தந்த இருவர் உட்பட நால்வருக்கு டெங்கு நோய் ஏற்பட்டுள்ளதென்பது பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொடிகாமம் வெள்ளாம் போக்கட்டிப் பகுதிக்கு லண்டனிலிருந்து வருகைதந்த இருவருக்கும், சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு பிரிவில் இருவருக்கும் டெங்கு நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

பரிசோதனை அறிக்கைகள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வழங்கப்பட்டதையடுத்து அந்தப் பகுதிகளில் சுகாதார உத்தியோகத்தர்களால் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் தென்மராட்சி பிரதேசத்தில் கடும் மழை பெய்ததையடுத்து குடியிருப்புகள், காணிகள் போன்றவற்றில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகாமல் தடுக் கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (வ-9)

## அல்லாரை மக்களுக்கு இலவச மருத்துவ சோதனை

தென்மராட்சி, ஓக. 13



அல்லாரைப் பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாம் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவுள்ளது.

பரிசோதனை முகாமில் கண், நீரிழிவு, இரத்த அழுத்தம், வாய்ப்புற்று, பொது மருத்துவம் ஆகிய பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளதால் பிரதேச மக்களைக் கலந்து கொள்ளுமாறு கழகத் தலைவர் லயன் பி.தளிர்ராஜ் அறிவித்துள்ளார்.(ஒ-9)

## மொழி உரிமைமீறல் குறித்து

# மனித உரிமை ஆணைக்குழுவில் உடனடியாக முறையிடவும்

### மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 13

பொலிஸ் நிலையங்களில் மொழி உரிமை மீறப்பட்டால் அது தொடர்பாக மனித உரிமை ஆணைக் குழுவிடம் உடனடியாக முறைப்பாடு செய்யுமாறு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் குறித்த நிலையம் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களில் கூடுதலாக மொழி உரிமை மீறப்படுவதாக இனங்காணப்பட்டுள்ளது. எனினும் மொழி உரிமைமீறல் தொடர்பில் பாதிக்கப்படும் நபர்கள் முறைப்பாடுகளை வழங்காத காரணத்தால் அதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது உள்ளது.

> "இருமொழி சார்ந்தவர்களும் கடமைக்கு அமர்த்தப்பட வேண் டியுள்ளது. குறிப்பாக முறைப் பாடுகளை பதிவு செய்வோர் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் உரையாடக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

இந்த நிலையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் பிரதேசங்களில் தமிழ்மொழி உரிமை மீறல்களும் சிங்களப் பிரதேசங்களில் சிங்கள மொழி உரிமை மீறல்களும் இடம் பெறுகின்றன.

குறிப்பாக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் வழங்கப்படும்போது முறைப்பாடுகளை எந்த மொழியில் பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் தெரிவிப்பது, அவர்கள் முறைப்பாட்டை எவ்வாறு விளங்கிக் கொண்டு பதிவுகளை மேற்கொள்கின்றனர் என்பது முறைப்பாட்டுக்காரர்களுக்கு விளங்காத நிலை உள்ளது.

இதனால் பொலிஸ் நிலையங்களில் இருமொழி சார்ந்தவர்களும் கடமைக்கு அமர்த்தப்பட வேண்டியுள்ளது. குறிப்பாக முறைப்பாடுகளை பதிவுசெய்வோர் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் உரையாடக்கூடியவராக இருத்தல் வேண்டும். எனினும் இந்த நிலை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெரிய பிரச்சினையாக உள்ளது.

மொழி உரிமை மீறல் தொடர்பில் பாதிக்கப்படுகின்ற நபர் முறைப்பாடுகளை வழங்க முன்வரவேண்டும். தாம் சார்ந்த பிரதேசத்தில் உள்ள மனித உரிமை ஆணைக் குழு விடம் சென்று மொழி உரிமை மீறப்பட்டுள்ளமை தொடர்பில் முறைப்பாடுகளை வழங்குமாறு தெரிவித்துள்ளது. (வ-14)

## உள்ளூராட்சிச் சபை அலுவலர்களுக்கு இடர் முகாமைத்துவ பயிற்சி

யாழ்ப்பாணம், ஓக.13

யாழ்ப்பாண மாவட்ட செயலக இடர்முகாமைத்துவ இணைப்பு உள்ளூராட்சி சபை உத்தியோகத்தர்களுக்கான இடர் முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு எதிர்வரும் 16 ஆம் திகதி மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

செயலமர்வுக்கு உள்ளூராட்சிச் சபைகளில் கடமையாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பிரதேச சுகாதார உதவியாளர்கள், வேலை மேற்பார்வையாளர்கள் ஆகியோரை கலந்துகொள்ளுமாறு மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (வ-9)

# அடிக்கடி தடைப்படும் மின்சாரம் விசனம் தெரிவிக்கும் பொதுமக்கள்

கொழும்புத்துறை, ஒக. 13

யாழ்.மாவட்டத்தில் மின்சார விநியோகம் சீரின்மையால் பல்வேறு செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்ற னர்.

கடந்த சில வாரங்களாக தினமும் மின்தடை அறிவிக்கப் படாத நேரங்களில் குறிப்பாக காலை மற்றும் மாலை வேளைகளில் திடீரென மின்சாரம் தடைப்படுகிறது.

இதனால் தற்போது பரீட்சை எழுதிக்கொண்டிருக்கும் உயர் தர வகுப்பு மாணவர்கள், அடுத்த வாரம் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் கல்வி கற்கும் பிரதான நேரமான காலை, மாலை வேளைகளில் ஏற்படும் மின்சாரத் தடையால் பரீட்சைக்குத் தயார்படுத்துவதில் பெரிதும் பாதிக்கப்படுவதாக மாணவரும் பெற்றோரும் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்.குடாநாட்டுக்கு ஜெனரேற்றர் மூலம் சில பகுதிகளுக்கும் லக்ஸபான மின் விநியோகத்தின் மூலம் சில பகுதிகளுக்கும் மின்சாரம் விநி யோகிக்கப்படுகிறது. பெரும்பாலும் லக்ஸபான மின்சாரமே அடிக்கடி தடைப் படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பகல் வேளைகளில் திருத்த வேலைகள் காரணமாக மின்சாரம் நிறுத்தப்படுகின்றது என்றால் காலையும், மாலையும் இவ்வாறு நடைபெறுவதற்கு என்ன காரணமென கேள்வி எழுப்பப்படுகிறது. மாணவர்களின் கல்வி மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு குறிப்பிட்ட நேரங்களில் மின்தடை ஏற்படுவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்படுகிறது. (வ-135)

## விற்பனைக்கு

போட்டோகொப்பி, லமினேற்றிங், ஸ்கானிங், பக்ஸ் மெசின்கள், Defreezer மற்றும் கடைக்குரிய அலுமினிய சோக்கேஸ், எலக்ரோனிக் தராசு, இறாக்கைகள் என்பன உடன் விற்பனைக்கு உண்டு.

தொ.பே:- 0718977711

## கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரரின் நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை

புதியவரவு சல்வார் 1200/= தொடக்கம்,

கொட்டன் சாறி 440/= தொடக்கம்

ஆண்களுக்கான சேட் 390/= தொடக்கம்,

இந்தியன் றொப் 400/= தொடக்கம்.

இன்னும் பல விதமான ஆடைகளையும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள



114, நாவலர் றோட், யாழ்ப்பாணம். T.P:- 021 2219393

# பச்சிலைப் பள்ளியில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஒக. 13

ஆள்பதிவுத் திணைக்களமும் கபே அமைப்பும் இணைந்து நடத்தும் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான நட மாடும் சேவை எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 16 வயதுக்கு மேற்பட்டவர்கள் புதிய, தொலைந்த மற்றும் திருத்தத்துக்கான தேசிய அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

குறித்த நடமாடும் சேவையில் புகைப்படம், முத்திரைகள், பொலிஸ் அறிக்கை போன்றவை இலவசமாக வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

(வ-14)

# விழிப்புணர்வுச் சுவரொட்டிகள் நல்லூர் ஆலயச் சூழலில்




யாழ்ப்பாணம், ஒக. 13

திருவிழாக் காலத்தில் ஆலயச் சுற்றாடலில் மது பாவனை மற்றும் சிகரெட் பாவனையைத் தடுக்கும் நோக்குடன் விழிப்புணர்வுச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா நேற்று கொடியேற் றத்துடன் ஆரம்பமாகியுள்ள நிலையில் ஆலயத்தின் புனிதத்தைப் பேணுவதற்காக சோஷலிச இளைஞர் சங் கத்தால் குறித்த விழிப்புணர்வுச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

ஆலயச் சூழலில் அமைக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையங்களில் குறிப்பாக மது பாவனை மற்றும் சிகரெட் பாவனையைத் தவிர்க்கும் வகையில் விழிப்புணர்வுச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

ஆலய சுற்றாடலில் இத்தகைய செயல்களைத் தவிர்த்து ஆலயத்தின் புனிதத்தைப் பேணுமாறு இந்து அமைப்புகள் தெரிவித்துள்ளன. (வ-14-8)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு. தவராசா தெய்வீகன் அவர்களின் அன்புத் தந்தை

**அருணாச்சலம் தவராசா**

அவர்கள் காலமானதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/தாதியர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம்.

## காணவில்லை

செல்வன்

**கருணாநிதி நிலக்ஸன்**



விழுந்தாலடி கரணவாய் மத்தி, கரவெட்டியைச் சேர்ந்த கருணாநிதி நிலக்ஸன் 10.08.2013 தொடக்கம் காணாமல் போயுள்ளார். வயது - 13, நீலநிறக் காற்சட்டை, மெல்லிய நீல நிற சேட் அணிந்த நிலையில் காணவில்லை. இவரைக் கண்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

முகவரி: 16ஆம் கட்டை, விழுந்தாலடி,
கரணவாய் மத்தி, கரவெட்டி.
தொ.பே.இல: 077 1710 790

(31276)
(10,16,11)

10 August 2013 அன்று கொழும்பு BMICH இல் நடைபெற்ற

பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு

NORTH LANKA IIT

வழங்கும் அரிய சந்தர்ப்பம்!

SRI LANKAN UGC APPROVED CERTIFICATE!

Business University - Costa Rica

50% Scholarship!

நீங்களும் கணினிப் பட்டதாரியாகுங்கள்!

* B.Sc. in Comp. Sc.

Qualification:- HND or O/L or A/L

Duration:- 1 - 3 Years

* M.Sc.

Duration:- 01 Year

* MBA

Special Batch!

கல்வியியற் கல்லூரி மற்றும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான விசேட பிரிவு!

சலுகைக் கட்டணத்தில் ....

பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெற்ற மாணவர்களுக்கு North Lanka IIT இனது வாழ்த்துக்கள்!

#113, Luxan Plaza, Navalar Road, Jaffna.

Tel: 0215677774 Mob: 0777592666

# வருமானம் குறைந்த பிரதேச சபைக்கு உதவி

வடமாகாணத்தில் வருமானம் குறைந்த நிலையில் இயங்கும் பிரதேச சபையின் அபிவிருத்திப் பணிகளுக்கென மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தால் தலா 15 மில்லியன் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

குறித்த நிதியை பிரதேசத்தில் வீதி அபிவிருத்தி பஸ் நிலையக் கட்டடம், பொதுச் சந்தை போன்றவற்றை மட்டும் அமைக்கப் பயன்படுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

(வ-9)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின்
சமுர்த்தி மகா சங்க பணிப்பாளர்
இராயப்பு அன்ரனி மற்றும்
அலுவலக உதவியாளர்
இராயப்பு ஸ்ரெனிஸ்லாஸ்
ஆகியோரின் அன்புத் தந்தை

**டெனிஸ் இராயப்பு**



அவர்கள் 09.08.2013 அன்று இறைபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம்,
பருத்தித்துறை.

பிரதேச செயலரும்,
அனைத்து ஊழியர்களும்.

(c/11144)(3.8.11)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
5.8.1916

மறைவு
13.8.2010

அமரர் திருமதி

**தங்கரத்தினம் கந்தசாமி**

(உடுவில் பகுதி முன்னாள் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளரும், அதிபருமான அமரர் அ.கந்தசாமி அவர்களின் பிரியபத்தினி)

அன்னையே எங்கள் வாழ்வின் அணையாத
மணிவிளக்கே!
துன்பமே அணுகா வண்ணம் துணை நின்ற
ஒளிப்பிழம்பே!
தன்னலம் ஏதுமின்றித் திசைகாட்டி வாழ்ந்த தாயே!
என்றும் எம் வாழ்வில் உங்கள் நினைவுகள் நீங்காதம்மா!

சிவை, உடுவில் மேற்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

### வன்னியில் இயங்கும் பாடசாலைகளில்

# ஆரம்பப் பிரிவு வகுப்புக்களை பிரித்து அடிப்படை வசதியற்ற இடங்களில்

## இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஓக. 13

வன்னியிலுள்ள தரம் ஒன்று தொடக்கம் தரம் 13 வரையான வகுப்புக்களையுடைய பாடசாலைகளிலிருந்து ஆரம்பப் பிரிவு வகுப்புக்களைப் பிரித்து வேறாக்கி தகுந்த அடிப்படை வசதிகள் இல்லாத இடத்தில் இயக்கும் நடவடிக்கைக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

அவ்வாறு பிரித்து வேறாக்கப்படுவது நிறுத்துதல் வேண்டும். அல்லது உரிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த பின்னர் வகுப்புக்களை பிரித்து நடத்த வேண்டும் என சங்கம் கோரியுள்ளது.

இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளதாவது;

தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்புக்களையுடைய பாடசாலைகளே ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படுகின்றன. அந்த வகையைச் சேர்ந்த பாடசாலைகளே தற்போது அதிகமாக அபிவிருத்திக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. தரம் ஒன்று தொடக்கம் 13 வரையான பாடசாலைகளை இதனுள் உள்ளடக்க முடியாது. அதனாலேயே இத்தகைய பாடசாலைகளில் ஆரம்பப்பிரிவு வகுப்புக்களான தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரையான வகுப்புக்களை பிரித்து வேறாக்கி தனியான இடத்தில் ஆரம்பிக்கப்படுகிறது.

அந்த இடங்களில் மாணவர்களுக்கான குடிதண்ணீர் வசதிகள், மலசலகூட வசதிகள் ஏற்பாடு செய்து கொடுக்கப்படவில்லை. தற்காலிக கொட்டகைகளிலேயே அந்த வகுப்புக்கள் இயங்கி வருகின்றன.

அதனால் கொளுத்தும் வெயிலில் மர நிழல்களில் இன்று வன்னியில் உள்ள பல பாடசாலைகளில் சிறாா்கள் கல்வி கற்க நேரிட்டுள்ளது. கற்றலுக்கு ஏற்ற சூழ்நிலையில்லாத நிலையிலேயே அந்தச் சிறார்கள் கற்கிறார்கள், கற்பிக்கப்படுகிறார்கள். இந்த நிலை அந்தச் சிறார்களை மோசமான சூழ்நிலைக்கு இட்டுச் செல்ல வழிவகுக்கும். எனவே பிரிக்கப்பட்டுள்ள , தற்போது எந்தவித வசதியுமில்லாத இடத்தில் இயங்கும் ஆரம்பப் பாடசாலைகளுக்கு உரிய அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தல் வேண்டும். அல்லது முன்னையது போன்று அவ்வாறு பிரிக்கப்படாது ஒரே பாடசாலையாக இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சங்கம் கோரியுள்ளது.

யாழ். மாவட்டத்திலும் சில பாடசாலைகளுடன் தொடர்பு கொண்டு ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தில் இணைந்து ஆரம்பப் பிரிவை வேறாக்குமாறு கோரப்பட்ட போதும் அந்தப் பாடசாலை அதிபர்கள் அதற்கு இடம் கொடுக்கவில்லை என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-4)

கொடியேற்றத்தன்று மாலையில் வீதியுலா



### கந்தனருள் நிறையவென வாழ்த்துவோம்

நல்லூரான் திருவிழாவை காண வாரீர்
நலம்பெறு வாழ்வுதனை வேண்ட வாரீர்
எழிலோன் கந்தனை தரிசிக்க வாரீர்
எல்லையிலா ஆனந்தம் கொள்ள வாரீர்
அல்லலிடும் துன்பங்களை சொல்ல வாரீர்
அவையறக் கதியருள் கேட்க வாரீர்
வெள்ளையுளப் பக்தியுடன் கும்பிட வாரீர்
மற்றவர்க்கு தொல்லையிடாப் புத்தியோடு வாரீர்
செல்வக்குமரன் புகழ்பாடிப் பூரித்து வாரீர்
செந்தமிழ்க் கலாசாரம் பேணி வாரீர்
அழகுமேவு ஒப்பனைகள் அற்று வாரீர்
ஆபரணத் தோரணங்கள் அணியாது வாரீர்
அழகனருள் கிட்டிடவே நோன்புற்று வாரீர்
கும்பிட்டால் அருள்வான் குகனென்று வாரீர்
அலங்காரன் உற்சவத்தை கண்டு களித்தே
கந்தனருள் நிறையவென வாழ்த்தித் துதிப்பீர்

*அல்வாயூர் சி.சிவநேசன்,*

### கந்தனின் அருட்காட்சி காண வாரீர்

நாதமும் மேளமும் தாளத்தோடிணையும்
நல்லூரான் மணியோசை நாற்றிசையும் கேட்கும்
சீதமதிக்குடைக்கீழ் அகம் சிங்காரம் காணும்
சிந்தையிலே வந்தமர்வான் சிவனாரின் மைந்தன்
மாதிருவர் சூழவரும் மாரனிவனாக
மயூரன் மனம் கனிந்தருள மயிலேறி வருவான்
ஆதாரம் இவனென்றே அடியார் பதம் பற்ற
அழகுக் கந்தனின் அருட்காட்சி காண!

*தேவி.கணேஸ்*

### கந்தனைப் பாடுவோம்

(கீர்த்தனை)

இராகம்- ஹம்சத்வனி தாளம்- ஆதி

பல்லவி
நல்லைக் கந்தனைப் பாடுவோம் - நாளும்
நல்லருள் பெற்றிடவே பக்தியுடன் யாம்
(நல்லை)

அனுபல்லவி
துன்பமெல்லாம் போக்குவான் - தூய
நன்மனதாயெமைக் காத்தருளும் எங்கள்
(நல்லை)

சரணம்
நானில நனி சிறப்பு ஓங்கியதான நல்லை
பாவலரும் பண்டிதரும் பாடிய வள நல்லூர்
தேன் கமழு திருச்செவ்வேள் செங்கமலபாதம்
அடிபோற்றியருள் வேண்டிட பரவசமாகவே
(நல்லை)

*சுபாஷினி பிரணவன்*

## தென்மராட்சி சந்தைகளில் பனாட்டு

### ஒரு தட்டு 5 ரூபா

தென்மராட்சி, ஓக.13

பனாட்டு 'சீஸன்' ஆரம்பித்துள்ளதையடுத்து தென்மராட்சி பிரதேச சந்தைகளில் பெருமளவு பனாட்டுத் தட்டுக்கள்விற்பனைக்குக்கொண்டு வரப்படுகின்றன. சுற்றுலாப் பயணிகள்பனாட்டை விரும்பி கொள்வனவு செய்வதால் ஒரு தட்டு பனாட்டு 5 ரூபாவாகவும் கிலோ 180 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது. (வ-9)

## சிறுதானியச் செய்கையில் நாட்டமில்லை

யாழ்ப்பாணம், ஓக.13

யாழ்.குடாநாட்டில் சிறுதானியப் பயிர்ச் செய்கையில் விவசாயிகள் இம்முறை அதிக ஆர்வம் காட்டவில்லை என்று விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

குரக்கன் செய்கையில் விவசாயிகளை அதிகமாக ஈடுபடுத்துவதற்கு விவசாயத் திணைக்களம் முயற்சிகளை மேற்கொண்டது.

இதற்கென 'அசௌத' என்ற நல்லின குரக்கன் விதைகளை விவசாயிகளுக்கு மானிய விலையில் பெற்று வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும் இந்தச் செய்கையில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டவில்லை என அவர் தெரிவித்தார். (வ-17)

### யாழ்.நூலகத்துக்கு தென்னிலங்கையர் படையெடுப்பு



பாடசாலை விடுமுறை காலம் என்பதால் தென்னிலங்கையைச் சேர்ந்த மாணவர்கள் அவர்களுடைய பெற்றோருடனும் பாடசாலைகளின் ஏற்பாட்டிலும் யாழ்.குடாநாட்டுக்குச் சுற்றுலாவை மேற்கொண்டுள்ளனர். யாழ்.நகர் வரும் தென்னிலங்கை மாணவர்கள் மற்றும் மக்கள் யாழ்.பொது நூலத்துக்கும் படையெடுத்து வருகின்றனர். (ஒ-21)

# மழையை அடுத்து குடாநாட்டில் காலபோகச் செய்கை ஆரம்பம்

அச்சுவேலி, ஓக.13

யாழ்.மாவட்டத்தில் சகல பகுதிகளிலும் கடந்த சில தினங்களாக கணிசமான அளவு மழை பெய்துள்ளதால் காலபோக நெல் விதைப்புக்கு வயல் நிலங்களை பண்படுத்தி சீர் செய்யும் பணியில் விவசாயிகள் ஆர்வத்தோடு ஈடுபட்டுள்ளனர்.

ஈரப்பதனைப் பயன்படுத்தி யாழ். மாவட்ட மரபுவழி நெல்லினங்களான மொட்டைக் கறுப்பன் மற்றும் பச்சைப் பெருமாள் இன நெல்லினங்களை விதைப்பதற்கு இவர்கள் தயாராகி வருகின்றனர்.

இந்த வருடம் 12 ஆயிரம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. வயல் நிலங்களை முன்கூட்டியே பண்படுத்தி தயார் செய்வதற்கு ஏற்ற முறையில் இந்த வருடம் ஜூன், ஜூலை ஆகிய மாதங்களில் மழை பெய்யவில்லை.

இதனால் காத்திருந்த யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு தற்போது பெய்துள்ள மழை அரிய வாய்ப்பாக அமைந்துள்ளது. கடந்த வருடம் யாழ்.மாவட்டத்தில் நெற்செய்கை 11,096 ஹெக்ரேயர் நிலப் பரப்பில் மேற்கொள்ளப்பட்டது.

இதில் கணிசமான அளவு நெற் செய்கை காலநிலை முரண்பாட்டாலும் மழை வெள்ளத்தாலும் சேதமடைந்தது. இந்த வருடம் 12 ஆயிரம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்பயிர் செய்கை மேற்கொள்வதற்கென விவசாயத் திணைக்களம் உத்தேச மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளது. (வ-11-135)



# தமிழகமே தாக்குதல் இலக்கு

## எச்சரிக்கிறது இந்திய புலனாய்வுத் துறை

புதுடில்லி, ஓக.13

இந்திய சுதந்திர தினத்தன்று தமிழகத்தின் முக்கிய நகரங்களில் தாக்குதல் நடத்துவதற்கு தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர் என்று இந்திய மத்திய புலனாய்வுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தான் பகுதியில் உள்ள தீவிரவாத அமைப்புகளிடையே இடம்பெற்ற உரையாடல் பதிவுகளின் அடிப்படையிலேயே இந்த எச்சரிக்கை விடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.



இந்திய மத்திய புலனாய்வுத்துறை சமர்ப்பித்துள்ள அறிக்கையில், ''தமிழகத்தின் முக்கிய நகரங்களில் மக்கள் அதிகம் கூடும் பகுதிகளான விமான நிலையங்கள், பஸ் நிலையங்கள் போன்ற பகுதிகளில் தாக்குதல் நடத்துவதற்குத் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர். பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ளதீவிரவாத அமைப்புகளின் உரையாடல் பதிவுகளில் இருந்தே இந்தத் தகவல்கள் பெறப்பட்டுள்ளன. குறிப்பிட்ட பகுதிகளுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழக அரசுக்கு அறிவுறுத்தியுள்ளோம்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதையடுத்து தமிழகம் முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக மத்திய மற்றும் மாநில அரச அலுவலகங்களுக்குக் கூடுதலாகப் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகின்றது என்று தமிழகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

## 100 கிலோ இட்டலி

### கின்னஸ் சாதனை முயற்சி



சென்னை, ஓக.13

100 கிலோ எடையுடைய இட்டலி ஒன்றைத் தயாரித்து கின்னஸ் சாதனைக்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் இந்தியாவின் கொடுங்கையூரைச் சேர்ந்த சமையற்காரர் ஒருவர்.

கொடுங்கையூரைச் சேர்ந்த இனியவன் என்பவர் திருமணம் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு சமையல் செய்து வருகின்றார். இவர் கின்னஸ் சாதனைக்காக கடந்த ஆண்டு தலா 50 கிலோ எடைகொண்ட 2 இட்லிகளைத் தயாரித்திருந்தார். இந்நிலையில் தற்போது 100 கிலோ எடையுள்ள ஒரு இட்லியை இனியவன் தயாரித்தார். அதனைப் பார்க்க ஏராளமான பொதுமக்கள் கூடினர். அவர் தயாரித்து வைத்த இராட்சத இட்லியை பார்த்து அனைவரும் பிரமித்து நின்றனர். (ற)

## காஷ்மீரில் மீண்டும் வன்முறை



புதுடில்லி, ஓக. 13

காஷ்மீர் மாநிலம் கீஷ்த்வாரில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஏற்பட்ட இரு தரப்பு மோதல் கலவரமாக வெடித்தது. அதில் இருவர் உயிரிழந்தனர்.

இந்நிலையில் கீஷ்த்வாரில் நேற்று மீண்டும் கலவரம் மூண்டது. அதில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அதையடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. (ற)


## காஷ்மீர் ஆட்சியை கலைக்க வேண்டும்

ஸ்ரீநகர், ஓக.13

ஜம்மு காஷ்மீரில் உமர் அப்துல்லா தலைமையிலான ஆட்சியை நீக்கி விட்டுக் குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டுவர வேண்டும்என்று பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவர் மாயாவதி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், ''கிஷ்த்வார் கலவரத்துக்கு கண்டனம் தெரிவித்த மாயாவதி, ஜம்மு காஷ்மீரில் உடனடியாக அரசைக் கலைத்து விட்டு குடியரசுத் தலைவர் ஆட்சியை நடைமுறைப்படுத்த வேண்டும்'' என்று தெரிவித்தார். (ற)




முற்றுமுழுதாக இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட பிரித்வி-2 என்ற ஏவுகணைச் சோதனை நேற்று வெற்றிகரமாக நடத்தப்பட்டது என்று இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற் றும் மேம்பாட்டு அமைப்பு அறிவித்துள்ளது. ஒரிசா மாநிலம் பாலசோர் கடற்கரையில் நேற்றுக் காலை 9:15 மணிக்கு இந்தச் சோதனை நடத்தப்பட்டது. 350 கிலோ மீற்றர் தூரம் வரை சென்று எதிரிகளின் இலக்கை தாக்கக்கூடிய வகையில் பிரித்வி-2 ஏவுகணை வடிவமைக்கப்பட்டுள்ளது. (ற-14)

## ஊடுருவலைத் தடுக்க அரசு நடவடிக்கை

### நாராயணசாமி கூறுகின்றார்

புதுடில்லி, ஓக.13



இந்திய எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்தின் ஊடுருவலை தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுத்து வருகின்றது என்று பிரதமர் அலுவலக இணை அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்..

சென்னையில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:-

''போர் மூளுவதற்கு இந்தியா காரணமாக இருந்து விடக்கூடாது என்பதாலேயே அமைதி காத்து வருகின்றோம். எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்தினரின் அத்துமீறல்களைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இந்திய மத்திய அரசு மேற்கொண்டு வருகின்றது.

இந்தப்பிரச்சினையை பா.ஜ.க. அரசியல் ஆக்குகின்றது. பா.ஜ.க. ஆட்சியின் போது எல்லைப்பகுதிகளில் நடைபெற்ற ஊடுருவல்களை விடவும், தற்போது பாகிஸ்தானின் அத்துமீறல்கள் குறைவாகவே உள்ளன'' என்றார். (ற)

## இந்திய விமானந் தாங்கியின் முதற்கட்டக் கட்டுமானம் முடிவு

புதுடில்லி, ஓக.13

இந்தியாவின் உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட ஐ.என்.எஸ். விக்ரந்த் விமாணம் தாங்கி போர்க்கப்பல் கட்டுமானத்தின் இரண்டாம் கட்ட பணிகளுக்கான தொடக்க விழா நேற்று கொச்சியில் இடம்பெற்றது.

260 மீற்றர் நீளம் கொண்ட இந்தக் கப்பலில் 2 விமான ஓடுதளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வானில் பறக்கும் இலக்குகளை தரையிலிருந்து தாக்கவல்ல ஏவுகணைகளும் பொருத்தப்படும் வண்ணம் குறித்த கப்பல் வடிவமைக்கப்பட்டு வருகின்றது. 37 ஆயிரத்து 500 தொன் எடை கொண்ட இந்தக் கப்பலின் முதற்கட்ட கட்டுமானப் பணிகள் 2009ஆம் ஆண்டு ஆரம்பமாகின.

தற்போது கப்பலின் வெளிப்புற கட்டுமானம் மற்றும் பிறகட்டுமானப் பணிகளுக்காக ஐ.என்.எஸ். விக்ராந்த் வேறு தளத்திற்கு மாற்றப்படுகிறது.

அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்சைத் தொடர்ந்து விமானம் தாங்கி போர்க்கப்பலை தயாரிக்கும் ஐந்தாவது நாடாக இந்தியா இணைந்துள்ளது. இந்த போர்க் கப்பலின் முழுக்கட்டுமான பணிகளும் முடிவடைந்து, 2018ஆம் ஆண்டு லது இந்திய கடற்படையில் சேர்க்கப்படும். (ற)



## தமிழகத்தை பின்பற்றினால் முன்னேறலாம்

### ஆந்திரா அரசுக்கு நரேந்திர மோடி அறிவுரை

ஹைதராபாத், ஓக.13

ஆந்திராவில் குஜராத் அரசை பின்பற்றிப் நடக்காவிட்டாலும் பரவாயில்லை, தமிழகத்தை பின்பற்றி நடந்து கொண்டாலே ஆந்திரா வளர்ச்சிப் பாதையை நோக்கி பயணிக்கும் என்று தெரிவித்துள்ளார் குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி.

ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பா.ஜ.க. பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே மோடி இவ்வாறு தெரிவித்தார்.



அங்கு அவர் மேலும் கூறிய [illegible] காங்கிரஸ் அரசால் ஆந்திர மாநிலம் சீர்குலைந்து கிடக்கிறது. ஆந்திராவில் காங்கிரஸ் ஆட்சி தொடங்கியதில் இருந்து, எந்தவிதமான வளர்ச்சித் திட்டங்களும் அங்கு நடைபெறவில்லை. ஒரு மாநிலத்தில் எந்த அளவுக்கு வளர்ச்சித் திட்டங் கள் செயல்படுத்தப்படுகி றதோ, அந்தளவுக்கு இளைய தலைமுறையினர் பயன் பெறுவார்கள்.

அந்த வகையில் குஜராத் அரசு வளர்ச்சித் திட்டங்களை நல்லவிதமாக செயல்படுத்தி, இளைய தலைமுறையினர் பயன்பெற திட்ட அறிக்கைகளை செயல்படுத்தி வருகிறது. சீர்குலைந்து கிடக்கும் ஆந்திராவை ஒளிர செய்ய, குஜராத் அரசை ஆந்திர மாநிலம் பின்பற்றா விட்டாலும் பரவாயில்லை, அண்டை மாநிலமான தமிழகத்தில் நடைபெற்று வரும் ஆட்சியில், அந்த மாநில முதல்வர் ஜெயலலிதா எடுக்கும் வளர்ச்சித் திட்டங்களை பின்பற்றினாலே போதும், ஆந்திர மாநிலம் முன்னிலை வகிக்கத் தொடங்கி விடும்.

ஜெயலலிதா, மிகத் தைரியமாக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புத் தருவதற்கான அனைத்து வளர்ச்சித் திட்ட முடிவுகளையும் செயல்படுத்தி வருகிறார். இந்த விஷயத்தில் ஆந்திர அரசு, தமிழ்நாட்டு அரசைப் பின்பற்றி நடக்கலாம்'' என்று தெரிவித்தார். (ற)

## ஓரினச் சேர்க்கை தம்பதியருக்கு சலுகைகள்

### பென்டகன் அறிவிப்பு



வோஷிங்டன், ஓக.13
அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன், தமது இராணுவத்தில் பணிபுரியும் ஓரின சேர்க்கைத் தம்பதிகளுக்கு பிற இராணுவ வீரர்களுக்கு வழங்கும் அனைத்து சலுகைகளையும் வழங்குவதற்கு முடிவு செய்துள்ளது.
அதற்கான உத்தியோக பூர்வ அறிவிப்பு இம்மாத இறுதியில் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இதுவரைகாலமும் அமெரிக்க இராணுவத்தில் ஓரின சேர்க்கையாளர்கள் திருமணம் செய்து கொள்ளாமல் அரச சலுகைகளை பெற்று வந்தனர்.
தற்போது இந்த சலுகைகளை நிறுத்த பென்டகன் நிர்வாகம் முடிவு செய்துள்ளது. திருமணம் செய்து கொள்ளாமல் ஓரின சேர்க்கையாளர்கள் சேர்ந்து வாழ்ந்தால் அவர்களுக்கு சலுகைகள் வழங்க முடியாது என்று பென்டகன் அறிவித்தது.
ஓரின சேர்க்கையாளர்கள் சட்ட ரீதியாக திருமணம் செய்து கொண்டால் மாத்திரமே அவர்களுக்கு அனைத்து சலுகைகளும் கிடைக்கும். அதில் ஓரின சேர்க்கை தம்பதிக்கு குடியிருக்க வீடு, மருத்துவ காப்பீடு உள்ளிட்ட அனைத்தும் வழங்கப்படும். மற்றைய தம்பதிக்கு வழங்கப்படுவதைப் போலவே இவர்களுக்கும் 10 நாள்கள் தேனிலவு விடுமுறைகளும் உண்டு என்றும் கூறப்பட்டுள்ளது.
இராணுவத்தில் திருமணம் செய்து கொண்ட ஓரின சேர்க்கை தம்பதிகளுக்கும் சலுகைகள் நீட்டிக்கப்பட வேண்டும் என்று அண்மையில் அமெரிக்க உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடுத்தே இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று இராணு அதிகாரிகள் தெரிவித்தனர். (ற)



இந்தோனேசியாவின் தனிம்பார் தீவில் உள்ள சாம்லேகியில் நேற்றுக் காலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. கடலுக்கடியில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.5 ஆக பதிவாகியுள்ளது. இதனால் அந்த பகுதியில் உள்ள கட்டிடங்கள் குலுங்கின. கடலுக்கடியில் நிலநடுக்கம் ஏற்பட்ட போதும் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை. இந்த அனர்த்தத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல் எதுவும் வெளியாகவில்லை. (ற)

## ஈராக் தாக்குதலுக்கு அமெரிக்கா கண்டனம்

நியூயோர்க், ஓக.13
முஸ்லிம்களின் புனித நோன்பு பெருநாள் அன்று ஈராக்கில் நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.
நோன்புப் பெருநாள் அன்று ஈராக்கில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்களில் 80க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்திருந்தனர்.
அதுகுறித்துக் கடும் கண்டனம் வெளியிட்டுள்ள அமெரிக்கா, புனித நோன்பு பெருநாள் கொண்டாட்டங்களின் போது நடத்தப்பட்ட இந்த தாக்குதல்கள் ஈராக் மற்றும் சர்வதேச சமூகத்தின் எதிரிகளால் மேற்கொள்ளப்பட்டவை. இந்த தாக்குதல்கள் அல்-குவைதா இயக்கத்தின் அடையாளச் சின்னங்கள் என்று தெரிவித்துள்ளது. (ற)

# ஈரான் - சிப்பாப்வே இரகசிய ஒப்பந்தம்

## போட்டுடைத்தது 'டைம்ஸ்'

லண்டன், ஓக. 13
ஈரானுக்கு அணு ஆயுதம் தயாரிக்க உதவும் மூலப்பொருளான யுரேனியத்தை வழங்குவது தொடர்பாக சிம்பாப்வே இரகசிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டுள்ளது என்று லண்டனில் இருந்து வெளிவரும் ''டைம்ஸ்' பரபரப்புத் தகவல் வெளியிட்டுள்ளது.
இதுகுறித்து அந்தப் பத்திரிகை வெளியிட்டுள்ள தகவலில் சிம்பாப்வே சுரங்கத்துறை துணை அமைச்சர் கிப்ட் சிமானிகிரே இதை உறுதிப்படுத்தினார் என்றும் கூறப்பட்டுள்ளது.

### அமைச்சர் சாட்சி

''ஈரானியர்களுக்கு யுரேனியத்தை ஏற்றுமதி செய்வதற்கான ஒப்பந்த நகலை நான் பார்த்தேன். இந்த ஒப்பந்தம் எனக்குத் தெரியாமலேயே உருவாக்கப்பட்டுள்ளது. அரசின் மேல் நிலையில் இருப்பவர்களுக்கு மட்டுமே அது குறித்துத் தெரியும்'' என்று கிப்ட் சிமானிகிரே தெரிவித்தார் என்றும் அந்தப் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

### நெருக்கடி

இரு நாடுகளுக்கும் இடையிலான இந்த ஒப்பந்தம் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. இந்த ஒப்பந்தம் தொடர்பான தகவல்கள் உண்மையாக இருப்பின் ஈரான், சிம்பாப்வே ஆகிய நாடுகள் கடும் நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும்.
சர்வதேச அணு ஆயுதப் பரவல் தடைச் சட்டத்தில் ஈரான் பல ஆண்டுகளுக்கு முன்னர் கையெழுத்திட்டது. அதற்காக சர்வதேச நாடுகளிடம் இருந்து ஏராளமான நிதியுதவிகளைப் பெற்றது.
தற்போது ஈரான் அணு ஆயுதம் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்று அமெரிக்காவும், ஐரோப்பிய யூனியனும் குற்றம் சாட்டிவருவதுடன், அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளையும் விதித்துள்ளன.
இந்தநிலையிலேயே சர்வதேசத் தடைகளை மீறி ஈரானுக்கு யுரேனியத்தை விற்க சிம்பாப்வே இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது என்று டைம்ஸ் பத்திரிகைதகவல்வெளியிட்டுள்ளது.

### ஈரானுக்கு ஆதரவு

சிம்பாப்வேயில் கடந்த மாதம் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றன என்ற குற்றச்சாட்டுக்கு மத்தியில் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாபதி முகாபே மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவானார். அவர் ஈரானின் அணுசக்தித் திட்டங்களை வெளிப்படையாக ஆதரித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## உட்டோர் சூறாவளியால் மீனவர்கள் பலர் மாயம்

### பிலிப்பைன்சில் சோகம்

மணிலா, ஓக.13
பிலிப்பைன்ஸ்சின் வட பிராந்தியத்தை தாக்கிய 'உட்டோர்' சூறாவளி காரணமாக மீனவர்கள் பலர் காணாமல் போயுள்ளனர்.
மணித்தியாலத்திற்கு 200 கிலோமீற்றர் வேகத்தில் இந்தச் சூறாவளி தாக்கியது. அதில் குறைந்தது 23 மீனவர்கள் காணாமல் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
அந்தப் பிராந்தியத்தின் சில பகுதிகளில் மின்கம்பிகள் அறுந்து வீழ்ந்துள்ளதுடன், படகு சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அதனால் ஆயிரக்கணக்கான பயணிகள் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.
தற்போது வடபிராந்தியத்தில் தொடர்ந்தும் நிலை கொண்டிருக்கும் இந்த சூறாவளி, இன்று தென்



சீனாவின் ஊடாக தென் சீனக் கடற்பரப்பை நோக்கி நகரும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.
சூறாவளியைத் தொடர்ந்து பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் கடும் மழை பெய்து வருகின்றது. அதையடுத்து பாட சாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளன. (ற)

## சாவேஸின் கல்லறையில் படுத்துறங்கும் மதுரோ

கராக்கஸ், ஓக்.13
வெனிசுவேலாவின் முன்னாள் ஜனாதிபதி சாவேஸின் கல்லறையில் தாம் சிலசமயம் படுத்து உறங்குவதுண்டு என்று தற்போதைய வெனிசுவேலா ஜனாதிபதி மதுரோ தெரிவித்துள்ளார்.
வெனிசுவேலாவின் ஜனாதிபதியாக பதவி வகித்து வந்த ஹ்யூகோ சாவேஸ் கடந்த மார்ச் மாதம் புற்றுநோய் காரணமாக உயிரிழந்தார்.
அதனையடுத்து துணை ஜனாதிபதியாக பதவி வகித்து வந்த நிகோலஸ் மதுரோ, ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றுத் தற்போது ஜனாதிபதியாக பதவி வகிக்கிறார். இவர் சாவேஸின் தீவிர ஆதரவாளர்.
இந்தநிலையில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்



றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மதுரோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.
சாவேஸின் கல்லறையில் சில சமயங்கள் படுத்து உறங்குவேன். அதன் மூலம் அவரது எண்ணங்கள், கருத்துகள் எனக்கும் உருவாவதாக நம்புகின்றேன். சாவேஸின் வழியில் ஆட்சியை நடத்த அது எனக்கு உதவும். வெனிசுவேலாவை முன்னேற்றுவதே சாவேஸின் இலக்கு. அது நிச்சயம் நிறைவேறும் என்று மேலும் தெரிவித்துள்ளார் மதுரோ. (ற)



சீனாவில் எச்7என்9 என்ற பறவைக் காய்ச்சல் வைரஸால் பீடிக்கப்பட்ட மேலுமொருவர் இனம் காணப்பட்டுள்ளார் என்று அந்த நாட்டு சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதையடுத்து சீனாவில் பறவைக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 134 ஆக அதிகரித்துள்ளது. ஒரு மாதத்திற்கு முன்னர் வெளியிடப்பட்டிருந்த அரச புள்ளிவிவரங்களின்படி பறவைக் காய்ச்சலால் 44 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. (ற)

## கைதிகளை விடுவிக்க இணங்கியது இஸ்ரேல்

ஜெருசலேம், ஓக.13
26 பலஸ்தீன கைதிகளை விடுதலை செய்வதற்கு இஸ்ரேல் அரசு இணக்கம் வெளியிட்டுள்ளது. எதிர்வரும் வாரத்தில் ஆரம்பிக்கப்பட உள்ள சமாதானப் பேச்சுகளின் ஓர் அங்கமாகவே நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டிருந்த சில கைதிகள் விடுதலை செய்யப்பட உள்ளனர்.
விடுதலை செய்யப்பட உள்ள கைதிகளின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளதுடன், இன்று குறித்த கைதிகள் விடுதலை செய்யப்பட உள்ளனர் என்றும் இஸ்ரேல் அரசு அறிவித்துள்ளது.
இதேவேளை, இஸ்ரேலின் புதிதாக அமைக்கத் திட்டமிட்டிருக்கும் ஆயிரத்து 200 குடியிருப்பு திட்டங்களுக்கு பலஸ்தீனம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. இந்த நடவடிக்கையானது சமாதான முனைப்புக்களுக்கு குந்தகத்தை ஏற்படுத்தும் என்றும் பலஸ்தீனம் குற்றம் சுமத்தியுள்ளது.
அமெரிக்காவின் ஏற்பாட்டில் பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையே சமாதான முயற்சிகள் இடம் பெற்று வருகின்றன. (ற)

# பள்ளிவாசல் தாக்குதலை வேடிக்கை பார்த்தது பொலிஸ்

## அஸாத் சாலி குற்றச்சாட்டு

கொழும்பு,ஓக.13
கொழும்பு, கிராண்ட்பாஸ் பள்ளிவாசலை பௌத்த மதகுருமார் தலைமையிலான காடையர்கள் தாக்கியமை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது என்று தேசிய ஐக்கிய முன்னணி தலைவர் அஸாத்சாலி தெரிவித்தார்.

தாக்குதல் தொடர்பாக ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: மஃரிப் தொழுகையில் ஈடுபட்டிருந்த மக்கள் அச்சத்துக்கும் அசௌகரியத்துக்கும் ஆளாகியுள்ளனர்.

இந்தத் தாக்குதலின்போது முஸ்லிம்களின் வீடுகளுக்கும் சேதங்கள் விளைவிக்கப்பட்டுள்ளன. இது காட்டுமிராண்டித்தனமான செயல். பள்ளிவாசலை மூடும்படி காலக்கெடு விதிக்க காடையர்களுக்கு அதிகாரம் கொடுத்தது யார்?

மேல் மாகாணத்துக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்கவுடன் பள்ளிவாசல் தொடர்பாக ஏற்கனவே பேச்சுகளில் ஈடுபட்டிருந்தோம்.

எது எவ்வாறாயினும் ஜனாதிபதிதான் இந்தத் தாக்கு



தலுக்கு பொறுப்பேற்க வேண்டும். பௌத்த விகாரைகளை பேணும் ஜனாதிபதி பள்ளிவாசல்களைப் பேணத் தயங்குகிறார். வழமை போன்றே கைகட்டி தாக்குதலை வேடிக்கை பார்த்து பொலிஸ் அவமானத்தை தேடிக் கொண்டுள்ளது.- என்றார்.

இதேவேளை பொலிஸார் நினைத்திருந்தால் கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் தாக்குதலை தடுத்து நிறுத்தி இருக்க முடியும் என்று அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் பொலிஸார் கடமை தவறி விட்டனர். பொலிஸார் மீது மக்கள் நம்பிக்கை இழப்பது பெரிய பின் விளைவுகளை ஏற்படுத்தும் என்று அவர் கூறினார்.

அதேவேளை கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் மீதான தாக்குதல் இனவாதத்தின் உச்சகட்டம் என்பதை உறுதிப்படுத்தி உள்ளது என்று அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலர் வை எல்.எஸ்.ஹமீட் தெரிவித்தார். எந்தவொரு சமூகத்தையும் அவர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்கள் என்பதற்காக அடக்கி ஆள நினைப்பது முட்டாள்தனமாகும் என்று கூறினார்.

பள்ளிவாசல் தாக்கப்பட்டபோது பொலிஸார் அசமந்தமாக செயற்பட்டுள்ளனர். தாக்குதலுக்கு காரணமானோரைத் தண்டிப்பதோடு நாடு முழுவதும் உள்ள பள்ளிவாசல்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-10)

## திருமலையில் கடும் காற்றால் 20 வீடுகள் சேதம்



திருகோணமலை,ஓக.13
திருகோணமலை மாவட்டத்தின் 3 பிரதேச செயலகப் பிரிவுகளில் வீசிய கடும் காற்றினால் 20 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை பட்டினமும் சூழலும், கோமரன்கடவல மற்றும் சேருவில ஆகிய பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை மாலை கடும் காற்று வீசியதாக மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் விராஜ் திசாநாக்க கூறினார். (ச)

## இறங்குதுறையை பார்க்க அலைமோதுகிறது கூட்டம்

### ஞாயிறு மாலை வரையில் மட்டும் 25 லட்சம் பேர் பார்வையிட்டனர்



கொழும்பு,ஓக.13
கொழும்பு தெற்கு துறைமுகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கொள்கலன் களஞ்சியசாலை மற்றும் இறங்குதுறையை இதுவரையில் 25 லட்சம் மக்கள் பார்வையிட்டுள்ளனர்.

இந்த இறங்குதுறை இன்று செவ்வாய்க்கிழமை வரை மக்கள் பார்வைக்காக திறந்திருக்கும்.

இந்தக் களஞ்சியசாலை சீனாவின் நிதி உதவியுடன் சுமார் 1000 மில்லியன் டொலர்கள் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வருடத்துக்கு 2.5 பில்லியன் கொள்கலன்களை ஏற்றி இறக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

**விற்பனையாளர்கள் தேவை**
பாதணிகள் வியாபார ஸ்தாபனத்துக்கு விற்பனையாளர்கள் தேவை.
நேரில் வரவும்.
19/20, நியு மாக்கற், யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 232 7058 (31332) (3.6.11)

**TV கள் மலிவு விலையில்**
யாழ் நகரில் எங்குமில்லாத மலிவு விலையில் உத்தரவாதத்துடன் SONY Wega TV கள் 21"-11000/= முதல், 29"- 16000/= Panasonic 29" -15000/= DTS amp, Box, DVD என்பன.
தொடர்பு: 077 044 0570
பேவி ஹேர் சென்ரர் (கொமர்சல் வங்கி எதிரில்)
56, K.K.S வீதி, கஸ்தூரியார்.
(31334)(45.6.3)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**காணி விற்பனை**
உரும்பிராய் கிழக்கில், கோப்பாய்- உரும்பிராய் பிரதான வீதியில் உள்ள வீடு, கடை கட்டுவதற்கு உகந்த நல்ல சூழலில் 4 பரப்புக் காணி பயன்தரு மரங்களுடன் உடன் விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)
தொடர்பு: 075 511 8362 (31249) (7.6.3)

**தேவை**
தரமான இளம்
ஓலைப் பார்வுகள் தேவை.
தொடர்பு: அன்னை பாம்
இணுவில். (C/11126)(7.6.3)

**இலங்கை செஞ்சிலுவைச்சங்கம்**

**அலுவலக பாவனைக்கு இடம் வாடகைக்கு தேவை**
**யாழ்ப்பாண மாவட்டம் தெல்லிப்பளை, சுன்னாகம் அருகில்**

**விபரம்:**
சுன்னாகத்துக்கு அருகில் அமைந்திருத்தல் வேண்டும்

- அண்ணளவாக 2000 சதுர அடி உள்ள கட்டடம்
- இரு வாகனங்கள் நிறுத்தக்கூடிய இடவசதி
- மின்சாரம் மற்றும் குழாய் நீர் வசதி கொண்டிருத்தல்
- மாத வாடகை ரூபா 15,000.

**அலுவலக பாவனைக்கு இடம் வாடகைக்கு தேவை**
**முல்லைத்தீவு மல்லாவி அருகில்.**

**விபரம்:**
மல்லாவி நகருக்கு அருகில் அமைந்திருத்தல் வேண்டும்

- அண்ணளவாக 1000 சதுர அடி உள்ள கட்டடம்
- இரு வாகனங்கள் நிறுத்தக்கூடிய இடவசதி
- மின்சாரம் மற்றும் குழாய் நீர் வசதி கொண்டிருத்தல்
- மாத வாடகை ரூபா 7,000.

முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக, பணிப்பாளர் நாயகம், மே.பா கிளை நிறைவேற்று அலுவலர், இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், யாழ்ப்பாண கிளை, இல. 73 கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 21 ஒகஸ்ட் 2013 அன்று அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கும் வகையில் அனுப்பி வைக்கப்படவேண்டும். தயவுசெய்து, (SLRCS/PRO/2013/ 016) எனும் இலக்கத்தை தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை செஞ்சிலுவைச்சங்கம்**
**104 தர்மபால மாவத்தை**
**கொழும்பு 7**

**கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்**
**வரலட்சுமி காப்பு**
16.08.2013 வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு நடைபெறும் விசேட பூஜையைத் தொடர்ந்து வரலட்சுமி நூல் வழங்கப்படும். நூல் கட்ட விரும்புவோர் பெயர்களை ஆலய காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளவும்.
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். பரிபாலன சபை.
(31340)(11.6.3)

**அறிவித்தல்**
**சாவகச்சேரி லயன்ஸ் கழகம்**
கழக அங்கத்தவர் **ச.மனோகரன்** எமது கழக உறுப்புரிமையிலிருந்து கடந்த 30.06.2013 தொடக்கம் நீக்கப்பட்டுள்ளார். கழகம் தொடர்பான நடவடிக்கையில் இவர் ஈடுபட்டு வருவதாக அறிவதால் எமது கழகம் சார்ந்த விடயங்களுடன் பொது மக்கள் எந்தவித தொடர்பும் வைத்துக் கொள்ள வேண்டாமெனவும் அவ்வாறு தொடர்புகளை வைத்திருந்தால் நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
**சாவகச்சேரி லயன்ஸ் கழகம்.**

## வரணி ஆஸ்பத்திரியை அபிவிருத்தி செய்யுங்கள்

### நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 13
யாழ். வரணிப் பிரதேச வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பில் வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தினரால் கடிதம் ஒன்று தென்மராட்சி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலென்ரினிடம் கையளிக்கப்பட்டது.

நலன்புரி சங்கத்தினர் மற்றும் பொது மக்களுடனான கலந்துரையாடல் கடந்த 8 ஆம் திகதி வரணிப் பிரதேச வைத்தியசாலையில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலிலேயே இந்தக் கடிதம் கையளிக்கப்பட்டது.

இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வாகனம் ஒன்று வழங்கப்பட்டிருந்தபோதும்; பகுதிநேர சாரதி ஒருவரே நியமிக்கப்பட்டுள்ளதனால் நோயாளர்களுக்கு முழுமையான சேவையை வழங்க முடியாத நிலையிருப்பதால் நிரந்தர சாரதி ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண் டும்.

ஆண் நோயாளர்கள் விடுதியில் தங்கி சிகிச்சை பெற வசதியாக இணைப்பு வசதி கொண்ட ஆண், பெண் விடுதி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வைத்தியசாலையின் பாதுகாப்பு தொடர்பில் சுற்றுமதிலைக் கட்டி வைத்தியசாலையின் இரண்டு நுழைவாயில்களும் புதிதாக அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உள்ளது. (எ-122)

# பனையோலை, வைக்கோல் கலந்து செய்த 'கார்ட்போட்'

## முயற்சிக்கிறது பனை அபிவிருத்திச் சபை

யாழ்ப்பாணம், ஓக. 13
பனையோலையையும் வைக்கோலையும் பயன்படுத்தி 'கார்ட்போட்' அட்டை தயாரிப்பதற்கான முயற்சியில் பனை அபிவிருத்திச் சபை ஈடுபட்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
பனை அபிவிருத்திச் சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் புதிய தொழில்நுட்பத்துடனான உற்பத்திப் பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. இதன் இன்னொரு முயற்சியாக பனை உற்பத்தியாளர்களை ஒன்றிணைத்து அவர்கள் ஊடாக கார்ட்போட் அட்டையைத் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பனையோலை மற்றும் வைக்கோலைப்பயன்படுத்தி இயற்கை முறையிலான கார்ட் போட் அட்டை தயாரிக்க முடியும் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் இது தொடர்பாக செய்முறைகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வு ரீதியாக செய்முறைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு பயனாளிகளே அதனைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை பனை அபிவிருத்திச் சபை மேற்கொள்ளும்.

யாழ்.மாவட்டம் உட்பட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பனை அபிவிருத்திச் சபையின் போதனாசிரியர்கள் ஊடாக அதற்கான பயிற்சிகள் பயனாளிகளுக்கு வழங்கப்படும்– என்றார். (வ-14)





## இரவில் குளிர்பானம் குடித்தால் படிக்க முடியும் என்று தாயிடம் பணம் வாங்கி பியர் குடித்த மகன்

வலி.வடக்கு, ஓக. 13
இரவு நேரத்தில் குளிர்பானம் குடித்தால்தான் உற்சாகமாகப் படிக்க முடியும் என்று தாயிடம் பணம் பெற்று மகன் பியர் குடித்ததை அறிந்த தாய் அதிர்ச்சி அடைந்த சம்பவம் சுழிபுரத்தில் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:
கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்காக இரவு நேரத்தில் கண் விழித்துப் படிக்கும் மகன் தனக்கு இரவில் சோடா வாங்கிக் குடித்தால் நித்திரை வராது எனக் கூறி தாயிடம் நாளாந்தம் பணம் பெற்று பியர் வாங்கிக் குடிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்துள்ளார்.

தாயும் மகன் அருந்திவிட்டு வைக்கும் வெற்றுப் பேணிகளை சேகரித்து ஒரு சாக்குப் பையில் கட்டி வைத்து பழைய பேணிகள் வாங்க வரும் ஒருவரிடம் விற்றுள்ளார். வெற்றுப்பேணிகளை கொள்வனவு செய்தவர் ''யார் இந்தளவு பேணி பியர்களைக் குடித்தவர்'' எனக் கேட்டுள்ளார். இதனைக் கேட்ட தாய் மகன் குடித்தது சோடா அல்ல, பியர்தான் என்று அறிந்ததும் அதிர்ச்சி அடைந் துள்ளார்.

மகன் நகரப் பகுதியில் உள்ள பிரபல்யமான பாடசாலையைச் சேர்ந்த மாணவன் என்பது குறிப்பிடத் தக்கது. (எ-86)

## மும்மொழிக் கொள்கைக்கு 'வேட்டு' ஆங்கிலத்தில் மட்டும் பாடசாலை பெயர்

வலி.வடக்கு, ஓக.13
அரசால் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் அதிக அக்கறை காட்டிவரும் வேளையில் தெல்லிப்பழை கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பொன்பரமானந்த வித்தியாலயத்தில் உள்ள கட்டடத்தில் அரசின் இணைப்பு மொழியான ஆங்கிலம் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.




கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக குறிப்பிட்ட பாடசாலை கட்டடங்கள் அழிந்து போன நிலையில் மக்கள் மீளக்குடியேறியதைத் தொடர்ந்து பாடசாலைக்கு இரண்டு கட்டடங்கள் சேவா லங்கா நிறுவனத்தால் அமைத்துக் கொடுக்கப்பட்டு பாடசாலை இயங்கி வருகின்றது.

இவ்வாறு அமைக்கப்பட்ட பாடசாலை கட்டடத்திலேயே ஆங்கில மொழியில் எழுதப்பட்டுள்ளதுடன் நாட்டின் மொழியான தமிழோ அன்றி சிங்களமோ கூட இடம்பெறாத நிலை காணப்படுகின்றது.

வலிகாமம் கல்வி வலயத்தால் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் முனைப்புக் காட்டும் நிலையில் பாடசாலை ஒன்றில் இத்தகைய நிலைமை காணப்படுவதையிட்டு உரிய அதிகாரிகள் ஏன் கவனம் செலுத்தவில்லை என்பது பலரிடமும் விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது. (வ-86)

## நாகபூஷணி ஆலய துறைமுக வீதியை புனரமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக.13
நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய துறைமுகப் பகுதியின் தெற்குக் கடற்கரையை அண்டிய வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ரூபா 41 லட்சம் செலவில் புனரமைக்கப்படவுள்ள இந்த வீதிப் பகுதியை மேலும் மெருகூட்டுவதற்குத் தேவைப்படின் அம்பாள் ஆலய நிர்வாகம் அதற்கென நிதியை வழங்க ஆலய அறங்காவல் சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அது குறித்த திட்ட முன்மொழிவின் பின்னர் நிதி வழங்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. (வ-7)




## பழுதான மீன்கள் விற்பனைக்கு

### சுகாதரப் பகுதியினர் கவனம் செலுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.13
நகரில் உள்ள மீன் சந்தைகளில் பழுதடைந்த மீன்கள் விற்பனை செய்யப்படுவதாகவும் சுகாதாரப் பகுதியினர் இது குறித்து கவனம் செலுத்துவதில்லை எனவும் நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ். நகரில் பண்ணை, சின்னக்கடை, பாஷையூர் கொழும்புத்துறை, அரியாலை ஆகிய பகுதிகளில் உள்ள மீன் சந்தைகளில் மீன் வியாபாரிகள் பழுதடைந்த மீன்களை ஐஸில் போட்டு மறுநாள் வரும் மீன்களுடன் சேர்த்து விற்பனை செய்கின்றனர் என்று குற்றஞ்சாட்டுகின்றனர் நுகர்வோர். இதனால் தாம் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் கூறுகின்றனர்.

வியாபாரிகள் தம்வசமுள்ள மீன்களுடன் பழுதடைந்த மீன்களையும் சேர்த்து வெவ்வேறுபட்ட விலையில் விற்பனை செய்வதாகக் கூறும் நுகர்வோர் வர்த்தக நிலையங்களில் காலாவதியான பொருள்களை விற்கும் வியாபாரிகளிடம் மட்டுமே பொதுச் சுகாதாரபரிசோதகர்கள் தங்கள் சோதனையில் பிடித்துத் தண்டிக்கின்றனர், மீன் வியாபாரிகளின் இத்தகைய செயற்பாடுகள் குறித்து அவர்கள் கவனம் எடுப்பதில்லை எனவும் குறைப்படுகின்றனர்.



இனிவரும் காலத்திலாவது சுகாதாரப் பரிசோதகர்கள் மீன் சந்தைகளிலும் திடீர் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இருப்பினும் பழுதடைந்த மீன்களைத் தாம் விற்பனை செய்வதில்லை என்று மீன் வியாபாரிகள் மறுக்கின்றனர். ''எப்போதாவது அப்படி மீன் பழுதடைந்திருக்கலாம். அதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. ஆனால் பழுதடைந்த மீன்களை யாரும் விற்பனை செய்வதில்லை, அவற்றை எறிந்து விடுகிறோம்'' என்கிறார்கள் அவர்கள். (வ-7)

## நடமாடும் சேவை வலி.கிழக்கில் இன்று

அச்சுவேலி, ஓக.13
தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான நடமாடும் சேவை வலி.கிழக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறும்.

கபே மற்றும் சீ.எச்.ஆர். அமைப்புகளின் அனுசரணையுடன் நடைபெறும் நடமாடும் சேவையில் முத்திரை, புகைப்படம், பிறப்புச் சான்றிதழ் பிரதி, திருமணச் சான்றிதழ் பிரதிஉள்ளிட்ட அனைத்து ஆவணங்களும் அனுசரணை வழங்கும் அமைப்புகளால் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இன்று நடைபெறும் நடமாடும் சேவை வலி.கிழக்கில் 6 ஆவது தினமாக நடைபெறுகின்றது. முன்பு நடைபெற்ற நடமாடும் சேவையில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்குரிய தேசிய அடையாள அட்டைகள் இங்கு வைத்து வழங்கப்படவுள்ளன.

ஏற்கனவே இதுவரை 300 இற்கு மேற்பட்ட அடையாள அட்டைகள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

ஆள்பதிவுத் திணைக்கள உயர் அதிகாரிகள் நேரில் கலந்து கொண்டு விண்ணப்பங்களை பரிந்துரை செய்து ஏற்றுக் கொள்வதால் குறுகிய கால அவகாசத்தில் அடையாள அட்டைகள் கிடைக்குமாதலால் நடமாடும் சேவையை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-11)

## மாற்று வலுவுடையோருக்கு கொடுப்பனவு

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் சமூக சேவைகள் திணைக்களத்தால் மாற்று வலுவுள்ளோருக்கு மாதாந்தம் வழங்கப்படும் ஓகஸ்ட் மாதத்துக்குரிய 3 ஆயிரம் ரூபா கொடுப்பனவு பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த கொடுப்பனவுக்காக புதிதாக தெரிவு செய்யப்பட்ட 16 பயனாளிகளையும் குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் வருகை தந்து பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் பிரிவில் முன்னர் தெரிவு செய்யப்பட்ட மாற்று வலுவுள் ளோர் 34 பேருக்கு மாதாந்தம் அவர்களது வங் கிக் கணக்குகளுக்கு அனுப்பி வைக் கப்படுவது குறிப்பிடத்தக்கது. (வ-9)

உதயன்
13/08/2012

# அம்பாறையில் சிறுபோக நெல் கொள்வனவு



அம்பாறை,ஓக.13
அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெல் கொள்வனவு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று நெல் சந்தைப்படுத்தும் சபையின் அம்பாறை பிராந்திய முகாமையாளர் எம்.கே. எம்.ரத்நாயக்க தெரிவித்தார்.


இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, தமண, சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களிலுள்ள நெல் களஞ்சியசாலைகளில் வைத்து நெல் கொள்வனவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாடு ரக நெல் கிலோ 32 ரூபாவுக்கும், சம்பா ரக நெல் கிலோ 35 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படுகின்றது.

இதேவேளை தனியார் வியாபாரிகள், நெல் உரிமையாளர்கள், விவசாயிகள் ஆகியோரிடம் இருந்து தனியார் அரிசி ஆலைகள் ஒரு கிலோ 22 ரூபா முதல் 23 வரை கொள்வனவு செய்யும் நடவடிக்கையை மேற் கொண்டு வருகின்றனர்.- என்றார். (ச-10)

## டிப்பர் குடைசாய்ந்தது



மட்டக்களப்பு,ஓக.13
மட்டக்களப்பு, மங்களகம கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை கருங்கல் ஏற்றிச் சென்று கொண்டிருந்த டிப்பர் வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகிச் சென்று குடைசாய்ந்தது.

இந்த வாகனத்தின் சாரதியும், உதவியாளரும் அதிர்ஷ்ட வசமாக காயமேதுமின்றித் தப்பியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணையை மங்களகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## ஆயித்தியமலை – வவுணதீவு பிரதான பாதை புனரமைப்பு

### செப்ரெம்பரில் திறப்பு



மட்டக்களப்பு,ஓக.13
மட்டக்களப்பு,ஆயித்தியமலை, வவுணதீவு பிரதான பாதையின் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன.


இந்தப் பாதை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் திறந்து வைக்கப்படும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி பொறியியலாளர் கே.பிரேமதாஸ தெரிவித்தார்.

இந்த வீதி போர் மற்றும் வெள்ளப் பெருக்கால் முற்றாக சேதமடைந்திருந்த நிலையிலேயே புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

**போர் மற்றும் வெள்ளப் பெருக்கால் முற்றாக சேதமடைந்திருந்த நிலையிலேயே புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.**

ஆயித்தியமலை - வவுணதீவு பிரதான பாதை ஆசிய அபிவிருத்தி வங்கியின் 250 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். (ச)

# கிராண்ட்பாஸ் பள்ளி தாக்குதல் கிழக்கு முஸ்லிம்கள் கொதிப்பு



அம்பாறை,ஓக.13
கொழும்பு, கிராண்ட் பாஸ் பள்ளிவாசல் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்கு தலையடுத்து கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் கடும் ஆத்திரம் அடைந்துள்ளனர் என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசுடன் இணைந்துள்ள முஸ்லிம் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலக வேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அதேவேளை கிராண்ட்பாஸ் பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலையை அடுத்து, கிழக்கு மாகாண முஸ்லிம்கள் கொழும்பு செல்வதைத் தவிர்த்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புக்கான அத்தியாவசியமான பயணங்களைக் கூட பலர் கைவிட்டுள்ளனர் என்று அறியமுடிகிறது.

இதேவேளை, கொழும்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய வைத்திய சிகிச்சைகள், வெளிநாட்டுப் பயண ஏற்பாடுகள் ஆகியவற்றைக்கூட பலரும் பிற்போட்டுள்ளனர்.

கொழும்பு நிலவரத்தை உன்னிப்பாக அவதானித்து அறிந்து கொள்வதில் சாதாரண மக்களும்கூட ஆர்வமாகவுள்ளனர் என்பதை அவதானிக்க முடிகின்றது என எமது செய்தியாளர் தெரிவிக்கின்றார். (ச-30)

## அழகாபுரியில் மீட்கப்பட்டன ஆயுதங்கள்



மட்டக்களப்பு,ஓக.13
வாகரை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அழகாபுரி சாந்தி மலையில் ஒரு தொகை ஆயுதங்களை ஞாயிற்றுக்கிழமை படையினர் மீட்டனர்.

ரி - 56 ரக துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தும் மகஸின்கள் 3, துப்பாக்கிச் சன்னங்கள் 3, கிளைமோர் குண்டு 1, வெடிமருந்து 12 கிலோ ஆகியவற்றைத் தாம் மீட்டனர் என்று படையினர் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட ஆயுதங்கள் மட்டக்களப்பு 233ஆவது படைத் தலைமையகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ச)

## கட்டுத்துவக்கு வைத்திருந்த விவசாயி கைது

மட்டக்களப்பு,ஓக.13
மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரிமிச்சை கிராமத்தில் கட்டுத்துவக்கு ஒன்றை வைத்திருந்தார் எனக் கூறப்படும் விவசாயி ஒருவரை ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் கைது செய்தனர்.




சந்தேகநபரிடமிருந்து கட்டுத்துவக்கைத் தாம் கைப்பற்றினர் என்று வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை, கிண்ணையடியைச் சேர்ந்த விவசாயி ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ச)

# மீள்குடியமர்ந்த மக்கள் மீண்டும் இடம்பெயர்வு

### தீர்வைப் பெற்றுத் தருமாறு அரச அதிபரிடம் வேண்டுகோள்



மட்டக்களப்பு,ஓக.13
மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள கெவிளியாமடுவில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு ஏற்பட்டுள்ள யானைப் பாதுகாப்பு, அத்துமீறிய குடியேறல்கள் உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

'மீளக்குடியமர்ந்த மக்கள் இடம் பெயர்வு' என்ற தலைப்பில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரெட்ணம் அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள மனுவிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

2010ஆம், 2011ஆம் ஆண்டுகளில் பட்டிப்பளை பிரதேச செயலர் பிரிவில் கெவிளியாமடு கிராமத்தில் பல தமிழ்க் குடும்பங்கள் மீளக்குடியமர ஆரம்பித்தனர்.

1986ஆம், 1987ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த 104 குடும்பங்கள் மீண்டும் 2010ஆம், 2011ஆம் ஆண்டுகளில் மீளக்குடியமர வரும்போது 40 குடும்பங்களின் காணிகளில் ஏனைய சமூகத்தைச் சேர்ந்த சிலரால் விவசாயச் செய்கை பண்ணப்பட்டு வந்த காரணத்தினால் மிகுதியான குடும்பங்களே மீளக்குடியமர்ந்தனர்.

இதில் குறிப்பிட்ட குடும்பங்களுக்கு மட்டும் 100,000 ரூபா பெறுமதியான வீடுகள் வழங்கப்பட்டன. மீளக் குடியமர்ந்து மூன்று வருடங்களுக்கு மேலாக வசித்து வந்த 25 குடும்பங்களும் மேட்டு நிலப் பயிர்ச்செய்கை, வேளாண்மை செய்து வருகின்றன.

இந்த வருடம் வீடுகளையும், வேளாண்மைகளையும், மேட்டுநிலப்பயிர் செய்கையையும் யானைகளும், கால்நடைகளும் ஐந்து தடவைகளுக்கு மேல் சேதப்படுத்தியுள்ளன. அதன் காரணமாக பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டு வீடு வாசல்களை இழந்து, உயிருக்குப் பயந்து மீண்டும் இடம்பெயர்ந்து களுதாவளையிலும், தேத்தாத்தீவிலும் உறவினர்கள் வீடுகளில் இம் மக்கள் தங்கி வாழ்ந்து வருகின்றனர்.

யானைப் பாதுகாப்பு வேலிகளை அமைத்தும் பாதுகாப்பை உறுதிப்படுத்தி புதிய வீடுகள் அமைத்துத் தந்தால் நாங்கள் செல்வோம் என்று கலந்துரையாடலின் போது களுதாவளையில் வைத்து மக்கள் என்னிடம் வேண்டுகோள் விடுத்தனர். இந்த விடயங்கள் தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தப் பகுதியில் புதிய சிங்களக் குடியேற்றங்களும், புதிய விகாரைகள், புதிய வீதிகள் அமைத்தல் போன்ற பல வேலைகள் அரசால் ஆரம்பிக்கப்பட்டிருப்பதோடு புதிதாகக் குடியேறிய மக்களை வாக்காளர் இடாப்பில் பதிந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-சி)

# வடக்குக்கு 25 இற்கும் அதிகமான வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள்

## தேர்தலுக்கு 10 நாள்களுக்கு முன் இலங்கை வருவர்

கொழும்பு,ஓக.13
வடக்கு மாகாணசபைக்கு நடைபெறவுள்ள தேர்தலை கண்காணிக்க, 25 இற்கும் அதிகமான வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் இலங்கை வரவுள்ளனர்.

தேர்தல் ஆணையாளர் விடுத்த வேண்டுகோளை ஏற்று, தெற்காசிய தேர்தல் முகாமைத்துவ அமைப்பு விசேட பிரதிநிதியொருவரின் தலைமையில் 17 கண்காணிப்பாளர்களை அனுப்பவுள்ளது.

இந்தக் குழுவில் இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலா மூன்று கண்காணிப்பாளர்களும், பூட்டான், மாலைதீவு, நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலா இரண்டு கண்காணிப்பாளர்களும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த ஒருவரும் இடம்பெறவுள்ளனர்.

தேர்தலுக்கு சுமார் 10 நாள்கள் முன்னதாக அவர்கள் வடக்கு மாகாணத்துக்குச் செல்வர்.

கொமன்வெல்த் அமைப்பின் சிறப்புக் குழுவொன்றும் வடக்கு மாகாணசபைத் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடவுள்ளது.

அதேவேளை, பவ்ரல் அமைப்பின் அழைப்பின் பேரில், நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான தெற்காசிய வலையமைப்பைச் சேர்ந்த எட்டு வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் இலங்கை வரவுள்ளனர்.

அவர்கள் தாய்லாந்து, ஜப்பான், பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ், நேபாளம், இந்தோனேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களாவர்.

இந்த வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கை தேவைப்பட்டால் அதிகரிக்கப்படும் என்று பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் றோகண ஹெட்டியாராச்சி தெரிவித்தார். (ச)

## தபால் கட்டண அதிகரிப்புக்கு யோசனை



கொழும்பு,ஓக.13
தபால் கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பான யோசனைத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது என்று தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தபால் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்வதற்காக அமைச்சின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதே இதன் நோக்கம் என்று தபால் மாஅதிபர் ரோஹன அபேரத்ன கூறியுள்ளார்.

ஆறு வருடங்களுக்கு முன்னரே இறுதியாக தபால் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதேவேளை, கட்டணத் திருத்தங்களை மேற்கொள்வதற்கு முன்னர் அது தொடர்பில் தபால் மா அதிபர் மீண்டும் கலந்துரையாடல்களை மேற்கொள்வார் என்று தபால் சேவைகள் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அதனைத் தொடர்ந்து தபால் கட்டண அதிகரிப்புக்காக அமைச்சரவையின் அனுமதி கோரப்படும் என்று அமைச்சின் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ குறிப்பிட்டார். (ச)



கொழும்பு, வெள்ளவத்தை மயூரபதி பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் தீர்த்தோற்சவ கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை வெள்ளவத்தை கடற்கரையில் நடை பெறுவதை காணலாம்.

## பொதுநலவாய மாநாட்டுக்கு சாள்ஸின் வருவது உறுதி



கொழும்பு,ஓக.13
இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் இடம் பெறவுள்ள பொது நலவாய நாடுகளின் அரச தலைவர்கள் பங்கேற்கும் மாநாட்டில் கலந்து கொள்ள பிரிட்டனின் முடிக்குரிய இளவரசர் சாள்ஸ் இலங்கைக்கு வருவது உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை பிரிட்டனிலுள்ள இலங்கைத் தூதர் கிரிஸ்றோனிஸ் தெரிவித்தார்.

முடிக்குரிய இளவரசர் சாள்ஸுடன் அவரது பாரியாரும் கோமகள் கமீலாபார்க்கரும் இலங்கைக்கு வரவுள்ளனர். பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் மற்றும் அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான சிரேஷ்ட அதிகாரிகளும் இலங்கை வரவுள்ளனர் என்று அவர் கூறினார்.

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டுக்குச் சமாந்தரமாக நடைபெறும் வர்த்தக மாநாட்டில் அந்த நாட்டில் முன்னணியில் உள்ள வர்த்தக நிறுவனங்கள் கலந்து கொள்ளவுள்ளன என்று அவர் குறிப்பிட்டார். (ச-22)

## பிறப்பு, இறப்பு பத்திரங்கள் கணினியில் பதிவேற்றம்



அழிவடைந்த பிறப்பு இறப்பு அத்தாட்சி பத்திரங்களின் பிரதிகளை பெறுவதில் எவ்வித அசௌகரியமும் ஏற்படாது.

கொழும்பு,ஓக.13
வடமாகாண மக்களின் பிறப்பு மற்றும் இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன என்று பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மாகாணத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் பிறப்பு மற்றும் இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகளை பெற்றுக் கொள்ள முடியும் என்று பதிவாளர் நாயகம் ஈ.எம். குணசேகர அறிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையால், காணாமற்போன அல்லது அழிவடைந்த பிறப்பு மற்றும் இறப்பு அத்தாட்சி பத்திரங்களின் பிரதிகளை பெற்றுக்கொள்வதில் எவ்வித அசௌகரியமும் ஏற்படாது என்று அவர் சுட்டிகாட்டினார்.

பிறப்பு பதிவு செய்யப்படாத எவரேனும் இருந்தால் உடனடியாக உரிய பிரதேச செயலகத்துக்குச் சென்று அதற்கான தீர்வைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர் ஆலோசனை வழங்கியுள்ளார். (ச-400)

## மிகக் கேவலமான நாடாக இலங்கை

### ஐ.தே.க. உறுப்பினர் குற்றச்சாட்டு

கொழும்பு,ஓக.13
அரசின் செயற்பாடுகளால் ஆசியாவின் மிகக் கேவலமான நாடாக இலங்கை மாறியுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்தார்.

அரசு தாம் செய்யும் பிழைகளை மூடிமறைக்க மக்கள் மத்தியில் வன்முறைகளைத் தூண்டிவிட்டு, தேசிய கீதத்திற்குள்ள மரியாதையையே இல்லாமல் செய்கிறது என்று அவர் குற்றம் சாட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில்அமைந்துள்ள கட்சியின் தொழிற்சங்க அலுவலகத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிராண்ட்பாஸில் பள்ளிவாசல் மீதான தாக்குதல் சம்பவம் முஸ்லிம் மக்கள் மத்தியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ், சிங்களம், முஸ்லிம், கிறிஸ்தவர்கள் என்று அனைவரும் இதுவரை காலமும் மிக ஒற்றுமையாக வாழ்ந்து வந்த நகரம் தான் கொழும்பு.

ஆனால் இது போன்ற சம்பவங்களைப் பார்க்கும் போது இனிமேல் முஸ்லிம்கள் வீதியிலிறங்கி சுதந்திரமாக நடமாட முடியுமா என்று கூட தெரியவில்லை. முஸ்லிம்களை நாட்டிலிருந்து ஓரங்கட்டி வைக்க அரசு முயற்சிக்கிறது.

வெலிவேரிய பிரதேசத்தில் தண்ணீர் கேட்ட சிங்கள மக்களுக்கு நடந்த அநியாயம் கூட நாட்டு மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இப்படியிருக்கும் போது அரசின் இதுபோன்ற செயல்களை மக்கள் கண்டு கொள்ளாமல் இருக்க வேண்டுமானால் அவர்களின் மனங்களை திசைத் திருப்ப வேண்டும். அதனால்தான், இது போன்ற வன்முறைகளை மக்கள் மத்தியில் அரசு தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறது. -என்றார்.(ச-சி)

## சாள்ஸின் பாதுகாப்பை ஆராய கொழும்பு வந்தது பிரிட்டன் குழு

மாநாட்டில் பங்கேற்கும் நாடுகளின் தலைவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக ஆராய, அந்தந்த நாடுகளின் பாதுகாப்பு அதிகாரிகள் இலங்கை வருவார்கள்.

கொழும்பு,ஓக.13
கொமன்வெல்த் மாநாட்டுக்காக இலங்கை வரும் பிரிட்டன் இளவரசர் சாள்ஸின் பாதுகாப்புத் தொடர்பாக அவரது பாதுகாப்புக் குழுவொன்று ஆராய்ந்துள்ளது.

அண்மையில் இலங்கை வந்த இந்தக் குழுவினர், பொதுநலவாய உச்சி மாநாட்டுக்கான பாதுகாப்பு ஒழுங்குகள் குறித்து விசாரித்து அறிந்து கொண்டனர் என்று இலங்கை பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இளவரசர் சாள்ஸ் இலங்கையில் தங்கியிருக்கும் போது, கொழும்பில் அவர் செல்லத் திட்டமிட்டுள்ள இடங்களுக்குச் சென்று, அங்குள்ள பாதுகாப்பு அமைப்புகள் குறித்து அவரது பாதுகாப்பு அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர்.

பொதுநலவாய மாநாட்டில் பிரிட்டன் மகாராணி இரண்டாவது எலிசபெத், பங்கேற்கமாட்டார். அவருக்குப் பதிலாக இளவரசர் சாள்ஸ் பங்கேற்பார் என்று பக்கிங்ஹாம் அரண்மனை ஏற்கனவே அறிவித்திருந்தது.

அதேவேளை, பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கும் நாடுகளின் தலைவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக ஆராய, அந்தந்த நாடுகளின் பாதுகாப்பு அதிகாரிகள் விரைவில் இலங்கைக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தட்டிக்கேட்க எவருமில்லையெனில் தம்பி சண்டப் பிரசண்டன் போன்று....

முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத் தொடுவாய் பிரதேசத்தைச் சொந்த, வாழ்ந்த இடமாகக் கொண்ட தமிழ் மக்கள் தமக்கென இருந்த பூமியில், தாம் பல்லாண்டு காலமாக விவசாயம் செய்த காணிகளில், தமது சீவனோபாயத்துக்கு அடிவேராகக் கொண்டிருந்த நிலங்களில் தொழில் செய்ய முடியாமல் தடுக்கப்பட்டுள்ளார்கள்; தவித்து நிற்கிறார்கள்.

போரின் காரணமாக, கொக்குத்தொடுவாய் மத்தியைச் சேர்ந்த மக்கள், 1984 ஆம் ஆண்டில் பாதுகாப்புக் கருதி இடம் பெயர நேர்ந்தது. போர் முடிவுற்ற பின்னர், சுமுக நிலை உண்டாகிய பின்னர், இரண்டு வருடங்களுக்கு முன்னர் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்தனர். அதன் பின்னர் தமக்குரிய விவசாய நிலங்களில் பயிர் செய்வதற்கு அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் பயன் அளிக்கவில்லை. அதற்கு குறிப்பிட்ட பிரதேச அரச அதிகாரிகளின் அனுமதி கிடைக்கவில்லை.

தமது நாளாந்த சீவனோபாயத்துக்கு வேறு தொழில் மார்க்கம் இன்மையால், அவர்கள் தமது முந்தைய விவசாய நிலங்களில் உழவு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அங்கு சென்ற பெரும்பான்மை இன மக்கள் குறிப்பிட்ட காணிகள் தமக்கே சொந்தம் என்றும் அரசாங்கத்தினால் தங்களுக்கே வழங்கப்பட்டு விட்டதாகவும் கூறி, அவர்களை விரட்டினர் என்பது தகவல்.

அது ஒரு புறமிருக்க, கோட்டைக்கேணி என்ற பிரதேசத்துக்கு அப்பால், செல்வதற்கு, தமிழர்களுக்கு அனுமதி இல்லை. அந்த நியமத்தை மீறி வந்தால் பொலிஸாரை வருவித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று மகாவலித் திட்ட அதிகாரிகள் எச்சரித்தனர் என்றும்–

அதனால் தாம் மணப் பயத்துடன் திரும்பிச் சென்று விட்டதாகவும் பாதிப்புற்ற தமிழ் விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். தமிழ் மக்கள் பல்லாண்டு காலமாக வாழ்ந்த பிரதேசங்கள், அபிவிருத்தி என்ற ''லேபலு''டன், பெரும்பான்மை இனத்தவர் வசம் எவ்வாறு கையகப்படுத்தப்படுகின்றது என்பதற்கு ஒரு சிறு உதாரணம் இது. முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத் தொடுவாய்ப் பிரதேசத்தில் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த தமிழ் மக்களுக்கு நேர்ந்த கதியே அதுவாகும்.

இலங்கை நாடு, ஆங்கிலேயரிடம் இருந்து விடுதலை பெற்ற ஒரு சில வருடங்களில், கல்லோயா அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில், மேல்பூச்சுக் காரணங்களுடன் கிழக்கிலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட பெரும்பான்மை இனத்தவர்களின் குடியேற்றத் திட்டங்கள் மூலம்–

அரச உடந்தையுடன், அந்த மாகாணத்தில் பெரும் நிலப்பரப்புக் கபளீகரம் செய்யப்பட்டது என்பது இந் நாட்டின் சரித்திரத்தின் குறிப்பிடத்தக்க அத்தியாயமாகிவிட்டது.

அதே வழியில், வகையில் வடக்கிலும் தமிழ் மக்கள் பல நூறு வருடங்கள் வாழ்ந்த அவர்களின் நிலங்களும் அபிவிருத்தி என்ற பெயரில், குடியேற்றம் என்ற வர்ணப் பூச்சுடன் பறித்தெடுக்கப்படுகிறது. அதன் சிறியதோர் அலகே கொக்குத்தொடுவாய் தமிழ் விவசாயிகளின் இன்றைய பரிதாப நிலையும் எனலாம்.

மாகாண சபைகளுக்கு, அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்ட காணி அதிகாரத்தை அவற்றிடம் இருந்து பிடுங்கி எடுத்துவிட வேண்டும் என்று சிங்கள, பௌத்த மித வாதிகள் சங்கணம் கட்டி நிற்பதற்கான நோக்கம்–

கொக்குத்தொடுவாய் பிரதேசத்தின் சுகந்தாமுறிப்பு, எரிஞ்சகாடு பகுதிகளின் தமிழ் விவசாயிகளுக்கு உண்டாக்கப்பட்ட நிலையிலிருந்து வெளிப்படையாகிறது.

சுகந்தாமுறிப்பு, எரிஞ்சகாடுப் பகுதிகளுக்கு நேர்ந்த கதி, அப்பிரதேசங்களில் நீண்ட பல ஆண்டுகள் வாழ்ந்த தமிழ் விவசாயிகளுக்கு– தமிழ் மக்களுக்கு நேர்ந்துள்ள கதி, வடக்கின் விவசாயிகளுக்கு இன்னும் எத்தனை பகுதிகளில் தலையெடுக்குமோ யார் அறிவார்...?

அடுத்த மாதம் நடைபெறவுள்ள (நடைபெறும் என்று நம்பப்படும்), வடக்கு மாகாணச் சபைத் தேர்தலுக்கு முன்னதாக, சுகந்தாமுறிப்புக்கு உண்டான ஆபத்துப் போன்று–

முல்லைத்தீவு, வவுனியா எல்லைப்பகுதிகளிலும் அவற்றை அண்டிய பிரதேசங்களிலும் நிலக் கபளீகரத்துக்கான அந்தரங்கத் திட்டங்கள், உள்ளுறைந்த (Imbeded)திட்டங்கள், எத்தனை எத்தனை உண்டோ எவர் அறிவார்.

கிழக்கு மாகாணத்திலும் போரின் பின்னர் மீளக்குடியமர்ந்த தமிழ் மக்களுக்குரிய அடிப்படை வசதிகள் எதுவும் செய்யப்படாமல் இருக்கும் அதே வேளை –

பெரும்பான்மை இன மக்கள் அந்தப் பகுதிகளில் குடியேற்றப்பட்டு வசதிகள் செய்யப்படுவது குறித்து மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா கடந்த மாத இறுதியில் சுட்டிக்காட்டியிருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கௌலியாமடுக் கிராமத்தில், அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பெரும்பான்மை இன மக்கள் அரசாங்கத்தினால் குடியேற்றப்பட்டிருந்ததாக அவர் குற்றம் சாட்டியிருந்தார்.

எனவே கொக்குத்தொடுவாய் சுகந்தாமுறிப்பு, எரிஞ்சகாடு பகுதி மக்களின் நிலை தனித்த ஒன்று என்று கருதமுடியாது.

வடக்கு, கிழக்கில் அரசின் ஆதரவு வெளிப்படை யாகத் தெரியாத விதத்தில், அதன் ஆதரவாளர்கள், அனுதாபிகளின் உதவியோடு தமிழர் நிலப்பறிப்புகளும் பெரும்பான்மை இனத்தவர்களின் குடியேற்றமும் நடத்தப்பட்டு வருகின்றன.

தட்டிக் கேட்க எவருமில்லை என்றால் தப்பிச் சண்டப் பிரசண்டன் என்ற வகை சார்ந்து, தமிழ் மக்களின் நிலப் பறிப்பு கனகச்சிதமாக ஒப்பேற்றப்படுகிறது.

# அம்பாந்தோட்டை சொர்க்கபுரியாகுமா?

## பதவி பறிபோனால் கதி என்ன?

சில ஆண்டுகளுக்கு முன்வரை, இலங்கையின் தென் மத்திய பகுதியில் உள்ள அம்பாந்தோட்டை பிரபலமற்ற ஒரு நகரமாகக் காணப்பட்டது. இலங்கையின் தலைநகரான கொழும்பிலிருந்து 118 மைல்கள் தொலைவிலுள்ள அம்பாந்தோட்டையின் சனத்தொகை கிட்டத்தட்ட 10,000 வரையாகக் காணப்பட்டது. இங்கு வாழும் மக்களின் பிரதான தொழில்கள் விவசாயம் மற்றும் மீன்பிடியாகக் காணப்பட்டன. ஆனால் அம்பாந்தோட்டையைச் சொந்த இடமாகக் கொண்ட மஹிந்த ராஜபக்ஷ 2005இல் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், இந்தப் பிரதேசத்தில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின.

மிகவும் அமைதியாக இருந்த தனது சொந்த இடமான அம்பாந்தோட்டையை மிகவும் நவீனமான, தொழிற்பேட்டை நகரமாக மாற்ற வேண்டும் என்பது ராஜபக்ஷவின் கனவாக இருந்தது. இதற்கமைய, 210 மில்லியன் டொலர்கள் செலவில் அனைத்துலக விமானநிலையம் ஒன்றை 2000 ஹெக்ரேயர் பரப்பில் அமைப்பதுடன், கப்பற்துறைமுகம் ஒன்றை உருவாக்குவதற்கு 360 மில்லியன் டொலர்களைச் செலவிடுவது என்பதும் மஹிந்த ராஜபக்ஷவின் திட்டமாக இருந்தது.

2011இல் உலகக் கிண்ணத் துடுப்பாட்டப் போட்டி நடைபெற்ற பங்களாதேஷ், இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 13 நகரங்களில் அம்பாந்தோட்டை பெரிதும் பேசப்பட்ட ஒரு நகரமாகக் காணப்பட்டது. இவ்வாறு (The New York Times) த நியூயோர்க் ரைம்ஸ் ஊடகத்தின் இணையவலையில் (VAIBHAV VATS) வைபாவ்வற்ஸ் என்பவர் எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை மாவட்ட வர்த்தக சம்மேளனத் தலைவரான அஸ்மி தாசிம் என்பவரை நான் சந்தித்தேன். கிட்டத்தட்ட 50 வயதுடையவராக மதிக்கத்தக்க தாசிம், என்னுடன் தனது வேலைகள் தொடர்பான கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

### அம்பாந்தோட்டையின் அபிவிருத்தி

ஜனாதிபதியின் முதலாவது பதவிக் காலத்தில் அம்பாந்தோட்டைக்கு நான் பயணம் செய்திருந்த போது, துடுப்பாட்ட விளையாட்டரங்கம் மட்டும் முற்றாகப் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த விளையாட்டரங்கம் அம்பாந்தோட்டையின் நகரத்தில் அமைக்கப்படாது, நகரிலிருந்து 30 கிலோமீற்றர் தொலைவிலுள்ள சூரியவெவ என்கின்ற இடத்தில் அமைக்கப்பட்டிருந்தமை மிகவும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்த விளையாட்டரங்குக்கு காடுகளின் ஊடாகச் செல்கின்ற வழியில் பயணிக்க வேண்டியிருந்தது.

''அம்பாந்தோட்டையை சகல வசதி வாய்ப்புக்களும் உள்ள ஒரு உயர் தரம்மிக்க நகராக மாற்றுவதற்கு எவ்வளவு காலம் தேவை?'' என நான் .தாசிமிடம் வினவியபோது, ''20 ஆண்டுகள் வரை செல்லும்'' என அவர் பதிலளித்தார். ''இலங்கை அரசு நிதியைச் சேகரிக்கும் வேகத்திலேயே இதற்கான காலம் தங்கியுள்ளது'' எனவும் அவர் பதிலளித்தார். அம்பாந்தோட்டையின் எதிர்கால வளர்ச்சி என்பது ராஜபக்ஷ பதவியிலிருக்கும் காலத்துடன் தொடர்புபட்டதாகும்.

அம்பாந்தோட்டை மிகவும் வறட்சியான பிரதேசமாக உள்ளதால் இந்த வறட்சியானது இங்கு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்குத் தடையாக உள்ளது. நீர் வழங்கல் அரிதாகக் கிடைப்பதால் இங்கு பெரியளவிலான திட்டங்களை மேற்கொள்வதில் சிரமங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும் எனக் கருதப்பட்டது.

### சவால்களை எதிர் கொள்ளும் விளையாட்டு அரங்கு

இலங்கையின் தரநியமங்களின்படி, அம்பாந்தோட்டை வழமைக்கு மாறான தரைத் தோற்றத்தைக் கொண்டுள்ளது. நான் அம்பாந்தோட்டையில் பயணித்துக் கொண்டிருந்த போது, பிறிதொரு சம்பவம் எனக்கு நினைவுக்கு வந்தது. அதாவது இடம்பெறவுள்ள பொதுநலவாய அமைப்பின் விளையாட்டுப் போட்டியை அம்பாந்தோட்டையில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2010இல் பொதுநலவாய அமைப்பின் விளையாட்டுப் போட்டியை புதுடில்லியில் நடத்தும் போது, அதற்காக இந்திய அரசு பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்ததை நான் பார்த்துள்ளேன். இந்தியாவுடன் ஒப்பிடும்போது, அம்பாந்தோட்டை அதாவது இன்னமும் முழுமையான நகரமாக மாறாத ஒரு இடத்தில் எவ்வாறான பொதுநலவாய அமைப்பின் விளையாட்டுப் போட்டியை நடத்த முடியும் என கற்பனை செய்துபார்த்தேன். நல்வாய்ப்பாக, 2011இன் இறுதியில் ஆஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ற்றில் பொதுநலவாய அமைப்பின் விளையாட்டுப் போட்டியை நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

நாங்கள் நீண்ட நேரம் பயணித்த பின்னர், அம்பாந்தோட்டை விளையாட்டரங்கைச் சென்றடைந்தோம். அதனைச் சூழவிருந்த காடுகளின் நடுவில் இரண்டு பெரிய மின் விளக்குகள் பொருத்தப்பட்டிருப்பதைக் கண்டோம். அந்த விளையாட்டரங்கில் 'மஹிந்த ராஜபக்ஷ அனைத்துலக துடுப்பாட்ட விளையாட்டரங்கு' என ஆங்கிலத்தின் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது.

இந்த விளையாட்டரங்கை பராமரித்தல் என்பது 'சவால்மிக்க' ஒன்று என தாசிம் என்னிடம் தெரிவித்தார். நான் அம்பாந்தோட்டைக்கு பயணம் செய்து சில மாதங்களின் பின்னர், தாசிம் தெரிவித்த அந்தக் கூற்று உண்மை என்பது நிரூபிக்கப்பட்டது. இலங்கையின் தேசிய துடுப்பாட்ட நிர்வாக சபையான இலங்கை துடுப்பாட்ட சபையானது, அம்பாந்தோட்டை விளையாட்டரங்கைப் பராமரித்தல் என்பது சமாளிக்க இயலாத ஒன்று என அறிவித்திருந்தது. இதனால் மஹிந்த ராஜபக்ஷ அனைத்துலக துடுப்பாட்ட விளையாட்டரங்கையும் இன்னும் இரண்டு அரங்குகளையும் இலங்கை இராணுவத்திடம் கையளிப்பதாக இலங்கை துடுப்பாட்ட சபை அறிவித்திருந்தது.

### தொழில் வாய்ப்பு சீனர்களுக்கு

நாங்கள் அம்பாந்தோட்டைக்குப் பயணம் செய்த அன்றைய நாள் பிற்பகலில், அம்பாந்தோட்டை துறைமுகத்தை எதிர்நோக்கியவாறு உள்ள உணவகங்களில் ஒன்றின் உரிமையாளரான .மன்சூரிடம், ''அம்பாந்தோட்டையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகள் தொடர்பான கருத்துக்களைக் கூறுமாறு'' வினவியபோது, ''இவ்வாறான அபிவிருத்திகள் மூலம் நாங்கள் எந்தத் தொழில் வாய்ப்புக்களையும் பெற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் சிமெந்துக் கட்டடங்களைக் கட்டுகிறார்கள். ஆனால் எங்களது நிலை என்ன?'' எனப் பதிலளித்தார்.

மன்சூரின் உணவகத்திலிருந்து சில நூறு மீற்றர்கள் தொலைவில் மிகப் பெரிய கப்பற்துறைமுகம் கட்டப்பட்டுக் கொண்டிருந்தது.

அத்துறைமுகம் சீனர்களின் ஆதரவுடன், மிகப் பெரிய கடனுதவியுடன் கட்டப்பட்டுக் கொண்டிருந்தது. இத்திட்டத்தை நிறைவேற்ற சீனத் தொழிலாளர்கள் பயன்படுத்தப்பட்டனர். 50,000 வரையான சீனத் தொழிலாளர்கள் தற்போது அந்தப் பிரதேசத்தில் பணிபுரிவதாக கூறப்படுகிறது. இந்தத் துறைமுகம் 2012 யூனில் 'அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ அனைத்துலக துறைமுகம்' எனப் பெயர் சூட்டப்பட்டது. அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் 93 கப்பல்கள் ஏற்கனவே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன், இன்னும் சில வாரங்களில் 100வது கப்பல் நிறுத்தப்படும் எனவும் இலங்கை ஊடகமொன்று தெரிவித்திருந்தது.

ராஜபக்ஷ தொடர்ந்தும் தனது சொந்த இடத்தை அபிவிருத்தி செய்வதற்கு நிதி ஒதுக்கிவருகிறார்.

கடந்த மார்ச்சில், அம்பாந்தோட்டையில் ஜனாதிபதி ராஜபக்ஷ நாட்டின் மூன்றாவது அனைத்துலக துறைமுகத்தைத் திறந்து வைத்தார்.

இதற்கு 'மத்தள ராஜபக்ஷ அனைத்துலக விமானநிலையம்' எனப் பெயரிடப்பட்டது. அம்பாந்தோட்டையைச் சேர்ந்த பலர் தமது இடத்தை அடையாளங் கண்டுகொள்ள முடியாத அளவுக்கு அம்பாந்தோட்டை பெரும் மாற்றமடைந்துள்ளது. ''நாங்கள் எமது சொந்த இடத்தில் அந்நியர்கள் போல் வாழவேண்டிய நிலையேற்படும்'' என .மன்சூர் தெரிவித்தார்.

*(நன்றி: புதினப்பலகை)*

கந்தவனம் கோணேஸ்வரன்



வடக்குத் தேர்தல்

# அரசுக்குச் சவால் தமிழருக்கு தருணம்

மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்குக்கான சுட்டெண்கள் வழங்கப்பட்டு பரப்புரைகள் ஆரம்பிக்கப்பெறும் காலமிது. எண்கள் வெளியாகியதும் ஒவ்வொரு வேட்பாளரும் தனது கட்சிச் சின்னத்துக்கான வாக்கையும், தனக்கான விருப்பு வாக்கையும் முன்னிறுத்திப் பரப்புரையைத் தொடங்குவார்கள். ஒரு வாக்காளருக்குத் தான் விரும்பிய கட்சிச் சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டு அக்கட்சியைத் தெரிவுசெய்யும் உரிமையும், விரும்புமிடத்து அக்கட்சி சார்ந்த எந்த வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்தும் உரிமையும் உள்ளன. கட்சிசார்ந்த வேட்பாளரைத் தெரிவு செய்யும்போது ஒரு வாக்காளர் மூன்று விருப்பங்களைப் பயன்படுத்தலாம். இதன்படி தான் விரும்பும் வேட்பாளர்களின் இலக்கங்களுக்கு மேலே புள்ளடி இடுவதன் மூலம் தனது விருப்பத்தை வெளிப்படுத்தலாம். இவ்வாறு ஒரு வாக்காளரால் மூன்று விருப்பங்களை மாத்திரமே வெளிப்படுத்த முடியும். மூன்றுக்கும் மேற்பட்ட வேட்பாளர்களுக்கு ஒரு வாக்காளர் தனது விருப்பத்தைத் தெரிவிப்பாரேயானால், அவரது விருப்பு வாக்கு செல்லுபடியற்றதாகி எந்த வேட்பாளருக்கும் சேராமல் போய்விடும். எவ்வாறெனினும், முதலில் தாம் விரும்பும் கட்சியின் சின்னத்துக்கே வாக்களிக்க வேண்டும். அது தவறினும் விருப்பு வாக்குகள் செல்லுபடியற்றதாகிவிடும்.

### வடமாகாண சுவரெங்கும் நீலவர்ண சுவரொட்டிகள்

இது ஒரு புறமிருக்க, தேர்தலின் போது வேட்பாளர் சார்பாகவோ, கட்சியின் சின்னம் தொடர்பாகவோ பிரச்சார சுவரொட்டிகள் ஒட்டுவது தடைசெய்யப்பட்டு இருக்கின்றபோதிலும், அத்தடையிலிருந்து ஆளுங்கட்சி வேட்பாளர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதுபோல் வடமாகாணமெங்கும் நீலவர்ணச் சுவரொட்டிகள், வேட்பாளர்களின் படங்களுடன் தெருச்சுவர்களிலெல்லாம் சிரித்துக்கொண்டு இருக்கின்றன. இது ஒருமுறையற்ற பரப்புரையாகும். தேர்தல் விதிமுறைகளை மீறும் செயற்பாடாகும். எவராவது வீட்டுக்காரர் கோபங்கொண்டு தனது சுவரில் ஒட்டப்பட்டிருக்கும் நீலச்சுவரொட்டிகளை அகற்ற முனைந்தால் அது தேர்தல் வன்முறையின் பாற்பட்டாலும் வியப்படைவதற்கில்லை.

அரசின் பணம் வேட்பாளர்களுக்குத் தாராளமாக இறைக்கப்பட்டிருக்கிறது என்பதன் தொடக்க அடையாளம் தான் மிகப்பெரும் எண்ணிக்கையிலான சுவரொட்டிகள். அவர்கள் வெல்வதற்காக அரசு எப்படியும் செயற்படக் காத்திருக்கிறது என்பதற்கான அறிகுறி இது.

### ஆரோக்கியமான தேர்தல் நடைபெறுமா?

தேர்தல் காலங்களில் வேட்பாளர்கள், சின்னங்கள், கட்சிகள் தொடர்பான சுவரொட்டிகள் ஒட்டப்படக்கூடாது என்பது அரசு விதித்த விதிமுறைதான். ஆனாலும், இந்த விதிமுறை தனது தரப்பு வேட்பாளர்களுக்கு மட்டும் பொருந்தாதது என்பதுபோல அரசு செயற்படுவது ஆரோக்கியமான தேர்தல் வெளிப்பாடாக இருக்க மாட்டாது. வேறு எக்கட்சி சார்ந்த வேட்பாளராவது ஒரு சுவரொட்டியை ஒட்டினால்கூட மோப்பம் பிடித்து வீடு தேடிவந்து தங்கள் கண்டிப்பான சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொலிஸார்கூட அரசசார்பு வேட்பாளர் விடயத்தில் வசதியாகத் தமது கடமைகளை மறந்து சுகமாகக் கண்களை மூடிக் கொண்டிருக்கின்றனர்.

இவை தேர்தல்கள் உரிய நெறிமுறை சார்ந்து நடைபெறுமா என்ற ஐயத்தைத் தோற்றுவிக்கின்றது. ஆரம்பமே இப்படியென்றால் அடுத்த நடவடிக்கைகள் எப்படியோ என்று ஏனைய கட்சி வேட்பாளர்கள் அச்சங்கொள்வது நியாயமற்றது எனக் கருதமுடியாது.

### வேட்பாளரைக் குறிவைக்கும் புலனாய்வுத் துறையினர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் பற்றிய தரவுகளை அவரவர் வீட்டுக்கே சென்று புலனாய்வுத்துறை திரட்டி வருவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளமையையும் கருத்தில்கொள்வது பொருத்தமாக அமையும்.

வேட்பாளர்கள் பற்றிய தகவல்களைப் பெறவேண்டுமாயின், இராணுவத் தரப்போ அல்லது புலனாய்வுத் தரப்போ தேர்தல் அலுவலகத்தில் ஒரே தடவையில் முழுமையாகப் பெற்றுக்கொள்ள வாய்ப்பிருந்தும், தமது வேட்பாளர்களை மட்டும் குறிவைத்து வீடுகளுக்குச் சென்று விவரங்களைத் திரட்டுவது ஒரு வகையான பயமுறுத்தல் என்றே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கருதுகின்றது. ஆனால், இராணுவத் தரப்போ அதனை அடியோடு மறுத்துள்ளது. அவ்வாறு செயற்படுவதற்கான தேவை எதுவும் தமக்கு இல்லை என்றும் அடித்துச் சொல்லியுள்ளது. எவ்வாறெனினும், தகவல்கள் சேகரிக்கப்படுவது உண்மையாக இருப்பின், அது சகல வேட்பாளர்களுக்கும் பொருந்துகின்ற ஒரு செயற்பாடாக அமைய வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களை மாத்திரம் குறிவைப்பது நேர்மையான புலனாய்வாகக் கருதப் படத்தக்கதல்ல என்பதுதான் உண்மை.

### பணத்தைத் தண்ணியாய் இறைக்கும் அரச தரப்பு வேட்பாளர்கள்

அரசசார்புக் கட்சி வேட்பாளர்களின் ஆரம்பச் சுவரொட்டிகளே பெருமெடுப்பில் காணப்படுவதால், அவர்கள் தேர்தலில் பணபலத்தைப் பயன்படுத்த வல்லமையுடையவர்களாக இருக்கிறார்கள் என்பது வெளிப்படை. ஒன்றில் இது வேட்பாளர்களின் சொந்தப்பணமாக இருக்கவேண்டும் அல்லது ஆளுந்தரப்பால் வழங்கப்படுகின்ற பணமாக இருக்கவேண்டும். இவர்களுக்கு மாகாணசபைக்குச் செல்வதற்கான வாய்ப்புகள் கிடைக்கலாம் அல்லது கிடைக்காமலும் போகலாம். ஆனால், எது நிகழ்ந்தாலும் செலவழித்த பணம் திரும்பி வரப்போவதில்லை. எனவே, இவ்வாறு செலவு செய்யப்படும் பணத்தை அவர்கள் எவ்வாறு ஈடுகட்டப்போகிறார்கள் என்பது ஒரு நியாயமான கேள்விதான். அரசசார்புக் கட்சியின் வேட்பாளராக நின்று தேர்தலில் தோல்வியுற்றாலும், செலவழித்த பணத்தைப் பல மடங்காகப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு எப்போதும் பிரகாசமாகவே இருந்து வந்திருக்கிறது. அரச உத்தியோகம் பெற்றுத்தருவதாக மக்களிடம் கூறி பணமோசடி செய்தல், அனுமதிப்பத்திரம் பெற்றுத் தருவதாகப் பணம் பெறல், கொந்தராத்து வேலைகளைப் பெற்றுக் கொடுத்துத் தரகுப் பணம் உழைத்தல், பாதுகாப்புத் தரப்பாரிடமோ, பொலிஸாரிடமோ சிக்கிக் கொள்பவர்களை மீட்டுத் தருவதாகக் கூறி அப்பாவி மக்களை ஏமாற்றுதல் என்பவை போன்ற பணம் உழைக்கும் பல வழிகள் அவர்கள் முன் விரிந்து கிடக்கின்றன.

### புதிய அவதாரங்கள்

இன்று வடபகுதியில் வெற்றிலைச் சின்னத்தின் வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டிருக்கிறார்கள். இணக்க அரசியலுக்கூடாக தமிழ் மக்களின் குறைகளைத் தீர்த்துவைப்போம் என இவர்கள் பிரகடனம் செய்யக்கூடும். முள்ளிவாய்க்கால் அவலத்துக்கு ஜனாதிபதி காரணமல்லர்; தமிழர்களின் பிழையான அரசியலே காரணம் என்றும் இவர்கள் அடித்துச் சொல்லக்கூடும். இவையெல்லாம் தங்கள் நலனுக்காக தமிழர் தேசியத்தை விற்றுப்பிழைக்கும் போக்கின் விளைவுகளேயாகும்.

எண்பதாயிரம் தமிழ்ச் சகோதரிகள் பொட்டிழந்ததை எண்ணிப்பார்க்காதவர்கள் இவர்கள். நான்கரை இலட்சம் மக்கள் முள்ளிவாய்க்காலில் சிக்குண்டிருந்தபோது ஆக எழுபதாயிரம் பேரே அங்கு இருக்கிறார்கள் என்று அரசு சொன்ன பொய்யைத் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்தவர்கள் இவர்கள். சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் விமானக் குண்டு வீச்சாலும் எறிகணை வீச்சாலும் அழிக்கப்பட்டபோது அணுவளவேனும் கவலைப்படாதவர்கள் இவர்கள். கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான தமிழர் சொத்துகள் நாசம் செய்யப்பட்டபோது பவ்வியமாக கைகட்டி வேடிக்கைபார்த்தவர்கள் இவர்கள். இன்று தமிழ்மக்களைப் பாதுகாக்க அவதாரம் எடுத்ததுபோல் தேர்தலில் முன்னிற்கிறார்கள். இவர்கள் வெற்றி பெற்றால்தான் அரசு உலக நாடுகளிடையே தப்பிப் பிழைக்கலாம் என்ற நிலை இருப்பதால், அரச அமைச்சர்களும் இவர்களை நல்லவர்கள் என்றும் தமிழர்களுக்கு வாய்த்த வரப்பிரசாதம் என்றும் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களூடாக தமிழ்மக்களை வளப்படுத்த அரசு காத்துக்கொண்டிருப்பதாகச் சொல்லிக்கொண்டிருக் கிறார்கள். சிரித்துச் சிரித்தே வடபகுதியை நீலவர்ணமாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

### தமிழ் மக்கள் விழிப்போடு செயற்பட வேண்டிய காலமிது

கிளிநொச்சி அறிவியல் நகர்வரை ரயிலை உருட்டிவந்து வேடிக்கைக் காட்டுகிறார்கள். வவுனியாவில் ஆடைத்தொழிற்சாலையைத் திறந்து வைத்து தமிழ் மக்களின் ஒரே ஆபத்பாந்தவர்கள் தாங்கள் தான் என்று சொல்லிப்பார்க்கிறார்கள். பட்டதாரிகள் எவரும் இனி மேல் கவலைப்படத் தேவையில்லை, அடுத்தவாரமே ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்போகிறோம் என்கிறார்கள். வன்னியில் சில கிராமங்களுக்கு உடனடியாக வெளிச்சம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது எனத் தெரிவிக்கிறார்கள். முப்பதாண்டு காலமாகத் தமிழ் இனத்தைப் பல்குழற் பீரங்கியால் வதைத்தவர்கள் இப்போது தேர்தலுக்காக வடபகுதி மக்கள்மேல் அக்கறை கொண்டுள்ளவர்கள் போல் நடிக்கத் தொடங்கியுள்ளார்கள்.

வடபகுதித் தேர்தல் முடிவுகள் பற்றி தான் கவலைப்படப்போவதில்லை என்று சொல்லிக்கொண்டே ஜனாதிபதி வடபகுதி மக்களின் வாக்குகளை வெற்றிலைக்குப் போட வைப்பது எப்படி என்றுதான் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்.

போர்க்குற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற அழுத்தங்கள் ஜனாதிபதியை இறுக்கிப் பிடிக்கின்றன. மனித உரிமை மீறல்கள் இலங்கையில் தொடர்ந்தும் இடம்பெறுவதாக அறிக்கைகள் வெளியாகி அரசைத் தலைகுனிய வைக்கின்றன. எதிர்வரும் செப்டம்பரில் இடம்பெறவிருக்கும் மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கைப் பிரச்சினை ஆராயப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயம் இதனை உறுதிப்படுத்துகிறது. இவ்வளவு சிக்கல்களுக்கும் ஒரே காரணம் இலங்கை அரசு தமிழர்களை வதைத்தமைதான். முள்ளிவாய்க்கால் மனித அவலங்களும் இன்றுவரை தமிழரை ஏமாற்றி அரசியல் செய்யும் கபடதந்திரங்களுமே இலங்கை அரசை இந்நிலைக்கு கொண்டுவந்து நிறுத்தியுள்ளன. வடமாகாணசபைத் தேர்தல் மூலம் இவையெல்லாவற்றுக்கும் பதில் சொல்ல இலங்கை அரசு திட்டமிட்டு வருகிறது.

வடமாகாணசபைத் தேர்தலில் அரச கட்சி வெற்றிபெறுமாயின் அல்லது கணிசமான வாக்குகள் பெறுமாயின் தாங்கள் தமிழர்களுக்கு எவ்வித துன்பத்தை இழைக்கவில்லை என்றும் சர்வதேச நாடுகள் திட்டமிட்டே பொய்ப்பரப்புரைகள் மேற்கொண்டு வருகின்றன என்றும் கூறி குற்றச்சாட்டுகளிலிருந்து தப்பிக்கொள்ளலாம் என அரசு எதிர்பார்க்கிறது. அத்தகையதொரு வாய்ப்பு அரசுக்குக் கிடைக்குமாயின், தமிழர்களின் முயற்சிகள் அத்தனையும் வீணாகிவிடும். தமிழன் என்ற ஒரே காரணத்துக்காக அழிக்கப்பட்ட உயிர்கள் அத்தனையும் பெறுமதியற்றனவாகிவிடும். காணி, பொலிஸ் அதிகாரங்களற்ற ஒரு மாகாணசபை, தமிழர்களுக்குப் போதுமானது என்றாகிவிடும்.

இது தமிழர்களுக்கு நல்ல வாய்ப்பு. அரசின் அடக்குமுறைகளுக்கெதிராக தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தச் சிறந்த தருணம்.



# கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ் நிறுவனம்

> நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ் உற்பத்திகளை இலங்கையின் வர்த்தக குறியீடாக 2020ஆம் ஆண்டு சர்வதேச மட்டத்துக்கு கொண்டு செல்வதை இலக்காக வைத்தே இந் நடவடிக்கை முன்னெடுக் கப்படுகின்றது.

இலங்கையின் முதற்தர மூலிகை உற்பத்தி நிறுவனமான 'நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ்' புதிய விற்பனை நிலையம் ஓகஸ்ட் 1ஆம் திகதி கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வெளிச் செல்லும் பகுதியில் திறந்து வைக்கப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்ற வைபவத்திற்கு அமைச்சர்கள், அரச அதிகாரிகள், விமான நிலையம் மற்றும் விமானசேவை இலங்கை நிறுவனத்தின் தலைவர் பிரசன்ன விக்கிரமசூரிய, நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறுவனத்தின் தலைவரும் முகாமைத்துவ பணிப்பாளருமான சமந்த குமாரசிங்க உட்பட பலர் கலந்துகொண்டனர்.

நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ் உற்பத்திகளை இலங்கையின் வர்த்தக குறியீடாக 2020ஆம் ஆண்டு சர்வதேச மட்டத்துக்கு கொண்டு செல்வதை இலக்காக வைத்தே இந் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. விமான நிலைய வெளிச் செல்லும் பகுதியில் அமைந்துள்ள 'நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ்' விற்பனை நிலையம் ஊடாக இலங்கைக்கு வருகை தந்துவிட்டு மீண்டும் செல்லும் வெளிநாட்டவர்களை இலக்கு வைத்தே இந்த ஊக்குவிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் விற்பனை நிலையமொன்றை அமைக்க பல ஆண்டுகளாக முயற்சிகளை மேற்கொண்டதாகவும் மஹிந்த சிந்தனை மூலம் அது யதார்த்தமானதாகவும் நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறுவனத்தின் தலைவரும் முகாமைத்துவ பணிப்பாளருமான சமந்த குமாரசிங்க குறிப்பிட்டார். உள்ளூர் வர்த்தகர்களை ஊக்குவிப்பதற்கு தற்போதைய அரசு செயற்பட்டு வருவதாகவும் அதனாலேயே விமான நிலையத்தில் நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ் விற்பனை நிலையமொன்றை ஆரம்பிக்க கிடைத்ததாகவும் அவர் தெரிவித்தார். (த)

# திசைகாட்டி நிறுவனத்தின் விசா ஆலோசனை சேவை



யாழ்ப்பாணம், ஓக. 13

இலங்கையிலேயே முதன்முதலாக நவீன மயப்படுத்தப்பட்ட விசா ஆலோசனை சேவையை திசை காட்டி நிறுவனம் ஆரம்பித்துள்ளது என்று நிறுவனத்தின் குழுமத் தலைவர் எஸ்.செல்வராஜ் தெரிவித்தார். நவீனமயப்படுத்தப்பட்ட ஆலோசனை சேவையின் வாடிக்கையாளர் ஒருவரை இணைத்துக் கொள்ளும் நிகழ்வு நேற்று முன்தினம் நிறுவனத்தில் இடம்பெற்றது. இதன்போது தமது நிறுவனத்தின் புதிய திட்டம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த இரண்டரை வருடங்களாக விசா ஆலோசனைச் சேவையை வழங்கிவரும் திசைகாட்டி நிறுவனம் தற்போது நவீனமயப்படுத்தப்பட்ட விசா ஆலோசனை சேவையை ஆரம்பித்துள்ளது.

இந்த நவீனமயப்படுத்தப்பட்ட சேவையில் வாடிக்கையாளர்களுக்கு ஆரம்பத்தில் விசா என்பது நிச்சயமற்றது. என்பதை எழுத்து மூலமாக அறிவுறுத்திய பின்னரே ஆலோசனை தொடர்பில் வாடிக்கையாளுடன் கலந்துரையாடப்பட்டு வருகிறது. அத்துடன் சமர்ப்பிக்கப்படும் விசா ஆலோசனை விண்ணப்பம் தொடர்பாக இறுதி முடிவு கிடைக்கும் தினத்தை குறிப்பிட்டு பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது.

எனினும் எமது சேவையை விரிவுபடுத்தப்பட்ட போதும் தொழில் அபிவிருத்தியை மேற்கொள்ள வங்கிகள் எமக்கு உதவ முன் வரவில்லை எனவும் தெரிவித்தார்.(த-14)

# SLIIT ஏற்பாட்டில் நிகழ்வு




கடந்த 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற Robofest நிகழ்வின் மாபெரும் வெற்றியைத் தொடர்ந்து, SLIIT கல்வி நிலையத்தின் கணினி பிரிவின் மூலம்; தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக இவ்வருடமும் CODEFEST 2013 நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

CODEFEST ஆனது மாணவர்களின் திறமைகள் மற்றும் இலங்கை யின் மென்பொருள் அபிவிருத்தி துறைக்கு உதவிகளை வழங்கும் நோக்கில் நாடுமுழுவதும் நடத்தப்படுகின்ற மென்பொருள் போட்டியாகும். இவ்வகையான போட்டிகளை நடத்தி நாட் டினை அறிவுசார் மையமாக முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான பங்களிப்பினை வழங்குவதே SLIIT இன் எதிர்பார்ப்பாகும். எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி இறு திப் போட்டிக்கு இணையாக நடைபெறவுள்ள Mini Hackathon மற்றும் புதிர் வினா விடை போட்டியில் இடைநிலை பாடசாலை மற்றும் மூன்றாம்நிலை மட்ட மாணவர்கள் பங்குபற்ற முடியும். வரையறுத்த கற்கை வெளிப்பாடுகளை எய்துவதற்காக பங்குபற்றுநர்கள் அனைவரும் தொடர்பாடல் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி அதன் மூலம் மாண வர்களின் அறிவை விருத்தி செய்யவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இடைநிலை பாடசாலை பிரிவிற்கான புதிர் வினா விடை போட்டியானது பாடசாலை அணிகளுக்காக நடைபெறும் பட்டறைகளில் ICT பாடத்திட்டம் அடிப்படையில் அணியினர் கேள்வி கேட்கும் போது நடைபெறவுள்ளது. சிறந்த 10 அணிகள் இரண்டாம் சுற்றுக்கு தெரிவு செய்யப்படவுள்ளதுடன், மாபெரும் இறுதிச்சுற்றுக்கு 5 அணிகள் தேர்ந்தெடுக்கப்படும். சிறந்த முதல் மூன்று அணிகளுக்கு விருதுகள் மற்றும் ரூ80,000, ரூ.60,000 மற்றும் ரூ.40,000 பெறுமதியான பணப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. மேலும் சிறந்த புத்தாக்க மற்றும் ஆக்கத்திறன் வாய்ந்த மென்பொருள் ஒன்றினை உருவாக்கும் அணிகளுக்கு இரண்டு விருதுகளும் வழங்கப்படவுள்ளன.



இலங்கை வங்கியின் 74ஆவது ஆண்டு நிறைவையொட்டி மானிப்பாய் இலங்கை வங்கிக்கிளையில் சிறுவர் சேமிப்புக்கணக்கு வைத்திருக்கும் சிறுவனுக்கு வங்கியின் முகாமையாளர் ஜி.சகாதேவன் பரிசுப் பொருள்களை வழங்கினார். (த-100)

# யாழ். நகரில் முதன்முதலாக மோட்டார் பந்தய நிகழ்வு

யாழ். நகரத்தில் முதன்முதலாக இடம்பெறவுள்ள மோட்டார் பந்தய நிகழ்வான Jaffna Speed Festival 2013 எதிர்வரும் செப்ரெம்பர் 14 மற்றும் 15ஆம் திகதிகளில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இலங்கை மோட்டார் வாகன விளையாட்டு சங்கம் மற்றும் இலங்கை மோட்டார் சைக்கிள் விளையாட்டு சம்மேளனம் ஆகியவற்றின் மூலம் வழங்கப்பட்ட நிகழ்வு ஏற்பாட்டு அனுமதிப்பத்திரத்தின் கீழ் மோட்டார் பந்தய அமைப்பு மற்றும் ஆசிய மோட்டார் பந்தயக் கழகம் ஆகியவற்றுடன் இணைந்து கார்ல்டன் மோட்டார் விளையாட்டு கழகம் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கைப் பிரஜைகள் மற்றும் இலங்கையில் வசிக்கும் உரிமையைக் கொண்டுள்ள எவரும் இந்த மோட்டார்ப் பந்தய நிகழ்வில் கலந்துகொள்ளும் தகைமையைக் கொண்டுள்ளதுடன், இது இலங்கை மோட்டார் வாகன விளையாட்டு சங்கத்தின் வருடாந்த நிகழ்வுகளில் ஒன்றாகவும் இடம்பெற்றுள்ளது.

யாழ். நகரிலிருந்து ஆரம்பிக்கும் இந்த மோட்டார் பந்தய ஓடுபாதையானது 200 கிமீ வரையான மொத்த தூரத்துடன் அமைந்துள்ளதுடன், பல்வேறு கட்டங்களாக போட்டிகள் இடம்பெறவுள்ளன. இது விசேட கட்டங்களையும், போக்குவரத்துக் கட்டங்களையும் உள்ளடக்கியிருக்கும்.

# படு மோசமாகின தற்காலிக வீடுகள்



அக்கராயன், ஓக.13
கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியமர்வின்போது வழங்கப்பட்ட தற்காலிக வீடுகள் தற்போது மோசமான நிலையை அடைந்துள்ளதாக அவற்றில் வசிக்கும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நிரந்தர வீடுகள் கிடைக்கும் வரை ஒருவருட காலம் வாழ்வதற்கென இந்த தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டன. ஆனால் 3 வருடங்கள் கடந்த நிலையிலும் நிரந்தர வீடுகள் வழங்கப்படாததால் மீள்குடியமர்ந்த மக்கள் இந்தத் தற்காலிக வீடுகளிலேயே தொடர்ந்தும் வசித்து வருகின்றனர்.

பல வீடுகளின் மரங்கள் உக்கிய நிலையில் முறிந்து வீழ்ந்துள்ளன. மேலும் பாதிக்கப்பட்ட நிலையிலிருந்த சில வீடுகள் பலத்த காற்றினால் தூக்கி வீசப்பட்டுள்ளன.

மாரி காலம் ஆரம்பிக்கவுள்ள நிலையில் தற்காலிக வீடுகளில் வசிக்கும் குடும்பங்கள் பல்வேறு இடர்களை எதிர்கொள்ள வேண்டி வருமென அஞ்சப்படுகிறது. (க-18)

### கிளிநொச்சி கல்வி வலயத்தில்

## மாணவர்களின் இடைவிலகல் அதிகமான கிராமங்கள் அடையாளம் காணப்பட்டன

அக்கராயன், ஓக. 13
கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலைகளிலிருந்து அதிகளவில் மாணவர்கள் இடைவிலகும் கிராமங்களாக ஆனைவிழுந்தான் குளம், சாந்தபுரம் ஆகியன அடையாளம் காணப்பட்டுள்ளன.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் முறைசாராக் கல்விப் பிரிவு திரட்டிய விவரங்களிலிருந்து இது தெரிய வந்துள்ளது.

சாந்தபுரம், ஆனைவிழுந்தான் ஆகிய இரு கிராமங்களும் வறிய மக்களை அதிகளவு கொண்ட கிராமங்களாகும். இங்கு அடிப்படை வசதிகள் எவையும் இல்லாத நிலையே காணப்படுகின்றது.

கிளிநொச்சியின் பல கிராமங்களிலும் பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலைகளை இணைப்பதற்கான முயற்சிகளில் யுனிசெப் நிறுவனத்துடன் இணைந்து வலயக் கல்விப் பணிமனை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-18)

## வவுனியா தெற்கில் வீதிகள் புனரமைப்பு

வவுனியா, ஓக. 13
உலகவங்கியின் நிதி உதவியுடன் வவுனியா தெற்கு பிரதேச சபையால் இங்குள்ள பல வீதிகள் புனரமைக்கப்படவுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

நீண்ட காலமாகவே இந்த வேலைகளை மேற்கொள்வதற்கான அனுமதி, நிதி என்பன கிடைக்காத நிலை காணப்பட்டது. தற்போது இவை கிடைத்துள்ளமையால் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தம்பனைக் குளம்வீதி, நெடுங்குளம் வீதி, சுடலை வீதி, அரசன் குளம் வீதி, சேமமடு உள்ளக வீதி பழைய சுந்தரபுரம் வீதி, புதுக்குளம் மூனாமடு வீதி, பம்பைமடு கிரியை மண்டபம் வீதி ஆகிய வீதிகளே புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கான ஆலோசனைக் கூட்டங்கள் மற்றும் கிராம மக்களுடனான கலந்துரையாடல் ஆகியவை இடம்பெற்று வருவதாகவும், இந்த வேலைத் திட்டம் பெருந்தொகை நிதிமூலம் நடைமுறைப்படுத்தப்படவிருப்பதால் சிறப்பான வகையில் நிறைவேற்றி வைக்கப்படும் எனவும் வவுனியா தெற்கு பிரதேசபை உறுப்பினர் பாக்கியநாதன் பார்த்தீபன் தெரிவித்தார்.

(க-421)

## நாய்க் கடியை கவனிக்காதவர் ஏற்பாக்கிச் சாவு

வளர்ப்பு நாய்க்குட்டி கடித்ததைப் பொருட்படுத்தாத குடும்பப் பெண் ஏற்பாக்கிஇறந்தார். சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை பூநகரியில் இடம்பெற்றது.

பூநகரி நல்லூரைச் சேர்ந்த சிறுபாகரன் இந்திரவதனி (வயது-35) என்னும் நான்கு பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்தார். 3 மாதங்களுக்கு வளர்ப்பு நாய்க் குட்டியினால் இவர் கடியுண்டார். ஆனால் உரிய சிகிச்சை பெறவில்லை. இதனால் ஏற்புவலி ஏற்பட்டு கிளிநொச்சி வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். (க-9)


## கிளிநொச்சிக்கான பரீட்சார்த்த ரயில் சேவை 18 ஆம் திகதி

கிளிநொச்சி, ஓக. 13
கிளிநொச்சிக்கான பரீட்சார்த்த ரயில் சேவை எதிர்வரும் 18ஆம் திகதி இடம்பெறுமென ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்திய அரசின் நிதியுதவியுடன் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரையான ரயில் பாதைப் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. கிளிநொச்சி வரையிலான பாதைப் புனரமைப்புப் பணி நிறைவடைந்துள்ளது.

நிரந்தரச் சேவை அடுத்த மாதம் முதலாம் திகதி ஜனாதிபதியால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கபபடவுள்ளது எனவும், இந்த வருட இறுதிக்குள் பளை வரைக்குமான சேவை விஸ்தரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ரயில் பாதையின் புனரமைப்பு வேலைகளுக்கான ஒரு தொகுதிப் பொருள்களுடன் ரயில் ஒன்று நேற்றுமுன்தினம் கிளிநொச்சிவரை பயணத்திருந்தது. (க-400)



கிளிநொச்சி மாவட்டம் வன்னேரிக்குளம் கிராமத்தில் மிதிவெடியகற்றும் செயற்பாடுகளுக்கு ஆயத்தமாகும் மிதிவெடியகற்றும் அணியினர். (க-18)

## சுதந்திரக் கட்சியின் மன்னார் அலுவலகம் உப்புக்குளத்தில் திறப்பு

மன்னார், ஓக. 13
சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மன்னார் மாவட்டத் தலைமைக் காரியாலயம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மன்னார் உப்புக்குளம் பகுதியில் இரண்டாவது தடவையாகத் திறந்து வைக்கப்பட்டது.

அமைச்சரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளருமான சுசில் பிரேம ஜெயந்த, கடற்றொழில் பிரதி அமைச்சர் சரத்குமார குணரட்ன, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் ஆகியோர் கலந்து கொண்டு அலுவலகத்தை திறந்து வைத்தனர்.

சுதந்திரக் கட்சியின் அங்கத்துவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கும் நிகழ்வும் அன்றைய தினமே மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மன்னார் மாவட்ட தலைமைக் காரியாலயம் அண்மையில் மன்னார் பெற்றா பகுதியில் திறந்து வைக்கப்பட்டது. அங்கு சில காலம் அரசியல் செயற்பாடுகளும் இடம்பெற்று வந்தன. பின்னர் நீண்ட நாள்களாக மூடப்பட்டுக் காணப்பட்டது குறித்த அலுவலகம்.

வடக்குத் தேர்தலையொட்டி புதிய நிர்வாகத்தின் கீழ் நேற்றுமுன்தினம் மீண்டும் இரண்டாவது தடவையாக மன்னார் உப்புக்குளம் பகுதியில் கட்சி அலுவலகம் வைக்கப்பட்டுள்ளது.

(க-12)

### மடு ஆலயத்துக்கு யாழ்ப்பாணத்திலிருந்து பஸ் சேவைகள்

மன்னார் மடுமாதா ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தையொட்டி விசேட பஸ் சேவைகள் இடம்பெறுமென இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாண டிப்போ முகாமையாளர் செ.குலபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்த விசேட பஸ் சேவைகள் யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருந்து நாளை 14 ஆம் திகதி காலை 9 மணி முதல் அடியார்களின் வருகைக்கு ஏற்ற வகையில் இடம்பெறவுள்ளன. இந்தச் சேவைகள் யாழ். மத்திய பஸ் நிலையத்திலிருந்து வவுனியா ஊடாக மடு மாதா கோயில் வரை இடம்பெறும் என்றார். (க)

## தண்ணீர் வசதிக்காக ஏங்கும் தருமபுரம் சந்தை வர்த்தகர்கள்

கிளிநொச்சி, ஓக. 13
தருமபுரம் பொதுச் சந்தைக்கு தண்ணீர் வசதியை ஏற்படுத்தித் தருமாறு சந்தை வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட தருமபுரம் பொதுச் சந்தை, கடந்த மூன்று வருடங்களாக அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் இயங்கி வருகின்றது. இதனால் இங்குள்ள வர்த்தகர்கள் முதற் கொண்டு நுகர்வோர் வரை பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது இந்தச் சந்தைக்குரிய தண்ணீர் விநியோகம் பவுசர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும், அது தேவைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமானதாக இல்லையென வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் சந்தைப் பகுதியை அண்மித்த பகுதியில் உள்ள கிணறுகளும் கடும் வறட்சி காரணமாக நீர் இல்லாத நிலையில் காணப்படுகின்றன. இதனால் சந்தையின் மீன்வாணிபத் தொகுதி, இறைச்சிக்கடை ஆகியவற்றைத் தினமும் கழுவித் துப்புரவு செய்வதற்கு முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் பல்வேறு சுகாதார நெருக்கடிகள் சந்தையில் தோன்றியுள்ளன.

இவ் விடயம் உரிய அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்ட போதிலும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் வர்த்தகர்களால் தெரிவித்துள்ளனர். (க-6)

**இந்தச் சந்தைக்குரிய தண்ணீர் விநியோகம் பவுசர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும், அது தேவைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமானதாக இல்லையென வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.**

## வேலைகளை பூர்த்தி செய்யுமாறு கோரிக்கை

துணுக்காய், ஓக.13
மழை காலத்துக்கு முன்னர் வீதியோரத்தில் அமைக்கப்பட்டு வரும் கால்வாய்களின் வேலைகளைப் பூர்த்தி செய்து தருமாறு மல்லாவி வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது மல்லாவியில் மழை பெய்து வருகின்றது. தொடர்ந்து மழை பெய்யுமாயின் வெள்ளம் வழிந்தோட முடியாத நிலையில் தமது வர்த்தக நிலையங்களினுள் வெள்ளம் புகுந்து விடுமெனவும் அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

மேலும் இந்தக் கால்வாய்களின் புனரமைப்புப் பணிகளை விரைவாக பூர்த்தி செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-415)

# நடமாடும் சேவையில் 260 பேர் பயனடைந்தனர்

வடமராட்சி, ஓக.13

யாழ். மத்தி சத்தியசாயி சேவா சமித்தி வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள மணல்காடு, குடத்தனை ஆகிய கிராமங்களில் நடத்திய இலவச நடமாடும் வைத்திய சேவையில் 260 பேர் சிகிச்சை பெற்றனர்.

ஞாயிற்றுக்கிழமை காலை மணல்காடு றோ.க.த.க.பாடசாலையில் நடத்தப்பட்ட சிகிச்சை முகாமில் 140 பேரும் பிற்பகல் குடத்தனை றோ.க.த. க.பாடசாலையில் நடத்தப்பட்ட சிகிச்சை முகாமில் 120 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்தச் சிகிச்சை முகாம் மூலம் மணல்காடு, குடத்தனை, பொற்பதி, குடத்தனை வடக்கு கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் பயனடைந்தனர்.

யாழ். மாவட்ட அரசினர் வைத்தியசாலைகளில் பணியாற்றும் டாக்டர்களான சிவதாரணி அபிராமி செந்தூரன், மனோகரன் ஆனந்தமூர்த்தி ஆகியோர் இந்தச் சிகிச்சை முகாம்களில் சிகிச்சைகளை வழங்கினார்கள். (ந-8)



கொழும்புத்துறை விநாயகர் ஆலய மண்டபத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் திருத்தலங்கள் பதினாறு என்னும் நூலை நூலாசிரியர் பொ. சிவப்பிரகாசம் வெளியிட்டு வைக்க ராம்ஜிட்ரேட் சென்ரர் உரிமையாளர் ச.சுரேஸ் பெற்றுக்கொள்கிறார். (ந-135)

# மிக மோசமாக பாதிக்கப்பட்ட ஆடியபாதம் வீதி

யாழ்ப்பாணம், ஓக.13

திருநெல்வேலி ஆடியபாதம் வீதி மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த வீதியைத் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் திருநெல்வேலி சந்தைப் பகுதியில் இருந்து கல்வியங் காடு ஊடாக செம்மணி வீதிச் சந்தி வரை வீதி குன்றும் குழியுமாக வாகனப் போக்குவரத்துக்கள் செய்ய முடியாத நிலையில் உள்ளது.

திருநெல்வேலி சந்தைக்கு முன்பாக வீதி மோசமான நிலையில் உள்ளது. அத்துடன் வாகன நெருக்கடியும் அதிகரித்துள்ளது. சந்தையின் கிழக்குப் பகுதியில் வாய்க்கால் வெட்டப்பட்ட நிலையில் உள்ளது. இதனால்வாகனங்கள் ஒன்றை ஒன்றுவிலத்திச் செல்வதிலும் சிரமங்களை எதிர்கொள்கின்றன. இதேவேளை வீதியைக் காப்பெற் வீதியாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் எனினும் பின்னர் அந்தத் திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவில்லை எனவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (வ-7)

# சனசமூக நிலையத்துக்கு தளபாடம் வாங்க உதவி

வடமராட்சி, ஓக. 13

வல்வெட்டித்துறை சன சமூக சேவா நிலையத்துக்கு தளபாடங்கள் கொள்வனவுக்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 75 ஆயிரம் ரூபாவை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஒதுக்கீடு செய்துள்ளார்.

அரை நூற்றாண்டு காலப் பழைமை வாய்ந்ததும், தனித்துவத்துடன் இயங்கி வருவதுமான இந் நிலையத்தின் பழைய கட்டடம் இடிக்கப்பட்டு அதே இடத்தில் நிக்கொட் திட்டத்தின் கீழ் புதிதாகக் கட்டப்பட்ட மாடிக் கட்டடத்தின் மேல் மாடியில் வல்வெட்டித்துறை சன சமூக சேவா நிலையம் இயங்கி வருகிறது.

நூலக மற்றும் சமூக அபிவிருத்தியில் சனசமூக நிலையங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கில் புதிய தளபாடக் கொள்வனவுக்கு இந் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (வ-8)

# குற்றத்தை ஒப்புக்கொண்ட நபர் பணத்தை ஒப்படைத்தார்

யாழ்ப்பாணம், ஓக. 13

50 இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்த நபரை பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியபோது குறித்த பணத்தை, உரியவரிடம் முழுமையாக ஒப்படைத்தார் அந்த நபர்.

காங்கேசன்துறைப் பிரிவைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் வெளிநாட்டிலிருந்து தனது மகன் அனுப்பிய பணத்தை தனது வங்கிக் கணக்கில் வைப்பிலிடுமாறு கூறி உறவினரான கொழும்புத்துறை, ஆனந்தன் வடலி வீதியைச் சேர்ந்த இளைஞனிடம் கொடுத்துள்ளார்.

அதனைப் பெற்றுச் சென்ற அந்த இளைஞர், குறித்த 50 லட்சம் ரூபா பணத்தைக் கொடுத்த பெண்ணின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடாது தனது வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டிருந்தார்.

குறித்த பெண், தனது வங்கிக் கணக்கில் பணம் வைப்பிலிடப்படாததைத் தெரிந்துகொண்டு நிலையில் அதை வங்கியில் வைப்பிலிடுமாறும் அல்லது தன்னிடம் திருப்பித் தருமாறும் பலமுறை கோரியிருந்தார். ஆனால் அந்த இளைஞன் பணத்தைத் திருப்பிக் கொடுக்கவில்லை.

அதனால் குறித்த பெண்மணி காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். அதனடிப்படையிலேயே குறித்த இளைஞனைப் பொலிஸார் கைது செய்தனர். பருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சந்தேகநபர் முற்படுத்தப்பட்டார். நீதிமன்றில் குறித்த 50 லட்சம் ரூபா பணத்தை குறித்த பெண்ணிடம் இளைஞர் ஒப்படைத்தார். அதனையடுத்து வழக்கு முடிவுறுத்தப்பட்டதோடு அவர் விடுதலையாகிச் சென்றார். (வ-4)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?



**மேடம்:** அடி மனதில் இருந்த பயம் விலகும். துணிச்சலுடன் சில முடிவுகளை எடுப்பீர்கள். அலைச்சல் தந்த வேலைகளை உடனே முடிப்பீர்கள். வெளிவட்டாரம் மகிழ்ச்சி தரும்.



**இடபம்:** உங்களின் குறிக்கோளை எட்டிப்பிடிக்க முயற்சிப்பீர்கள். அரசியல்வாதிகளின் சந்திப்பு கிட்டும். விருந்தினர்களின் வருகையால் வீட்டில் சந்தோஷம் கிட்டும். வேற்று மதத்தினரால் உதவி கிடைக்கும்.



**மிதுனம்:** அதிரடித் திட்டங்களைத் தீட்டுவீர்கள். உங்களைத் தேடிவந்து சிலர் உதவி கேட்பார்கள். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.



**கடகம்:** அதிகாரபூர்வமாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.



**சிங்கம்:** பளிச்சென்று பேசி எல்லோரையும் கவருவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும்.



**கன்னி:** ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். உங்களைப் பற்றி தவறாக சிலர் பேசினாலும் அதற்காக வருத்தப்படாதீர்கள். யாருக்கும் பணம், நகை வாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம்.

**நாளை**

ஆடி-29 புதன்கிழமை 14.08.2013
திதி: அட்டமி பி.இ. 12.15 வரை
நட்சத்திரம்: விசாகம் மு.இ. 11.40 வரை
சுபநேரம்: 04.35 - 06.05 வரை
இராகுகாலம்: 12.05 - 01.35 வரை



**துலாம்:** குடும்பத்தில் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. உறவினர், நண்பர்கள் சிலர் உதவி கேட்டு தொந்தரவு தருவார்கள். யாரையும் தூக்கி எறிந்து பேசுவார்கள்.



**விருச்சிகம்:** தைரியமான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள்.



**தனுசு:** மனக்குழப்பங்கள் விலகும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. உத்தியோகத்தில் வேலைப்பளு குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும்.



**மகரம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணப்பற்றாக்குறை விலகும். மனதுக்குப்பிடித்தவர்களை சந்தித்து மகிழ்வீர்கள். மன நிறைவுடன் சில வேலைகளை செய்து முடிப்பீர்கள்.



**கும்பம்:** எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலை வந்து நீங்கும். அடுத்தவர்கள் மனசு காயப்படும்படி பேசாதீர்கள். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தமடைவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக அவமானம் வந்து நீங்கும்.



**மீனம்:** நீங்கள் முன்பு செய்த உதவிகளுக்கு இப்பொழுது பாராட்டப்படுவீர்கள். உற்சாகமான பேச்சால் அனைவரையும் கவருவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | 2 | 4 | | | | 6 | |
| 4 | | 9 | 8 | 6 | 5 | | | 2 |
| | 6 | | 2 | | | 9 | | |
| | 8 | | 3 | | 2 | | | |
| 6 | 5 | | | | | | 9 | 3 |
| | | | 6 | | 4 | | 5 | |
| | | 1 | | | 6 | | 4 | |
| 8 | | | 9 | 4 | 3 | 6 | | 1 |
| | 4 | | | | 7 | 5 | | 9 |

## நேற்றைய சுடோக்கின் விடை


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 2 | 4 | 3 | 9 | 8 | 6 | 5 |
| 4 | 3 | 9 | 8 | 6 | 5 | 1 | 7 | 2 |
| 5 | 6 | 8 | 2 | 1 | 7 | 9 | 3 | 4 |
| 9 | 8 | 7 | 3 | 5 | 2 | 4 | 1 | 6 |
| 6 | 5 | 4 | 1 | 7 | 8 | 2 | 9 | 3 |
| 1 | 2 | 3 | 6 | 9 | 4 | 7 | 5 | 8 |
| 2 | 9 | 1 | 5 | 8 | 6 | 3 | 4 | 7 |
| 8 | 7 | 5 | 9 | 4 | 3 | 6 | 2 | 1 |
| 3 | 4 | 6 | 7 | 2 | 1 | 5 | 8 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நகரில் இருவேறு 'வேகங்கள்'



யாழ்.ஆரிய குளம் சந்தியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ கழிவு நீர் வாய்க்காலினுள் குதித்துவிட்டது. அதனால் அது சேதங்களுக்குள்ளாகியது. நேற்றுமுன்தினம் காலை சம்பவம் இடம்பெற்றது. பாரம்தூக்கி மூலமாக அது பின்னர் வெளியே எடுக்கப்பட்டது. (ஒ-4)



திருநெல்வேலி சிவன் புது வீதியில் வேகமாக வந்து கொண்டிருந்த ஓட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்ததில் அருகில் உள்ள மின்கம்பத்துடன் மோதி நின்றது. நேற்றுமுன்தினம் நடந்த இந்த விபத்தில் எவருக்கும் காயம் ஏதுமில்லை. (ஒ-7)

## நல்லூர் ஆலய சூழலில்

யாழ்ப்பாணம், ஓக. 13

நல்லூர் கந்தன் ஆலய இரண்டாம் திருவிழாவான இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆத்மிக சிந்தனையும், சமயச் சொற்பொழிவும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் 'திருப்புகழ் அமுதம்' என்ற பொருளில் ஆசிரியர் எஸ்.பாலச்சந்திரனின் சொற்பொழிவும், தொல்புரம் ஆதி முத்துமாரி அம்பாள் அறநெறிப் பாடசாலை, ஊர்காவற்றுறை தம்பாட்டி ஸ்ரீமுத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை,கைதடி பெரிய தம்பிரான் ஆலய அற நெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (ந-7)

★ ★ ★

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.45 மணிக்கு நடைபெறும் தெய்வீக இசையரங்கில் புல்லாங்குழல் இசையும், திருமுறைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளன.

புல்லாங்குழல் இசையை ஆர்.வசந்தன் வழங்க- பக்க வாத்தியங்களாக வயலின்கே.குகபரனும், மிருதங்கம் கே.கண்ணதாசனும், தவில் ஆர்.ஆனந்தகணேசனும் அணி செய்வர்.

திருமுறைக் கச்சேரியில் பாடல்களை எஸ்.நித்தியானந்தன் வழங்க பக்க வாத்தியங்களாக வயலின் திருமதி வனஜா ஈஸ்வரசர்மாவும் மிருதங்கம் எஸ்.செந்தூரனும் முகர்சிங் கே.நந்தகுமாரும் அணி செய்வர். (ந-86)

## செல்வச் சந்நிதியில் சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக. 13

தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயில் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் தினமும் காலை 10.30 மணிக்கு நடைபெற்று வரும் ஆன்மிக சொற்பொழிவு நிகழ்வு வரிசையில் இன்று செவ்வாய்க்கிழமை 'நடமாடும் கோயில்' என்னும் தலைப்பில் சைவப்புலவர் க.நித்தியத சீதரனும்-

நாளை புதன்கிழமை 'தாளைப் பணியும் தவம்' என்னும் தலைப்பில் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் ச.லலீசனும், நாளை மறுதினம் வியாழக்கிழமை 'மறைய நின்றுளான்' என்னும் தலைப்பில், ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் சி.நவரத்தினமும் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள். (ஒ-8)

## நகைகள் நிறுக்கும் தராசு படிகளுக்கு முத்திரையிடல்

யாழ்ப்பாணம், ஓக. 13

நகை வியாபாரத்தில் மற்றும் நகை அடைவு நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களில் நகைகள் நிறுப்பதற்கு பயன்படுத்தும் இலத்திரனியல் தராசுகள் மற்றும் தராசுப் படிகள் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இன்று முதல் 16 ஆம் திகதி வரை தொடர்ச்சியாக நான்கு தினங்கள் பரிசோதிக்கப்பட்டு முத்திரையிடப்படும்.

நகைகள் நிறுப்பதற்கு பயன்படுத்தப்படும் படிகள் மாவட்ட செயலகத்தில் மட்டுமே பரிசோதித்து முத்திரையிடப்படும். இதனால் சகல நிறுவனங்களும் தங்கள் தராசு படிகளுக்கு முத்திரையிட்டு கொள்ள வேண்டும் என்றும் மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (ஒ)

### சுந்தரர் குருபூசை

தேவாரங்களைப் பாடிய நாயன்மார்களில் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனாரின் குருபூசை மற்றும் சேரமான் பெருமாள் நாயனார் குரு பூசை இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளன.

இந்தக் குருபூசைகளையொட்டி கோயில்களில் விசேட பூசை வழிபாடுகள் இடம் பெறவுள்ளன. (ந-8)

### பதவியுயர்வு

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பொதுச் சுகாதார பரிசோதகராக வகுப்பு II 'அ' இல் கடமை புரியும் யாதவராசன் நக்கீரன் வட மாகாண சுகாதார அமைச்சின் கீழ். பொதுச் சுகாதார பரிசோதகர் வகுப்பு I இற்கு 2.1.2013 தொடக்கம் பதவி உயர்த்தப்பட்டுள்ளதாக வட மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார். (ஒ-288)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
08*03*1993
விண்ணக தந்தையிடம்
13*08*2011
சிவலிங்கம்
பிரிசாந்த் (சாள்ஸ்)

கலைமான் நீரோடைகளுக்காக ஏங்கித்
தவிப்பது போல் எம் நெஞ்சம்
உமக்காக ஏங்கித் தவிக்கின்றது ஐயா
ஈராண்டு கடந்தாலும் ஈர விழிகளுடன்

நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

அப்பா, அம்மா,
சகோதரர்கள்.

## நினைவுகள்

21 ஆம் ஆண்டு



முதலாம் ஆண்டு



வாரிவளவு,
காரைநகர்.
அமரர்கள்

இ.ச. பேரம்பலம்(E.S.P)

திருமதி மாணிக்கம்
பேரம்பலம் (E.S.P)

26.04.1926 - மலர்வு - 16.02.1932
19.01.1993 - உதிர்வு - 25.07.2012

எம்மைப் பெற்றுப் பேணிக்காத்து அன்பும் பாசமும் ஊட்டி வளர்த்த தெய்வங்களே
ஊர் புகழும் வாழ்வு தந்து ஏற்றமுற வைத்தீர்கள்!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எம் நெஞ்சமதில் உங்கள் நினைவுகள் என்றும் பசுமையானவை.

பாசமிகு அன்னையே! பாரினில் நீங்கள் இன்றில்லை சீரும் சிறப்புமாய் வாழ்ந்த உங்களை
ஊர் போற்றுகின்றது உறவுகள் போற்றுகிறது.
ஓர் ஆண்டு சென்றாலும் உங்கள் நினைவில் பேர் சொல்லும் பிள்ளைகள் நாம் பேதலித்து நிற்கின்றோம்.

பண்பின் சிகரமே! பாசத்தின் உறைவிடமே! ஆசையுடன் வளர்த்தெம்மை
ஆளாக்கிய அன்புத் தெய்வமே! அப்பாவே!
நேசமுடன் நிற்கின்றோம் நீங்கள் பிரிந்து இருபத்தொரு ஆண்டுகள் அகன்றும்

எம் நெஞ்சில் நிலையான தீபமான உங்கள் ஆத்மா சாந்திபெற
எல்லாம் வல்ல வாரிவளவு கற்பக விநாயகர் பாதம் பணிந்து நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்,
இல.50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
இல.11, பெதஸ்டா பிளேஸ், கொழும்பு-05

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி/10881)(3.5-6)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை
மடியில்
11.07.1934
ஆண்டவன்
அடியில்
04.08.2003

திருமதி
அன்னபூரணம்
கந்தையா

திதி: ஸப்தமி
(13.08.2013)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் கலந்த"
எமது அன்புத் தெய்வம்
பாசமாய் பெற்றெடுத்து பாரினிலே- வாழ்ந்தவரே
ஆசையாய் முத்தமிட்டு பாரினிலே -வாழ்ந்தவரே
கருணையும் கண்ணியமும் கனிவுமாய்- வாழ்ந்தவரே
கடவுளின் அடியில் அடைக்கலமாய்- வாழ்ந்தவரே
பாசமெனும் பாலை ஊட்டி நேசத்தில் எம்மை சீராட்டி
கலக்கத்தில் எம்மை வலுவூட்டி தக்கதாய் எமக்கு வழிகாட்டி- வாழ்ந்தவரே
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே ஆண்டுகள் பத்து ஆனதுவே-அம்மா
ஆண்டுகள் நூறு ஆனாலும் அம்மா
என்ற மூன்றெழுத்தை மறவோம்- அம்மா

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

கைதடி கிழக்கு,
கைதடி.

(31323)(3.5.6)

# முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு வெட்கம் இல்லையா?

## கேட்கிறார் அரியநேத்திரன் எம்.பி.

கொழும்பு,ஓக.13

முஸ்லிம்களுக்கு எதிராக – மதத்துக்கு எதிராக பௌத்த இனவாத காடையர் குழுக்கள் தாக்குதலை மேற்கொள்கின்றபோது அரசுடன் ஒட்டிக்கொண்டிருந்து சுக போகங்களை அனுபவிப்பது முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு வெட்கம் இல்லையா?

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கேள்வியெழுப்பியுள்ளார்.



கொழும்பு - கிராண்ட்பாஸ் முஸ்லிம் பள்ளிவாசல்

மீதான தாக்குதலை வன்மையாகக் கண்டித்துள்ள அவர், இந்தத் தாக்குதலை அரசின் அனுமதியுடன் பௌத்த இனவாத காடையர் குழுவே நடத்தியது என்றும் தெரிவித்தார்.

அரசின் இத்தகைய அராஜகங்களைத் தடுத்துநிறுத்த தமிழ் மக்களுடன் முஸ்லிம் மக்கள் அணிதிரண்டு போராட முன்வரவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தரப்பும் அதன் காடையர் குழுவும் தமிழ், முஸ்லிம் இனங்களுக்கு எதிராக தொடர்ச்சியாகத் தாக்குதலை நடத்தி வருகின்றன.

இதன் ஒரு கட்டமாகத்தான் கிராண்ட்பாஸ் முஸ்லிம் பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக முஸ்லிம் பள்ளிவாசல்கள் மீது அரசின் மறைமுக அனுமதியுடன் அராஜகங்கள் தொடர்கின்றன.

ஆனால், முஸ்லிம் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டனங்களை மட்டும் வெளியிட்டு விட்டு அரசுடன் சேர்ந்திருக்கின்றார்கள்.

எனவே, முஸ்லிம் அரசியல்வாதிகளும் முஸ்லிம் மக்களும் சிந்தித்து ஒரு தீர்க்கமான முடிவொன்றை எடுக்கவேண்டும்.- என்றார். (ச)

# 40,000 அரச ஊழியர் தேர்தல் கடமைகளில்

## தேர்தல் செயலகம் தகவல்



கொழும்பு,ஓக.13

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் கடமையில் சுமார் 40 ஆயிரம் அரச ஊழியர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் வாக்கெண்ணும் நிலையங்களிலேயே அதிகளவிலான அரச ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று பிரதி தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் கூறினார்.

இதேவேளை, வாக்களிப்பு நிலையங்களில் விசேட பாதுகாப்பு திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது என்று தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது. (ச)

## 12 ஆம் வருட நினைவலைகளில்...

மலர்வு 05.02.1981 உதிர்வு 13.08.2001



### அமரர் தர்மகுலசிங்கம் ஜெகதீஸ் (ஜெகன்)

புன்னகை சிந்தும் பூ முகம் பட்டொளி வீசிடும் உன் கண்கள்
கள்ளமிலா வெள்ளை மனசு கவர்ந்திழுக்கும் இனிய பேச்சு
அசைபோட்டுப் பார்க்கின்றோம் ஆறவில்லையடா தலைமகனே
எங்கள் பாச மனம்
ஈராறு ஆண்டுகள் சென்றதையா–ஆனால்
ஈரம் மட்டும் காயவில்லையடா
எம் கரு விழிகளில் தேடிப் பார்க்கின்றோமடா–உன்
கால் தடங்களை –ஏனெனில்
அதில் நீ எமக்காய் விட்டுச் சென்ற தடயங்களுக்காய்...
உன் பிரிவால் துடிக்கும்

குடும்பத்தினர்.
அம்மா, அப்பா
தங்கைகள்-ஜினோ, வினோ
கரந்தாய், பளை.

(C 27321) (6.11)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 30.03.1931

மறைவு 15.07.2013



### அமரர் தம்பிராஜா சிவநாதன்

கடந்த 15.07.2013 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்ப விளக்கின் மறைவுச் செய்திகேட்டு எமக்கு நேரில் வந்து ஆறுதல் கூறியோர், உதவி ஒத்தாசை புரிந்தோர், வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் இருந்து தொலைபேசி, தந்தி மூலம் ஆறுதல் தெரிவித்தோர், துண்டுப் பிரசுரம் வெளியிட்டு அனுதாபம் தெரிவித்தோர் மற்றும் பலவழிகளிலும் எமக்கு உதவிகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று(12.08.2013) திங்கட்கிழமை வவுனியா கல்லாறு தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை(14.08.2013) புதன்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து அருந்ததி மண்டபத்தில் இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

363, ஹொரவப் பொத்தானை வீதி,
இறம்பைக் குளம் , வவுனியா.
077 315 4254, 024 222 2068

குடும்பத்தினர்
மனைவி(திலகவதி),
மகன்(... கிஷோர்).

(31258) (3.5.6)

## மரண அறிவித்தல்



### அன்னமுத்து கிருஸ்ணபிள்ளை

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னமுத்து கிருஸ்ணபிள்ளை 09.08.2013 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-சின்னப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற முருகர் கிருஸ்ணபிள்ளையின் மனைவியும், பத்மாவதி(பிரான்ஸ்), புஸ்பலீலா, காலஞ்சென்ற நகுலேஸ்வரன் மற்றும் யோகநாதன்(கனடா) ஆகியோரின் தாயும், செல்வராசா (பிரான்ஸ்), சிவசோதி, மங்கையர்க்கரசி (கனடா) ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற மோகனகௌரி மற்றும் அஜந்தன் (கனடா), தனுசன், ஐஸ்வர்யா, கோபிதாஸ், மதுஷா(கனடா), டெனுஷா (கனடா), அபீஸ் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (14.08.2013) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய்.

தகவல்: குடும்பத்தினர்.
தொ.பே.: 021 721 1542

(31349) (3.5.6)

## நினைவஞ்சலிகள்

ஏழாம் ஆண்டு | முதலாம் ஆண்டு

04.11.1945 தோற்றம் 18.11.1942
13.07.2006 மறைவு 25.07.2012





திதி: 13.08.2013

சின்னையா மருதமுத்துப்பிள்ளை

நாகேஸ்வரி மருதமுத்துப்பிள்ளை

அன்பின் அன்னையே அருமைத் தந்தையே
நீவிர் என்னை விட்டு நீண்ட தூரம் சென்றாலும்
மாறுமோ உங்கள் எண்ணம் மறையுமோ உங்கள் நினைவு
தேறியே நின்று நான் உங்கள் பதமலர் தொழுகின்றேன்.

சுதுமலை மத்தி, மானிப்பாய்.
077 711 0270

பிரியதர்சினி (மகள்).

(31337)(10,6,3)

# HP Notebooks

# HP Desktop PCs

# HP Deskjet Printers

# HP Laserjet Printers

# HP Original Ink and Toners

# HP Original Cartridges

தொடர்புகளுக்கு-

**அங்கீகாரம் பெற்ற HP பங்காளர்**

## Nalin Information Technologies (PVT) Ltd.

இல 195/4 பரமேஸ்வராச் சந்தி
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Tp :- 0212221121/1166
0777667975

116G கே.கே.எஸ். வீதி
சுன்னாகம்.
Tp :- 0212242222
0777140431

## பொதுநலவாய உச்சி மாநாடு:

# நாடுகளுக்கு இடையில் நட்பை வளர்ப்பதற்கு சிறந்த மேடை

கொழும்பு,ஓக.13

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாடு நட்பு நாடுகளுடனான உறவை மேலும் வலுப்படுத்துதற்கும், நட்பு நாடுகளை இணைத்துக் கொள்வதற்கும் ஒரு சிறந்த மேடையாக அமையும்.

இவ்வாறு நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித கொஹென்ன தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த உச்சி மாநாட்டை நாம் இலங்கைக்குச் சாதகமாகப் பயன்படுத்தி எமது நாட்டின் உண்மை நிலையை இங்கு வரும் நட்பு நாடுகளுக்கு எடுத்துரைத்து அந்த நாடுகளுக்கு இலங்கை மீது நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

> “நாம் ஒரு சிறிய நாடு என்ற முறையில் அந்த சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்



பொதுநலவாய நாடுகளின் அமைப்பையும் ஐக்கிய நாடுகள் ஸ்தானத்தையும் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து பொதுநலவாய நாடுகள் என்றும் இலங்கையுடன் ஒற்றுமையுடன் நல்லுறவை வளர்த்து வருகின்றன.

இலங்கை மீது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் சந்தேகத்துடன் அவதானமாக இருக்கின்ற காரணத்தினால், நாம் ஒரு சிறிய நாடு என்ற முறையில் அந்த சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்-என்றார். (ச)

## இறக்குமதி செய்யப்படும் பொருள் குறித்து ஆய்வு



கொழும்பு,ஓக.13

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவு வகைகள், மருந்துப் பொருள்களின் தன்மை குறித்து ஆய்வு செய்ய விசேட குழு அமைப்பது தொடர்பில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகள் பலவற்றிற்கு தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சின் தலையீட்டின் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்கள் மட்டும் இறக்குமதி செய்யப்படவில்லை. ஏனைய பொருள்களின் தன்மை குறித்தும் கவனம் செலுத்தப் படவுள்ளது என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. எனவே இந்த நடவடிக்கைகளில் சுகாதார அமைச்சு மட்டும் ஈடுபட முடியாது என்று அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது. இதன் காரணமாக இவ்விடயத்தில் சுகாதார, சந்தை மற்றும் நுகர்வோர், சுற்றாடல், விவசாய அமைச்சுக்கள் ஒன்றிணைந்து செயற்படவுள்ளன.(ச)



மஹியங்கனை உல்ஹிற்றிய புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவில் நற்கருணை வழிபாடும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றபோது, பதுளை மறைமாவட்ட ஆயர் வின்சன்ற் பெர்னாண்டோ ஆண்டகை திருப்பலிப் பூசையை ஒப்புக் கொடுத்தார்.

## ‘பாஸ்’ இருந்தால் மட்டுமே நோயாளரைப் பார்வையிடலாம்

### போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.13

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்களைப் பார்வையிட வருவோர் வைத்தியசாலை நிர்வாகத்தால் வழங்கப்படும்அனுமதிப்பத்திரத்தை வைத்திருந்தால் மட்டுமே வைத்தியசாலை விடுதிகளுக்கு அனுமதிக்கப்படுவர்.

இப்புதிய நடைமுறை எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப் படுத்தப்படும் என யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வைத்தியசாலை உள்ளக விடுதிகளில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் பார்வையாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. இதனால் நோயாளர்கள், வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலை நிர்வாகமும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதுடன் தொற்று நோய் ஏற்படும் சாத்தியக் கூறுகளும் அதிகரித்துள்ளது.

இவற்றைத் தவிர்க்கும் முகமாக பார்வையாளர் அனுமதிப் பத்திரம் வழங்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வகையில் ஒரு நோயாளருக்கு 2 பார்வையாளர் அனுமதிப் பத்திரம் நோயாளியை விடுதியில் அனுமதிக்கும் போது வழங்கப்படும்.

அதனைக் கொண்டு காலை 6 மணிமுதல் 6.30 மணி வரையும், மதியம் 12 மணி முதல் ஒரு மணி வரையும், மாலை 5 மணி முதல் 6 மணி வரையும் நோயாளர்களைப் பார்வையிட முடியும்.

இந்த நடைமுறை எதிர் வரும் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

நோயாளர்களைப் பார்வையிட வரும் பார்வையாளர்கள் இயன்றவரை விக்ரோறியா வீதியிலுள்ள நுழை வாயிலைப்பயன்படுத்த வேண்டும் என்றார். (த-400)

## பால் மா வகைகளை அகற்ற நடவடிக்கை

### கொழும்பில் நேற்று ஆரம்பம்

கொழும்பு,ஓக.13

மனித பாவனைக்கு ஒவ்வாத பால் மா வகைகளை வியாபார நிலையங்களிலிருந்து அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் நேற்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய கொழும்பு மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் உள்ள உணவுப் பொருள்கள் விற்பனை நிலையங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் அதிகாரிகள் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் இணைந்து டிசிடி என்ற இரசாயன பொருள் கலக்கப்பட்ட பால் மா வகைகள், மனித பாவனைக்கு ஒவ்வாத உணவுப் பொருள்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதேவேளை நாடு முழுவதிலுமுள்ள வியாபார நிலையங்கள் சோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் பாலித்த மஹிபால தெரிவித்தார்.

நியூசிலாந்திலிருந்து இறக்குமதியாகும் பால்மா வகைகள் பலவற்றில் டிசிடி என்ற இரசாயன பொருள் கலக்கப்பட்ட பால்மாக்களுக்கு இலங்கையில் தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பால் மா விவரம்: பேச வருகிறார் நியூசிலாந்து அமைச்சர்



கொழும்பு,ஓக.13

பால் மா தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நியூசிலாந்து வெளிவிவகார அமைச்சர் முர்ரே மக்கலீ பொன்டேரா அடுத்தவாரம் இலங்கை வரவுள்ளார்.

நியூசிலாந்திலிருந்து இறக்குமதியாகும் பால்மா வகைகள் பலவற்றில் டிசிடி என்ற இரசாயன பொருள் கலக்கப்பட்ட பால் மாவுக்கு இலங்கையில் தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

தமது உற்பத்திகளான குழந்தை பால்மா உட்பட விளையாட்டுக்கு ஊக்கம் தரும் பானங்களில் பக்றீரியா நச்சுத்தன்மை இருக்கலாம் என்று நியூஸிலாந்தின் பொன்டேரா நிறுவனம் அறிவித்துள்ளது.

எனினும் நியூசிலாந்து பண்ணையாளர்கள் அதனை மறுத்துள்ளதுடன் இரசாயன வகைகள் பாவிப்பதனை கடந்த வருடத்திலிருந்து நிறுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

இந்தநிலையில் இலங்கையில் தடை விதிக்கப்பட்டுள்ள பால் மா பயன்பாடு குறித்து நியூசிலாந்து பிரதமர் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார். (ச)

## குரோதப் பேச்சுக்களை தடுக்க விசேட சட்டம்

### வாசுதேவவால் சமர்ப்பிப்பு

கொழும்பு,ஓக.13

குரோதப் பேச்சுக்களைத் தடுப்பதற்கு விசேட சட்டமொன்று அறிமுகம் செய்யப்பட உள்ளது.

இந்த உத்தேச சட்டம் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் இறுதி அனுமதி கிடைக்கப் பெற்றதன் பின்னர் இந்த உத்தேச பிரேரணை, சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது.

இந்த உத்தேச சட்டம் ஏற்கனவே அமைச்சரவை துணைக்குழுவின் அனுமதியைப் பெற்றுக் கொண்டுள்ளது.

இந்தப் புதிய சட்டம் இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்கக் கூடிய குரோத பேச்சுக்கள் கருத்துக்களை தடை செய்யும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# வீடு வீடாகப் பிரசாரம் வேட்பாளர்களுக்கு தடை

வடமாகாண சபைத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான கருத்தரங்கு, தேர்தல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நேற்று திங்கட்கிழமை மாலை யாழ். பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் வடமாகாண தேர்தலுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள எம்.மொஹமட், யாழ். மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் சுந்தரம் அருமைநாயகம், உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் சி.அச்சுதன் மற்றும் தேர்தல்கள் திணைக்கள முன்னாள் அதிகாரியும் தற்போதைய சிறைச்சாலைகள் ஆணையாளருமான புஷ்பகுமார ஆகியோர் கலந்துகொண்டு விளக்கமளித்தனர்.

யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் 250 வேட்பாளர்கள் வரை கலந்துகொண்டனர்.

வேட்பாளர்கள் தேர்தல் விதிமுறைகளை மீறாமல் செயற்படவேண்டும் எனவும், சுவரொட்டிகள் ஒட்டக்கூடாது எனவும் அதை மீறி ஒட்டப்பட்டால் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் வேட்பாளர்களுக்கு அங்கு அறிவுறுத்தப்பட்டது.

அத்துடன் வேட்பாளர்கள் வீடுவீடாகச் சென்று பிரசாரங்களை முன்னெடுக்கக் கூடாது எனவும் கூறப்பட்டது.

அரச தரப்பின் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளமை தொடர்பில் பலமுறை சுட்டிக் காட்டப்பட்ட போதும் தேர்தல்கள் திணைக்களம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட வேட்பாளர்கள் சுட்டிக்காட்டினர். அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அதிகாரிகள் அங்கு பதிலளித்தனர்.

ஐக்கிய சோஷலிசக் கட்சியினர், தாம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அரசியல் பரப்புரைக் கூட்டம் நடத்தக் கேட்டபோது அரசியல் நிகழ்வுகளுக்கு மண்டபத்தை வழங்குவதில்லை எனத் தெரிவித்த நிர்வாகம், ஆளும் கட்சியின் தேர்தல் பரப்புரைக்கு அதனை வழங்கியமை தொடர்பில் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட போது தேர்தல்கள் திணைக் களத்தினர் அதற்கு எந்தப் பதிலையும் வழங்கவில்லை. (த-5)

## வேட்பாளருக்கு அ.அட்டைகள்

கள் போட்டியிடுகின்றனர். போட்டியிடும் வேட்பாளர்களுக்கு, அவர்களை அடையாளப்படுத்துவதற்கான அடையாள அட்டைகள் தேர்தல் திணைக்களத்தினால் வழங்கப்படும்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்காக வேட்பாளர்களிடமிருந்து விவரங்கள் கோரப்பட்டுள்ளதாகவும், இந்தவார இறுதியில் அடையாள அட்டைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## வெலிவேரிய அசம்பாவிதம்; ஜனாதிபதி ஆராய்வு

மக்கள் நடத்திய கவனவீர்ப்புப் போராட்டத்தை இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தி அடக்கினர். இதனால் 3 இளைஞர்கள் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தென்பகுதியில் அரசுக்கு எதிராகப் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் இந்தச் சம்பவம் தொடர்பில் ஆராய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் வெலிவேரிய கிராம மக்கள், பௌத்த மதகுருமார், ஹேலீஸ் நிறுவன அதிகாரிகள், அரச அதிகாரிகள் மற்றும் பொலிஸ், இராணுவ அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-5)

## இலங்கையுடன் நட்புறவையே விரும்புகின்றது அமெரிக்கா

நிறைவு செய்துள்ளோம். எமது வேலைத் திட்டத்தினூடாகப் பலர் பயனடைந்துள்ளனர். மாணவர்கள் சிறப்பான சூழலிருந்து கற்கும் வாய்ப்பை பெற்றுள்ளனர். ' பசுபிக் ஏஞ்சல்' நிகழ்ச்சித் திட்டம் மூலம் உதவுவது மட்டுமன்றி இலங்கையுடன் நட்புறவையும் - ஒற்றுமையையும் வலுப்படுத்துவதும் எமது நோக்கமாகும் என்றார்.

இதன் பின்னர் உரையாற்றிய ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன், மனிதாபிமானப் போருக்குப் பின்னரே வடக்கு மக்களின் மீள்குடியேற்றம், கண்ணிவெடி அகற்றல், புனரமைப்பு நடவடிக்கைகள், அபிவிருத்திப் பணிகள் போன்றவை தொடர்பிலேயே அங்கு குறிப்பிட்டார். (த-5)

# தமிழர்களை ஒருபோதும் எவரும் அடக்க முடியாது

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்களவர்கள் இலங்கையில் இருந்த காலம் முதல் தமிழர்களும் இருந்து வருகின்றனர். இருப்பினும் தமிழர்களும் சிங்களவர்களும் இணைந்து வாழ்வதற்கான சூழல் இல்லை. இலங்கை ஒரே நாடாக இருக்கும் வரையில் மகிழ்ச்சியான நாடாக இருக்க முடியாது.

இலங்கையில் தமிழர்களுக்காகப் போராடிய தமிழீழ விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் இலங்கையில் இன பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த குறிப்பிட்டு வருகின்றார். இதனையே எல்லோரும் ஏற்க - நம்ப வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கின்றார்.

**அடங்காத் தமிழன்**

ஈழத்தமிழர்கள் அடங்கிப் போகவும் மாட்டார்கள். சிங்களவர்களுக்குப் பயந்து ஓடவும் மாட்டார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்திருந்தாலும் சிறுபான்மையினராகிய தமிழர்களை வெல்லும் தகுதியும் துணிச்சலும் சிங்களவர்களுக்கு நிச்சயம் இல்லை. எல்லாவற்றையும் விட யாழ்ப்பாணத் தமிழர்களை சிங்களவர்களால் நிச்சயம் ஒருபோதும் வெல்லவே முடியாது. அதனால் தான் அவர்களை எல்லா வழிகளிலும் நசுக்கி ஒடுக்க முனைகின்றார்கள்.

சிங்களவர்கள் முன்பும் இப்படித்தான் செய்தார்கள். அதுதான் மிகப்பெரும் ஆயுதப் போராட்டமாக வெடித்தது. இப்போதும் அதையே செய்ய முனைகின்றார்கள். ஆனால் ஒட்டு மொத்த தமிழ் இனத்தையும் அழித்து விட முடியும் என்ற சிங்களவர்களின் எண்ணம் நிச்சயம் நிறைவேறாது.

**நடப்பது இன அழிப்பே**

இலங்கையில் தற்போது நடந்து கொண்டிருப்பது அப்பட்டமான இன அழிப்புத்தான். இதனால் தமிழர்கள் மீண்டும் ஆயுதப் பேராட்டத்தை தொடங்குவார்களா என்பதை என்னால் சொல்ல முடியாது. ஆனால் நிச்சயம் தமிழர்கள் பொறுமையோடு நீண்ட காலம் காத்திருக்க மாட்டார்கள்.

சிங்களவர்களை விட தமிழர்களுக்கே அதிகளவான மரியாதை கொடுக்கப்பட வேண்டும் - என்றார். (த-5)

## பள்ளிவாசல் பதாகையை அகற்றுவதற்கு முயற்சி

அந்தப் பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

பொதுபல சேனாவினால் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக் கூட்டமொன்று குருநாகல் நகரில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்த ஞானசார தேரர், கண்டி - குருநாகல் வீதியில் பறகஹதெனிய பள்ளிவாசலுக்கு முன்னால் 'அமைதியாகச் செல்லுங்கள்' என்று காட்சிப் படுத்தப்பட்டுள்ள பதாதையை அகற்றுமாறு வேண்டுகோள் விடுத்ததுடன் அதனை அகற்றாவிட்டால் தாங்கள் அகற்ற வேண்டி வரும் எனவும் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதனையடுத்து அந்தப் பகுதிக்கு நேற்று விரைந்த மாவத்தகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் தலைமையிலான பொலிஸ் குழுவினர், பதாதையை அகற்ற முற்பட்ட போது ஊர் மக்கள் ஒன்று திரண்டு அதனைத் தடுத்து நிறுத்தினர். பறஹகதெனிய பெரிய ஜும்ஆப் பள்ளிவாசல், ஜாமிஉத் தவ்ஹீத் ஜும்ஆ பள்ளிவாசல் ஆகிய இரு பள்ளிவாசல்களுக்கு முன்னாலே இந்த இரு பதாதைகள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

நீதிமன்றத்தின் சட்ட ரீதியான ஆணையுடன்வந்தால்இதனை அகற்றுவதற்கு நாங்கள் அனுமதிப்போம் என்று கூறி இதனை அகற்றவிடாது பொது மக்கள் பொலிஸாருடன் முரண்பட்டனர்.

இந்தப் பதாதையை இரு பள்ளிவாசல்களுக்கும் முன்னால் நிர்வாக சபையினர் போடவில்லை. வீதி போக்குவரத்துப் பிரிவினால் போடப்பட்ட ஒன்று. இவ்விளம்பரப் பலகையை போடுவதற்காக நெடுஞ்சாலைகள் போக்குவரத்து அதிகார சபை 22,000 ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக ஊர் மக்கள் பொலிஸாரிடம் தெளிவு படுத்தினர். (த)

## அரோகரா கோஷம் முழங்க நல்லூர்க் கந்தனுக்கு கொடி

ளிலும் இருந்தும் ஆலயத்தை வந்தடைந்த வண்ணம் இருந்தனர். அவர்களில் பலர் அங்கப்பிரதட்சணம், அடியளித்தல் நேர்த்திக் கடமைகளையும் நிறைவேற்றினார்கள்.

நேற்று கொடியேற்ற உற்சவத்தின்போது புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வாழும் தமிழ் மக்களுடன் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் உட்பட தென்பகுதியில் இருந்து வந்தவர்களுமாக ஆயிரக் கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

யாழ்.மாநகர சபை உற்சவத்துக்கான விசேட ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது. சுகாதாரம், குடிதண்ணீர், போக்குவரத்து வசதிகள், தொண்டர் சேவைகளும் உரிய முறையில் இடம்பெற்றன.

பாதுகாப்பு நடவடிக்கைகளில் பொலிஸார் சீருடையிலும், சிவிலுடையிலும் காணப்பட்டனர். அவர்களுடன் ஆலயத் தொண்டர்கள், செண்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் தொண்டர்கள், சாரணர்கள் மற்றும் யாழ். மாநகரசபை ஊழியர்களும் ஒழுங்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். கொடியேற்றம் இடம் பெற்றதையடுத்து முருகப் பெருமான் உள் வீதியில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். (ஒ-7-17-86)


## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் சற்குணம்



தம்பாட்டி ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சற்குணம் நேற்று (12.08.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம்-அருளம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வர்களான இராசப்பா-கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் (காந்திஜீ விளையாட்டுக் கழக கரப்பந்தாட்ட மூத்த வீரர்) அன்பு மனைவியும், தாசன் (பிரான்ஸ்), சமரக் கோன் (பிரான்ஸ்), சாந்தலட்சுமி (பிரான்ஸ்), சிறீகரன் (பிரான்ஸ்), மோகனரூபி ஆகியோரின் அன்புத் தாயும், மாலா (பிரான்ஸ்), தமிழ்ச்செல்வி (பிரான்ஸ்), இந்திரகுமார் (பிரான்ஸ்), நிசா (பிரான்ஸ்), ஜெயக்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு (மிருதங்க வித்துவான்), வடிவேல் (தம்பு, கார் ஓட்டுநர்) மற்றும் இரத்தினசிங்கம் (தனம் - பிரான்ஸ்), வசந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராசபூபதி மற்றும் பூவையா (சின்னக்கிளி), காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை மற்றும் பரராசசிங்கம், காலஞ்சென்றவர்களான லலிதா, பரமேஸ்வரி மற்றும் சாரதாதேவி, ஆனந்தராணி (பிரான்ஸ்), காலஞ்சென்ற பாலகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும், (சந்தியா, தினேஸ், நிரோசன், சந்துரு, சபினா, சயந்தினி, சாருசன், சௌமியா, றுசான், சதுஷா, வனுஜன், வதுஜன், சிதுஜன் - பிரான்ஸ்), சதுஜன், அபிஷன், திமிஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2013) செவ்வாய்க் கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்பாட்டி விறாட்டிமுனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தம்பாட்டி,
ஊர்காவற்றுறை.

(32780) (10,18,14)

தகவல்:
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### செபமாலை டேவிற் (செல்லக்கிளி)



வசாவிளானைப் பிறப்பிடமாகவும், மத்தியூஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செபமாலை டேவிற் (செல்லக்கிளி) நேற்று(12.08.2013) திங்கட் கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

17/1, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.


தகவல்: மனைவி (லீலியற்)
பிள்ளைகள்.

## போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஓக. 13
உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.மேற்கு பிரதேச சபையால் நடத்தப்படவுள்ள சைக்கிளோட்டப் போட்டி மற்றும் மரதன் ஓட்டப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
வலி.மேற்குப் பிரதேச சபைக்குட்பட்டவர்கள் இந்தப் போட்டிகளில் பங்குபற்ற முடியும். ஆர்வமுடையவர்கள் இன்று செவ்வாய்க்கிழமைக்கு பிந்தாமல் பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என்று சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் அறிவித்துள்ளார். (ற-14-50)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஓக.13
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை கழக மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகள்:
பி.ப 4 மணி
கலைவாணி விளையாட்டுக் கழகம் எதிர் சென். சேவியர் (பி) அணி.
பி.ப 4.45 மணி
புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் எதிர் வீண் மீன் (பி) விளையாட்டுக் கழகம்.
(ற-23-422)



ஈச்சமோட்டைவிளையாட்டுக் கழகம் நடத்திய அமரர் சுந்தரலிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுத் தொடரில் இரண்டாமிடத்தைப் பெற்ற ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணித் தலைவரிடம் சிறப்பு விருந்தினர் வெற்றிக் கிண்ணம் வழங்குகின்றார். (ற-23)

## உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்



யாழ்ப்பாணம், ஓக. 13
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் அரையிறுதி ஆட்டத்துக்கு இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் ஆகியவை தகுதி பெற்றுள்ளன.
இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான காலிறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான காலிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.(ற-23)

மஞ்சி வெற்றிக் கிண்ணம்: வலிகாமம்

## கே.கே.எஸ்., கணேசா சம்பியன்களாகத் தெரிவாகின

யாழ்ப்பாணம், ஓக.13
மஞ்சி வெற்றிக் கிண்ணத்துக்காக வலிகாமம் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண், பெண் இரு பாலாருக்குமான கரப்பந்துத் தொடரில் ஆண்கள் பிரிவில் பன்னாலை கணேஷா விளையாட்டுக் கழகமும், பெண்கள் பிரிவில் கே.கே.எஸ். விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகின.
கடந்தவாரம் மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் பன்னாலை கணேஷா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.கே.எஸ். விளையாட்டுக் கழகம் களமிறங்கியது.
5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் பன்னாலை கணேஷா விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.
தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கே.கே.எஸ். விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சங்கானை யத் விளையாட்டுக் கழக அணி மோதியது.
5 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் கே.கே.எஸ். விளையாட்டுக் கழகம் 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.
(ற-23)

மஞ்சி வெற்றிக் கிண்ணம்: தென்மராட்சி

## மோகனதாஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஓக. 13
மஞ்சி வெற்றிக் கிண்ணக் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் தென்மராட்சி பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழங்களுக்கு இடையே நடத்தப்பட்ட ஆட்டங்களில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவாகியது.
கடந்தவாரம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழக அணி மோதியது.
5 செற்களைக்கொண்ட இறுதியாட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (ற-23)

மாலிசந்தி மைக்கல் கிரிக்கெட் தொடர்: 20 பந்துப்பரிமாற்றம்

## நாவலரின் அதிரடி ஆட்டத்தால் மண் கௌவியது ஸ்ரீமுருகன்



மாங்குளம், ஓக. 13
மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுத் தொடரில் கிண்ணத்தை சுவீகரித்தது தும்பளை நாவலர் விளையாட்டுக் கழக அணி.
இறுதியாட்டம் காலநிலை சீரின்மையால் 16 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட ஆட்டமாக மாற்றப்பட்டது.
இறுதியாட்டத்தின் நாவலர் விளையாட்டுக்கழக அணியை எதிர்து ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய நாவலர் அணி 15.3 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றது.
அதில் ஜெபநேசன் நான்கு ஆறு ஓட்டம், மூன்று 4 ஓட்டம் அடங்கலாக 43 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தார்.
பந்து வீச்சில் ஸ்ரீமுருகன் அணி சார்பாக உமைசுதன் 4 இலக்குகளையும், பவன் 3 இலக்குகளையும், ராஜ்குமார் 2 இலக்குகளையும், தர்சன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வதிரி ஸ்ரீமுருகன் அணி 15.3 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இந்து 81 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 20 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.
ஸ்ரீமுருகன் அணி சார்பாகத் துடுப்பாட்டத்தில் மூன்று 6 ஓட்டங்களும் ஒரு 4 ஓட்டமும் அடங்கலாக ராஜ் 30 ஓட்டங்களையும், அதிக ரன் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்து வீச்சில் ஜெபநேசன், சஞ்சீவன் ஆகியோர் தலா 3 இலக்குகளையும், ஜோன்சன் 2 இலக்குகளையும், குண தீபன், அஜந்தன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
ஆட்ட நாயகனாக நாவலர் அணியைச் சேர்ந்த ஜெபநேசனும், தொடர் ஆட்டநாயகனாக ஸ்ரீமுருகன் அணியைச் சேர்ந்த உமைசுதனும் தெரிவு செய்யப்பட்டனர். (ற-422)


மாலிசந்தி மைக்கல் கிரிக்கெட் தொடர்: 10 பந்துப்பரிமாற்றம்

## பரபரப்பான இறுதியாட்டத்தில் கிண்ணம் வென்றது ஸ்ரீமுருகன்




மாங்குளம், ஓக. 13
பரபரப்பான இறுதியாட்டத்தில் இறுதிப் பந்தில் ஆறு ஓட்டங்களைப் பெற்று சம்பியனாகத் தெரிவாகியது வதிரி ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகம்.
மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட 10 பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுத்தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
இறுதியாட்டத்தில் வதிரி ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகமும், நெற்கெழுகு விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.
முதலில் துடுப்பெடுத்தாடிய நெற்கெழுகு அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.
அதில் கோகுலன் 39 ஓட்டங்களையும்; செந்தூரன் 30 ஓட்டங்களையும் அதிகபட்சமாகக் பெற்றுக்கொண்டனர்.
பந்துவீச்சில் ஸ்ரீமுருகன் அணிசார்பாக நெஸ்மன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.
95 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத்தினர் ஓட்டங்களைப் பெறுவதில் கடும் சிரமத்தை எதிர்கொண்டனர். நெற்கெழுகு அணியின் பந்துவீச்சாளர்களின் துல்லியமான பந்து வீச்சில் ஸ்ரீ முருகன் அணியின் இலக்குகள் ஒரு புறம் சரிய, அந்த அணியின் ஓட்ட வேகம் மட்டுப்படுத்தப்பட்டது.
9.5 பந்துப்பரிமற்றங்களில் ஸ்ரீ முருகன் அணி 90 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அந்த அணியின் இலக்கு ஒன்றை வீழ்த்தினர் நெற்கெழுகு அணியினர். வெற்றி நெற்கெழுகு அணிக்கே என்று எதிர்பார்த்திருந்த நிலையில் களமிறங்கினார் ஸ்ரீ முருகன் அணியைச் சேர்ந்த நிரோஜன்.
ஓர் பந்துவீச்சு மீதமிருக்கையில், ஸ்ரீமுருகன் அணிக்கு 5 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இறுதிப்பந்தை எதிர்கொண்ட நிரோஜன் அதை எல்லைக் கோட்டுக் வெளியே அனுப்பினார். ஆறு ஓட்டங்களைப் பெற்ற ஸ்ரீமுருகன் அணி 96 ஓட்டங்களைப் பெற்று நெற்கெழுகு அணியை வீழ்த்தி வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.
ஸ்ரீமுருகன் அணியின் சார்பாக ராஜ்குமார் 23 ஓட்டங்களையும், அரிகரன் 16 ஓட்டங்களையும், உமைசுதன் 12 ஓட்டங்களையும், நிரோஜன் 6 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.
பந்துவீச்சில் நெற்கெழுகு சார்பாக கோகுலன் 2 இலக்குகளையும் நந்தகுமார், செந்தூரன், அமர்நாத் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
ஆட்ட நாயகனாக ஸ்ரீமுருகன் அணியைச் சேர்ந்த ராஜ்குமாரும், தொடர் ஆட்டநாயகனாக நெற்கெழுகு அணியைச் சேர்ந்த கோகுலனும் தெரிவு செய்யப்பட்டனர். (ற-422)

# இயன்பெல் மீண்டும் சதம் சரிவிலிருந்து மீண்டது இங்கிலாந்து







இங்கிலாந்தில் நடைபெற்று வரும் ஆஷஸ் தொடரின் 4 ஆவது டெஸ்ட் போட்டியின் 3ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து அணி இயன் பெல்லின் நிதான ஆட்டத்தின் மூலம் பலமான நிலையை அடைந்துள்ளது. 5 இலக்குகள் கைவசமுள்ள நிலையில் இங்கிலாந்து 202 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது.

5 இலக்குகளை இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 3ஆம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த ஆஸ்திரேலிய அணி சகல இலக்குகளையும் இழந்து 250 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக கிறிஸ் றொஜர்ஸ் 110 ஓட்டங்களையும், ஷேன் வொற்சன் 68 ஓட்டங்களையும், றயன் ஹறிஸ் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஸ்ருவேர்ட் ப்ரோட் 5 இலக்குகளையும், ஜேம்ஸ் அன்டர்சன், கிறேம் ஸ்வான் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளையும், ரிம் பிரெஸ்னன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

32 ஓட்டங்கள் பின்னிலையில் காணப்பட்ட நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி 3ஆம் நாள் முடிவில் 5 இலக்குகளை இழந்து 234 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

ஒரு கட்டத்தில் 3 இலக்குகளை இழந்து 49 ஓட்டங்களுடன் தடுமாறியது இங்கிலாந்து அணி.எனினும் அதன் பின்னர் இயன்பெல்லும் , கெவின் பீற்றர்ஸனும் பொறுப்போடு ஆடி அணியை சரிவிலிருந்து மீட்டனர். இவர்கள் இருவரும் 4ஆவது இலக்குக்காக 106 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர். சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த பீற்றர்ஸன்44 ஓட்டங்களோடு வெளியேறினார். ஆயினும் தொடரந்தும் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய இயன்பெல் சதமடித்து அசத்தினார். இந்தத் தொடரின் இயன்பெல் அடித்த மூன்றாவது சதம் இதுவாகும். இதனால் மூன்றாம் நாள் நிறைவில் இங்கிலாந்து அணி சவால் மிக்க ஓட்ட எண்ணிக்கையை பெற முடிந்தது.

இங்கிலாந்து அணி சார்பில் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பாட்டத்தில் இயன் பெல் ஆட்டமிழக்காமல் 105 ஓட்டங்களையும், கெவின் பீற்றர்சன் 44 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில்ஆஸ்திரேலிய அணி சார்பாக றயன் ஹறிஸ் 3 இலக்குகளையும்,நதன் லயன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

றிவேர்ஸ் சைட் மைதானத்தில் இடம்பெற்றுவரும் இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 238 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஙு)

## பார்படோஸ் பரிதாபம் சாதித்தது கயானா

கரீபியன் பிறீமியர் லீக் தொடரின் 13ஆவது போட்டியில் கயானா அணி 27 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. குயீன்ஸ் பரர்க் ஓவல் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கயானா அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கயானா அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது பந்திலேயே முதலாவது இலக்கை இழந்த கயானா அணி, அதன் பின்னர் சிறப்பாக ஆடி 2ஆவது இலக்குக்காக 98 ஓட்டங்களைப் பகிர்ந்தது. எனினும் அதன் பின்னர் சிறப்பான ஓட்டச் சாரசரியை பெற்றுக் கொள்ள அந்த அணி தவறி விட்டது.

துடுப்பாட்டத்தில் கயானா அணி சார்பாக மார்ட்டின் கப்றில் 55 பந்துகளில்73 ஓட்டங்களையும், மொஹமட் ஹபீஸ் 37 பந்துகளில் 35 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பார்படோஸ் அணி சார்பாக றயாட் எம்றிட் 3 இலக்குகளையும், ஷகிப் அல் ஹசன் 2 இலக்குகளையும், டுவைன் ஸ்மித் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

150 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பார்படோஸ் அணி, 19.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 122 ஓட்டங்களைப் பெற்று 27 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.


ஆரம்பத்திலிருந்தே இலக்குகளை தொடர்ச்சியாக பறிகொடுத்த அந்த அணி சார்பாக சொய்ப் மலிக்கைத் தவிர வேறு எந்த வீரரும் நிலைத்தாடத் தவறினர். இதனால் அந்த வெற்றி இலக்கை அண்மிக்க முடியவில்லை.

துடுப்பாட்டத்தில் பார்படோஸ் அணி சார்பாக சொய்ப் மலிக் 47 பந்துகளில் 48 ஓட்டங்களையும், டுவைன் ஸ்மித் 24 பந்துகளில் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கயானா அணி சார்பாக மொஹமட் ஹபீஸ் 3 இலக்குகளையும், ஸ்டீவன் ஜேக்கப்ஸ், சுனில் நரைன், கிரிஷ்மர் சந்தோக்கி ஆகியோர் தலா 2 இலக்குகளையும், வீரசாமி பெருமாள் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக மார்ட்டின் கப்றில் தெரிவானார். (ஙு)

## உலக சம்பியன்ஷிப் போட்டி உசைன் போல்ட் முதலிடம்



ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் நடைபெற்று வரும் 14 ஆவது உலக தடகள சம்பியன்ஷிப் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் ஜமைக்கா நாட்டு தடகள வீரர் உசைன் போல்ட் மீண்டும் தங்கம் வென்றார்.

இந்த ஓட்டப் பந்தயத்தில் அமெரிக்க வீரர் ஜஸ்டின் கட்லின் மற்றும் ஜமைக்கா வீரர் நெஸ்டா கார்டெர் ஆகியோரை முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களுக்கு தள்ளி 9.77 செக்கனில் உசைன் போல்ட் முதலிடத்தைப் பிடித்தார்.

“ உலக சம்பியன்ஷிப் ஓட்டப் பந்தய போட்டிகளில் 6 தங்கப் பதக்கங்களையும், ஒலிம்பிக் போட்டிகளில் 6 தங்கப் பதக்கங்களையும் வென்றவர் என்ற சாதனையை உசைன் போல்ட்-எட்டியுள்ளார்.

இதன் மூலம் உலக சம்பியன்ஷிப் ஓட்டப் பந்தய போட்டிகளில் 6 தங்கப் பதக்கங்களையும், ஒலிம்பிக் போட்டிகளில் 6 தங்கப் பதக்கங்களையும் வென்றவர் என்ற சாதனையை உசைன் போல்ட் எட்டியுள்ளார்.

மொஸ்கோ பந்தய மைதானத்தில் கொட்டும் மழையின் நடுவிலும் பந்தயக் குதிரையைப் போல பாய்ந்தோடி வந்த உசைன் போல்ட் முதல் இடத்தை பிடித்து பார்வையாளர்களை மெய் சிலிர்க்க வைத்தார். (ஙு)

## இந்தியாவை வீழ்த்தி இறுதிக்குள் ஆஸி.

இந்திய 'ஏ' அணியை 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய ஆஸ்திரேலியா 'ஏ'அணி இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய 'ஏ' அணி முத்தரப்பு ஒருநாள் தொடரில் பங்கேற்று வருகிறது. இந்தத் தொடரில் தென்னாபிரிக்கா , ஆஸ்திரேலியா , இந்திய அணிகள் பங்கேற்கின்றன.

ஆரம்ப சுற்றுப் போட்டியில் ஆஸ்திரேலியாவிடம் தோல்வி கண்ட இந்திய அணி, தென்னாபிரிக்காவை வீழ்த்தியது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் மீண்டும் இந்தியா, ஆஸ்திரேலியா அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி, முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது. இதனையடுத்து களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி, 50 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்கு இழப்புக்கு 310 ஓட்டங்களைக் குவித்தது. இந்தியா சார்பில் ஸ்டுவர்ட் பின்னி 4 இலக்குகளையும் , முகமது ஷமி, பர்வேஸ் ரசூல், நதீம் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

சவாலான இலக்கை விரட்டிய இந்திய அணி, 48.3 பந்துப் பரிமாற்றங்களில் 285 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து தோல்வி அடைந்தது.

ஆஸ்திரேலியா சார்பில் ஹசில்வுட், ஹென்ரிக்ஸ் ஆகியோர் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர். இதனையடுத்து மூன்று போட்டிகளில்வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி இறுதிச்சுற்றுக்கு முன்னேறியது. (ஙு)

# பஸ்னாகிரவை வீழ்த்தியது கந்துரட்ட

இலங்கையின் உள்ளூர் '20/20' தொடரின் நேற்றைய ஆட்டத்தில் கந்துரட்ட அணி வெற்றிபெற்றுள்ளது. பஸ்னாகிர அணிக்கெதிரான இந்த ஆட்டத்தில் கந்துரட்ட அணி 2 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பஸ்னாகிர அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கந்துரட்ட அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றது.

சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுக்கொள்ளத் தவறிய கந்துரட்ட அணி, 12 ஓட்டங்களுக்கே முதலாவது இலக்கை இழந்தது.

துடுப்பாட்டத்தில் கந்துரட்ட அணி சார்பாக உபுல் தரங்க 30 பந்துகளில் 27 ஓட்டங்களையும், மிலிந்த சிரிவர்த்தன 18 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களையும், லஹிரு திரிமன்ன 17 பந்துகளில் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் பஸ்னாகிர அணி சார்பாக கோசல குலசேகர, இசுரு உதான இருவரும் தலா 2 இலக்குகளையும், சுரங்க லக்மால், அஞ்சலோ மத்தியூஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

125 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பஸ்னாகிர அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்று 2 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

முதலாவது இலக்குக்காக 31 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, அதன் பின்னர் இலக்குகளைத் தொடர்ச்சியாக இழந்தது. 14.5 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியது. எனினும் 8ஆவது இலக்குக்காக கித்துருவன் விதானகே இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

8 பந்துகளில் 29 ஓட்டங்கள் தேவைப்பட, 19ஆவது பந்துப்பரிமாற்றத்தின் இறுதி 2 பந்துகளிலும் 8 ஓட்டங்கள் பெறப்பட்டன. அதையடுத்து இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் 21 ஓட்டங்கள் தேவைப்பட, 20ஆவது பந்துப்பரிமாற்றத்தின் முதலிரு பந்துகளிலும் சிக்ஸர்கள் அடித்து விளாசப்பட்டன. எனினும் அடுத்த 2 பந்துகளிலும் தலா ஓர் ஓட்டமே பெறப்பட்டதோடு 5 ஆவது பந்தில் இசுரு உதான ஆட்டமிழந்தார். இறுதிப் பந்தில் 7 ஓட்டங்கள் தேவைப்படபோதும், 4 ஓட்டங்களே பெறப்பட்டன.

துடுப்பாட்டத்தில் பஸ்னாகிர அணி சார்பாக கித்துருவன் விதானகே 30 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும், சச்சித்திர சேரசிங்க 27 பந்துகளில் 26 ஓட்டங்களையும், இசுரு உதான 16 பந்துகளில் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.




பந்துவீச்சில் கந்துரட்ட அணி சார்பாக ஷெஹான் ஜெயசூரிய, கௌஷல்ய லொக்குவாராய்ச்சி இருவரும் தலா 3 இலக்குகளையும், தம்மிக்க பிரசாத் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (ற)

# மகளிர் ஆஷஷ் ஆஸ்திரேலியா ஆதிக்கம்

மகளிர் ஆஷஷ் டெஸ்ட் தொடரின் முதல்நாள் முடிவில் ஆஸ்திரேலிய அணி ஆதிக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது. முதல்நாள் முடிவில் அவ்வணி 3 இலக்குகளை இழந்து 243 ஓட்டங்களைப் பெற்றது.

சேர் போல் கெற்றி மைதானத்தில் இடம்பெறும் இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.



அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி முதல் நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 243 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முதலாவது இலக்கை 17 ஓட்டங்களுக்கு இழந்த அவ்வணி, இரண்டாவது இலக்குக்காக 70 ஓட்டங்களையும், 3ஆவது இலக்குக்காக 80 ஓட்டங்களையும், 4 இலக்குக்காக பிரிக்கப்படாத 76 ஓட்டங்களையும் அணி பகிர்ந்தது.

துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக சாரா எலியட் ஆட்டமிழக்காமல் 95 ஓட்டங்களையும், ஜெஸ் கமரொன் 50 ஓட்டங்களையும், மென் லெனிங் 48 ஓட்டங்களையும், அலெக்ஸ் பிளக்வெல் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக அனியா ஷ்ரப்சோல், லாரா மார்ஷ் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

இந்த ஆட்டம் 4 நாள்கள் கொண்ட டெஸ்ட் போட்டியாக இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

# இந்திய அணியில் இடம்பெறுவேன்-பத்ரிநாத்

உள்ளூர் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி மீண்டும் தேசிய அணியில் இடம் பிடிப்பேன் என்று தமிழக வீரர் பத்ரிநாத் தெரிவித்தார்.

தமிழகத்தை சேர்ந்த கிரிக்கெட் வீரரான பத்ரிநாத் 2008ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரில் அறிமுகமானார். இவர் 2010ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிரான நாக்பூரில் நடந்த டெஸ்ட் ஆட்டத்தில் முதன் முதலில் களமிறங்கினார்.

32 வயதான இவர் இதுவரை, 2 டெஸ்ட் (63 ஓட்டங்கள்), 7 ஒருநாள் (79 ஓட்டங்கள்), ஒரே ஒரு சர்வதேச '20/20' (43 ஓட்டங்கள்) ஆட்டங்களில் விளையாடி உள்ளார்.

அத்துடன் ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் டோனி தலைமையிலான சென்னை அணியில் இடம் பெற்றுள்ளார். கடைசியாக 2011 ஆம் ஆண்டு நடந்த ஒரு நாள் ஆட்டத்தில் விளையாடிய இவர் தேசிய அணியில் இடம் கிடைக்காமல் தவித்து வருகிறார். இருப்பினும் இவர் ரஞ்சி கிண்ணம் உள்ளிட்ட உள்ளூர் தொடரில் சிறப்பாக விளையாடி வருகிறார்.

இது குறித்து பத்ரிநாத் கூறுகையில்,

''மீண்டும் இந்திய அணியில் இடம் பிடிக்க விரும்புகிறேன். இதற்காக தெரிவுக் குழுவினரிடம் கேட்கப் போவதில்லை. மாறாக, அடுத்து வரவுள்ள உள்ளூர் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, தெரிவுக் குழுவினரை என் மீது திசை திருப்ப செய்வேன்.

லட்சுமணின் ஓய்வுக்கு பின்னர் நியூசிலாந்துக்கெதிரான தொடருக்கு தெரிவு செய்யப்பட்டேன். ஆனால் ஒரு ஆட்டத்தில் கூட விளையாட வாய்ப்பு கிடைக்கவில்லை. அடுத்து நடந்த தொடரிலும் எனக்கு இடம் கிடைக்கவில்லை. அதன்பின் ஒரு முறை கூட இந்திய அணியில் இடம் பெறவில்லை. இதற்காக யார் மீதும் குறை கூற விரும்பவில்லை.

'20/20' ஆட்டத்தில் மட்டும் விளையாடுவது எனது இலக்கு அல்ல. டெஸ்ட், ஒருநாள் என்று அனைத்து விதமான ஆட்டங்களிலும் விளையாட விரும்புகிறேன். ஆட்டத்தை மாற்றிக் கொள்ளும் திறமை என்னிடம் உள்ளது.

அணியின் வெற்றியில் எனது பங்களிப்பு எவ்வளவு என்பதை மட்டுமே பார்ப்பேன். நான் ஒன்றும் சுரேஷ் ரெய்னாவோ, டோனியோ கிடையாது. இதுவரை குறைந்த எண்ணிக்கையில் சர்வதேச ஆட்டங்களில் பங்கேற்றுள்ளேன்.

ஆனால் நிறைய முதல் தர ஆட்டங்களில் விளையாடி உள்ளேன். இந்த அனுபவம், அனைத்து விதமான ஆட்டங்களிலும் சாதிக்க உதவும் என்றும் ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் சென்னை அணியை இக்கட்டான நிலையில் வெற்றி பெற செய்துள்ளேன்'' என்று தெரிவித்துள்ளார். (ற)

**2013 தரம்:5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான விசேட கையேடு பரபரப்பான விற்பனையில்**

வெற்றித்தேர்வு வெளியீட்டகத்தின் எதிர்பார்க்கை வினாக்கள் அடங்கிய விசேட கையேடு பரபரப்பாக விற்பனையாகின்றது

**பூபாலசிங்கம் புத்தகசாலை பஸ்நிலையம் அருகாமையில், யாழ்ப்பாணம்.**

**பஜாஜ் வாடிக்கையாளர்களுக்கான இலவச சேவை முகாம்**

பஜாஜ் முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் வாடிக்கையாளர்களுக்கான இலவச சேவை முகாம்

- தர நிலை பரிசோதனை
- வாயுப்பரிசோதனை (புகைப் பரிசோதனை)
- அசல் உதிரிப்பாகங்கள் மற்றும் M.R.F ரயர்கள் விசேட விலைக்கழிவு

இடம்: சுடர் மோட்டார்ஸ்- முள்ளியவளை, தண்ணீரூற்று

காலம்: 14.08.2013

நேரம்: 9.00AM-3.30PM

அனைத்து வாடிக்கையாளர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி பிறைவேற் லிமிற்டெட்**

**021 770 0600** (C/11140) (3.8.11)

**ரிக்கற் இலவசம், சாப்பாடு இருப்பிடம் இலவசம் 2 இலட்சம் சம்பளம்**

டென்மார்க்கில் படிக்க உழைக்க இன்னும் சில தினங்கள் மாத்திரம் இந்த வாய்ப்பு (38318) (16)

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

021 221 9016, 021 568 9090

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.